Koviloor Digital Library

பி.ஸ்ரீ.

ஆழ்வார்கள் வரலாறு

1

Acc. No } 26731
Q22

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஆழ்வார்கள் வரலாறு

(முதல் பாகம்)

பேயாழ்வார்,
பொய்கையாழ்வார்
பூதத்தாழ்வார்

பி.ஸ்ரீ

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26731

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
ப. எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004

Koviloor Digital Library

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு - 2002
இரண்டாம் பதிப்பு - 2010
மூன்றாம் பதிப்பு - 2013

© பதிப்பாளர்

விலை: ரூ. 75-00

Typesetting : Amaravathi & Co., Chennai
Printed at : Logha Offset Printers, Chennai - 14

Koviloor Digital Library

4-2

அணிந்துரை

நம் பாரத மணித்திருநாடு அரசியல் சுதந்தரம் அடைந்த பின்னர், அதன் விளைவாக வாழ்வின் பல துறைகளிலும் மறு மலர்ச்சியைக் காண்கிறோம். சிறப்பாகத் தமிழன்னை பழைய அணிகலன்களுக்குப் புதுமெருகிட்டும மாசு துடைத்தும் பழைய மணிகளைப் புதுக் கட்டடத்தில் பொருத்தியும் திகழ்வதன்றி, புதிய கோலத்திலும் ஒளி வீச நிற்கின்றார். அவள் அடியார்கள் இப்போது பல வகை இலக்கியங்களையும் அன்பு நெறி வழிபாட்டையும் தனித்தும், சேர்த்தும் வளர்க்கின்றார்கள். 'தமிழ்' என்னும் சொல்லுக்கே, 'இன்பம்' என்று பொருள் கூறுவர் பாவலர். இப் பொருள் உண்மையாகின்றது - பரமனிடம் காதலாகிக் கசிந்துருகிப் பெரியோர்கள் பாடின தமிழ் பாக்களிலே. இப்பாக்களை நாம் பலவாற்றானும், 'தூயதமிழ்' எனக் கொள்ளலாம். இத் திருமொழிகளைச் சொல்லும் நாவும், எண்ணும் உள்ளமும் தூய்மை பெறுமென்பது மெய்யுணர்வன்றோ? அந்தமில் ஆதியம பகவானின் அன்பிலே, 'ஆழ்ங்கால்' பட்ட ஆழ்வார்களும் நாயன்மார்களும் பரமன் அடிப்பாடிப் பெற்ற சன்மானம் நம்மதேயன்றோ? காலத்தைக் கடந்த அவர்களின் அருளிச் செயல்கள் எவ்வழியோருக்கும் எக்காலத்தும் உய்யும் வகையைத் தெள்ளிதில் காட்டும் ஆற்றல் வாய்ந்தவை. நாம் அவைகளைப் பரிவுடன் ஆய்ந்தால் மிகவும் ஆழ்ந்த கருத்துக்களையும், புதிய கருத்துக்களையுங்கூடக் காணலாம்.

Koviloor Digital Library

ஸ்ரீ அரவிந்தர் சொன்னார் :

'நாம் இன்னும் பழைய லட்சியங்களுக்கு ஏற்ப நம் நாட்டுப் பண்பை ஆய்ந்து அறியலாம். ஆனால், நாம் எண்ணும் வகையும் பேசும் முறையும் புது உணர்ச்சிகளாலும் எண்ணங்களாலும் காலத்தில் மாறுபட்டிருக்கின்றன என்பதை மறக்கக் கூடாது. பழைய ஒளியில் மட்டும் அன்றி, புதிய ஒளியிலும் நாம் உண்மையைக் காண்கிறோம். பழைய உண்மைகளைப் புதிய கோணங்களிலிருந்து வலியுறுத்தலாம். பழைய சொற்களுங்கூட நமக்குச் சற்றே நெகிழ்ந்து, மேலும் விரிந்து ஆழ்ந்த பொருளைத் தருதல் கூடும்.' இவ்வழிச் சென்று, அன்று போல் இன்றும் நாட்டில் மறுமலர்ச்சியை நிறைவுறச் செய்யலாம்.

இதை நன்கு உணர்ந்த நண்பர், 'பி. ஸ்ரீ.', ஆழ்வார்களையும் அவர்தம் அமுத மொழிகளையும் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதுக்கும் நன்கு அறிவிக்கும் சீரிய தொண்டை இந்த நூலிலே துவக்கியுள்ளார். ஆழ்ந்த கருத்துக்களைத் தெள்ளத் தெளிந்த நடையில் கற்றோரும் மற்றோரும் போற்றக் கூடிய வகையில் விளக்கியுள்ளார். ஆராய்ச்சித் திறனை மனத் துணிவுடனும் வலிமையுடனும் பயன்படுத்தி யுள்ளார். இக் காலத்தில் மக்களிடம் பொறுமை அதிகம் இல்லாமையைமனத்திற் கொண்டு, நூலின் எந்தப் பகுதியையும் தனித்தனியாக இஷ்டப்படி வாசிப் பதற்கு வாய்ப்பாகக் கட்டுரைகளை அமைத்துள்ளார். தொடர்ந்து படிப்பவர்கள் இதை உணர வேண்டும். அறிஞர்கள் அனைவரும் அன்பர் 'பி.ஸ்ரீ.'யின் இந்த உயரிய தொண்டினைப் பாராட்டி, அது முற்றுப் பெறும் வண்ணம் ஊக்கம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆர். ரங்காச்சாரி
சென்னை நீதி இலாகா உப-காரியதரிசி

Koviloor Digital Library

முன்னுரை

காதலர்கள் நந்தவனங்களில் சந்திப்பதும் உலாவுவதும் பொழுது போக்குவதும் எந்த நாட்டிலும் வழக்கந்தான். பக்திக் காதலர்களும் நந்தவனங்களைக் காதலித்தார்கள். தங்களைக் காதலிகளாகக் கருதிப் புருஷோத்தமனையே காதலனாகக் கொண்ட இவர்களும் நந்தவனத்திலே பூமணக்கும் நந்தவனத்திலோ, பாமணக்கும் நந்தவனத்திலோ - தங்கள் காதலனைச் சந்தித்தார்கள்.

பழைய பக்திக் காதலர்கள் பகவானுக்குப் பூமாலை கட்ட வேண்டுமென்று பயிர் செய்த அந்தப் பூந்தோட்டங்களெல்லாம் கால வெள்ளத்திலே மறைந்துவிட்டன. ஆனால் அவர்களில் கலையுள்ளம் வாய்ந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் வளர்த்து விட்ட கவிதையஞ் சோலை அங்கே மலர்ந்த மலர்களுடனும், அவர்கள் கட்டி வைத்த பாமாலைகளுடனும் அப்படியே இன்றும் அழகு குன்றாமல் இருக்கிறது.

இந்தக் கவிதைச் சோலையில் ஆழ்வார்களின் ஞானப் பூங்காவனம், எத்தனை நூற்றாண்டுகளாக, எத்தனை மக்களுக்கு ஆறுதலும் பேரின்பமும் அளித்து வந்திருக்கிறது! கவலைகளால் அலுத்துப் போகும் உள்ளங்களுக்கு இந்த நித்திய வசந்தமான சோலையில் இன்றும் சுகம் கிடைக்கிறது.

★ ★ ★

Koviloor Digital Library

'ஏன், எதற்காக அந்தப் பழைய நந்தவனம்? இந்தக் காய்கறித் தோட்டம் போதாதா? அந்தப் புல் வெளி எதற்கு? - மாடுகளுக்குத்தானே மேய்ச்சல் தரை தேவை.

'உல்லாசமாய்ப் பொழுது போக்க மைதானமும் வேண்டியதுதான்; சிங்காரத் தோட்டமும் வேண்டியது தான். ஆனால் இவற்றைப் பழைய நந்தவன மோஸ்தரில் அமைக்க வேண்டியதில்லையே என்று கருதும் காரியவாதிகளும் உண்டு.

இவர்களெல்லாம், 'பழைய மதக் கொள்கைகள் நமக்குத் தேவையில்லை. விஞ்ஞான அறிவே அறிவு; புது வாழ்வே சுக வாழ்வு. புதிய சீனர்களைப்போல், புதிய ரஷ்யர்களைப் போல் நாமும் தீவிரமாக - அதிதீவிரமாக - இன்றைய வாழ்க்கைப் போராட்டங் களில் ஈடுபட வேண்டியதுதான்' என்கிறார்கள். ஆனால் இதற்காகப் பழைமை தந்த மிகச் சிறந்த பரிசுகளையும் இழந்துவிட வேண்டுமா? கடவுள் நம்பிக்கையையும் உயர்ந்த லட்சியங்களையும் நமது பண்பாட்டின் உயிர்நிலைக் கொள்கைகளையும் மறந்துவிடுவது காரியமும் அன்று; வீரியமும் அன்று.

விஞ்ஞான நாகரிகம் இன்றியமையாததே. ஆனால் இது போதுமா? உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு உரிய வழிகளில் ஒன்றுதான் விஞ்ஞானம்; வேறு வழிகளும் உண்டு. அத்தகைய வழிகளில் சமய உணர்ச்சி அல்லது பக்தி உணர்ச்சியும் ஒன்று.

இந்த உலகம் கோன் இல்லாத மந்தை அன்று; பொய்கையார் கூறுவதுபோல் உலகத்தை ஆளும், 'பேராயன்' ஒருவன் உண்டு; அவன் நம் உள்ளத்திலும் இருப்பதால், மூச்சுக் காற்றைக் காட்டிலும், கைகால் முதலான அவயங்களைக்காட்டிலும் நம்மோடு நெருங்கிய தொடர்புடையவன். இத்தகைய உணர்வு விஞ்ஞான உணர்வு அன்று; ஆனால் இது

Koviloor Digital Library

அஞ்ஞானமும் அன்று. இதை, 'மெய்ஞ்ஞானம்' என்கிறார்கள், ஆஸ்திக அறிஞர்கள். இந்த மெய்ஞ்ஞான உணர்வால்தான் விஞ்ஞானத்தையும் சிறந்த நல்வழியில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஆழ்வார்கள் பக்தியையும் பண் சுமந்த கவிதையையும் கலந்து பயிராக்கிய அந்த நந்தவனத்தை நாம் இன்றும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். 'சோலை மலரொளியோ!' என்று வியக்கும்படி அங்கே திகழும் ஞான ஒளியும் நமக்குத் தேவைதான். இன்றும் தேவை; என்றும் தேவைதான்.

★ ★ ★

தற்கால இந்தியாவிலும் வசதியுள்ள ரஸிகர்கள் அழகான பூந்தோட்டங்களையும் பூங்காவனங்களையும் அமைத்து வருகிறார்கள். இலக்கியத் துறையிலும் பக்தித் துறையிலும்கூட நாம் புதிய புதிய சோலைகளை, பூந்தோட்டங்களை அமைத்துக் கொள்ளலாம்.

கவி ரவிந்திரநாதர் இயற்றிய, 'கீதாஞ்சலி' பக்தியும் கவிதையும் கலந்த ஒரு புதுமைப் பூஞ்சோலை. இங்கே பழமைக்கும் பழமையான உண்மைகளைக் காண்கிறோமல்லவா? பழைய நந்தவனமாகிய ஆழ்வாராதிகளின் பிரபந்தங்களிலே என்றும் புதுமையான உண்மைகளை அநுபவிக்கத்தான் அநுபவிக்கிறோம். உண்மை, பழமைக்கும் பழமைதான்; புதுமைக்கும் புதுமைதானே?

இப் புது நூலின் வாயிலாக முதலாழ்வார் மூவரையும் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். இந் நூலைத் தொடர்ந்து வரும் வேறு நூல்களின் வாயிலாகப் பிரபந்த நந்தவனத்திற்கு உள்ளே போய்ப் போய் வேறு ஆழ்வார்களையும் அறிமுகப்படுத்திக் கொண்டு, அவர்களுடைய வாழ்க்கையையும் கவிதையையும் உபதேசங்களையும் அறிந்துகொள்ள முயல்வோம்.

★

Koviloor Digital Library

பொருளடக்கம்

1.	தமிழகம் தந்த மறுமலர்ச்சி	...	9
2.	பூந்தோட்டமும் பொய்கையும்	...	19
3.	தூங்கா விளக்கு	...	28
4.	செவிவழிக் கதையும் கவிவழிச் செய்தியும்	...	34
5.	வாழ்க்கையும் உபதேசமும்	...	43
6.	புராணமும் புதை பொருளும்	...	50
7.	இவர் கண்ட கண்ணன்	...	65
8.	இவர் உகந்த ஸ்தலங்கள்	...	75
9.	இவர் காட்டும் சமரசம்	...	81
10.	பொய்கையாரின் பக்தி அநுபவங்கள்	...	90
11.	ஒரு கலங்கரை விளக்கு	...	96
12.	காதலே தவம்	...	102
13.	பெயரிலும் காட்சி; கதையிலும் காட்சி	...	112
14.	அருள் கலந்த அழகு	...	123
15.	பூதத்தாழ்வாரின் பக்தி அநுபவங்கள்	...	134
16.	மயிலைப் பேயார்	...	139
17.	மருந்து, பொருள், அமிர்தம்	...	145
18.	பேயாரும் பெயர்களும்	...	151
19.	கடலும் கடவுளும்	...	155
20.	வாழும் வகை	...	160
21.	திருமாலும் சமரசமும்	...	164

Koviloor Digital Library

1. தமிழகம் தந்த புதுமலர்ச்சி

தமிழ் நாட்டிலே தத்துவப் பேரறிவாளர்களான சங்கரர் ராமானுஜர் முதலானோர் வாழ்ந்து சித்தாந்தங்கள் செய்தார்கள் என்பது வரலாற்றுப் புகழ் பெற்ற செய்தி. வடநாட்டிலே ஸ்ரீகிருஷ்ண சைதன்யர், துளஸீதாஸர், மீராபாய் முதலான பக்த மணிகள் பக்திப் பிரசாரம் செய்து வந்ததும் சரித்திரப் பிரசித்தமான செய்திதான். இதனால் சிலர் தென் இந்தியா தத்துவ ஞானத்திற்குப் பேர் போனதென்றும், வட இந்தியா பக்திக்குப் பிரசித்தமானதென்றும் கருதுகிறார்கள்.

வட இந்தியாவிலே தோன்றிய வேதோபநிஷதக் கொள்கைகள் தென்னாட்டிலே துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம் என்ற சித்தாந்தங்களாக உருவாகி ஒழுங்கு செய்யப்பெற்றது உண்மைதான். இமயமலைப் பிரதேசம் அளித்த ஞானகங்கை தட்சிணத்திலும் புதுவெள்ளமாகப் பெருக்கெடுத்து வந்தது.

வட இந்தியாவிலே தோன்றிய இந்துமதம் தென் இந்தியாவில் புத்துயிர் பெற்று, வீழ்ச்சி நிலையிலிருந்த பௌத்த ஜைன சமயங்களை வென்று அவற்றின் சாரத்தைக் கவர்ந்துகொண்டது. இந்த விதமாக, இயற்கையானது உத்தராயனத்திலே மலர்ச்சி பெறுவதுபோல், தெற்கே மறு மலர்ச்சி பெற்ற இந்து மதத்தைத்தான் வடநாட்டுப் பக்த மணிகளும் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

பழைய சங்க காலத்தை ஆராய்ந்து பார்த்தால், அக்காலத்துத் தமிழர்களுக்கு வேதாந்த உணர்ச்சியாவது சித்தாந்த உணர்ச்சியாவது குறிப்பிடத்தக்க அளவில்

Koviloor Digital Library

இல்லையென்றே சொல்லி விடலாம். தத்துவ ஞானத்தைக் காட்டிலும் உலகியல் அறிவிற்குப் பேர்போனவர்கள் பண்டைத் தமிழர்கள். அவர்களுடைய வாழ்க்கையை மலரச் செய்தவை வேத - வேதாங்க - வேதாந்தங்கள் அல்ல; சைவ வைணவ சித்தாந்தங்கள் அல்ல; ஜைன பௌத்தக் கொள்கைகளும் அல்ல; போரும் காதலுந்தான்! விவசாயம், வாணிபம், கைத்தொழில் முதலான சமாதான உலகியற் 'கலை'களிலும் வல்லவர்கள் அவர்கள். அத்தகைய தமிழர்கள் வடநாட்டாருடன் கலந்த பின்பு தென்னாட்டிலே சித்தாந்தங்கள் தோன்றின; வாழ்க்கையைச் சமயம் வசீகரித்தது.

பல்லவரது ஆட்சிக் காலத்தில் ஒரு கூட்டு நாகரிகம் இந்நாட்டிலே உருவாகி வந்தது. அதன் பயனாகத் தோன்றிய வர்களே இந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்த சங்கரர், ராமானுஜர் முதலானவர்கள்.

இந்த ஆசாரியர்களுக்கும் முன்னமே வாழ்ந்தவர்கள் பக்தமணிகளான நாயன்மார்களும் ஆழ்வார்களும். இந்தத் தென்னாட்டுப் பக்தர்களே வடநாட்டுப் பக்தர்களுக்கும் வழிகாட்டிகள் என்று சொல்லவேண்டும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டைப் பெரும் பக்தி யுகத்தின் தொடக்கமென்று கூறலாம். இதற்கு ஏழு நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் - பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் - ராமானந்தர் என்ற பெரியார் தென்னாட்டிலிருந்து வடநாட்டுக்குப் போய் வைணவப் பிரசாரஞ் செய்தார். அந்தப் பிரசாரத்தின் பயனாகத் தோன்றியது வடநாட்டுப் பக்தி - இயக்கம்.

தமிழ்நாட்டிலே நாயன்மார்கள் சிவபக்தியையும் ஆழ்வார்கள் விஷ்ணுபக்தியையும் பரப்பி வந்தார்கள். ஆனால் அந்தப் பிரசாரம் அந்நாளில் ஆந்திர தேசத்திற்கப்பால் பரவியதாகத் தெரியவில்லை. திருமங்கையாழ்வார் வட

Koviloor Digital Library

நாட்டில் யாத்திரை செய்தாரென்று தெரிகிறது. ஆனால் அவர் அந்தப் பிரதேசங்களில் சமயப் பிரசாரம் செய்தார் என்று சொல்வதற்கில்லை.

கி.பி. எட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரர் தமது அத்வைத வேதாந்தத்தை வட இந்தியாவிலும் நிலை நிறுத்தினார். அவர் ஞானியாகவும் பக்தராகவும் ஒருங்கே திகழ்ந்தார் என்று பலரும் கருதுகிறார்கள்.

கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டிலேதான் தமிழ் நாட்டின் பக்திக் கொள்கைகள் ராமானுஜர் மூலமாக வடநாட்டுப் பண்டிதர்களுக்கும் ஒருவாறு தெரிந்தன. அவை உடனே பரவவில்லை. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த ஸ்ரீ வேதாந்த தேசிகரால் திருவாய்மொழியின் சாரமும் தாத்பரியமும் வடமொழியாக்கம் பெற்றன. எனினும், ராமானந்தரால்தான் பக்தி - இயக்கம் வட இந்தியாவிலே பரவத் தொடங்கியது.

ராமானந்தர் ராமானுஜரின் ஞான பரம்பரையைச் சேர்ந்தவர் என்று அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். கி.பி. பதினான்காவது நூற்றாண்டில் ஸ்ரீரங்கத்திலே வைணவப் பிரசாரம் செய்து கொண்டிருந்த மணவாள மாமுனிகளின் பிரதான சீடர்களில் ஒருவரான முதலாவது வானமாமலைச் சீயருக்குச் சீடராக இருந்தார் ராமானந்தர் என்பதற்கு ஆதாரம் இருப்பதாய் அந்த மடத்துச் சீயர்களில் பிரசித்தி பெற்றிருந்த சின்னக்கலியன் சுவாமிகள் என்னிடம் நேரில் சொன்னதுண்டு.

ராமான்ந்தர் வடநாட்டுக் கிராமவாசிகள் பேசிய அந்தக் காலத்து ஹிந்தியைக் கற்றுக்கொண்டு, அந்த மொழியில் உபதேசங்கள் செய்தார். பல சாதியினரையும் வேற்றுமை யில்லாமல் பாகவத குலமாக்கிக் கொண்டார்.

Koviloor Digital Library

இவரது சீடர்களில் 'தாழ்ந்த வகுப்பினர்' என்று கருதப் பட்டவர் களுமுண்டு; இந்துக்களோடு முஸ்லிம்களுமுண்டு.

இவர் ஆண்டவன் அருளைச் சிறப்பாக வற்புறுத்திய தால், அந்த அருட்பெரு நெறியிலே 'ஜாதிய ஸமரஸ'த்திற்கும், இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குங்கூட வழியிருக்கிறதென்று கண்டுபிடித்தார். இந்தியாவில் சமயப் பிரசாரம் செய்த மகா மேதாவிகளில் ராமானந்தரும் ஒருவர் என்பது காலஞ்சென்ற தீனபந்து ஸி.எப். ஆண்ட்ரூஸின் கருத்து.

ராமானந்தரின் ஞான பரம்பரையிலே வந்த வடநாட்டுப் பெரியோர்களும் ஆழ்வார்களின் பாசுரங்களைப்போல் பாமர ஜனங்களும் உணர்ந்து உருகக்கூடிய, எளிய நடையிலே அமைந்த, பக்திமயமான இசைப் பாடல்களைப் பாடினார்கள். அந்த ஆத்ம கீதங்களில் பக்திவளமே முக்கியமென்றாலும், ஆழ்வார்களின் இயக்கம் தென்னாட்டுக் கலைச் செல்வத்தை யும் பேணி வளர்த்ததுபோல் அந்த வடநாட்டுப் பக்தி - இயக்கமும் அங்கே கலை வளத்தையும் அபிவிருத்தி செய்தது. ராமானந்தருடைய இயக்கத்திலிருந்து தோன்றியவர்களே கபீர்தாஸர், குருநானக், கிருஷ்ண சைதன்யர், மீராபாய், துளஸீதாஸர் முதலானவர்கள்.

ராமானந்தரின் முக்கியமான சீடர் கபீர்தாஸர் என்று சொல்வதுண்டு. இவர் தம்மை, 'அல்லாவுக்கும் இராமனுக்கும் குழந்தை' என்று பாடியிருக்கிறார். ராமானந்தரின் 'அருள் - நெறி'யிலே சென்று இவர் இந்து-முஸ்லிம்களை ஒன்றுசேர்க்க முயன்றார்.

இவர் பாடல்கள் வடஇந்தியாவில் பிரபல மாயிருக் கின்றன. இந்தப் பாடல்களில் நூறு, கவி ரவீந்திரநாதரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் பிரசித்தமாகி விட்டன.

Koviloor Digital Library

ராமானந்தர் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், கபீர்தாஸர் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் காலஞ்சென்றதாக ஆராய்ச்சி அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கபீர் தாஸரின் சீடர்களில் ஒருவர் சீக்கிய மதம் நிறுவிய குருநானக் என்பவர். இவர் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். எனவே, இவரையும் ராமானந்த பரம்பரையைச் சார்ந்தவர் என்று கருதலாம்.

ராமானந்தரின் சீடர்களில் சாது ரவிதாஸரும் ஒருவர். இவர் தோல் பதனிடும் 'தீண்டாத' வகுப்பைச் சேர்ந்தவர். இவருடைய சிஷ்யைதான் பேர்பெற்ற சித்தூர் ராணியான மீராபாய். இவளே வட இந்தியாவின் 'ஆண்டாள்.'

மீராபாய்க்குப் பிந்தியவர் துளஸீதாஸர் என்கிறார்கள். இவரது ராமாயணம் ஹிந்தி மொழிக்கு அழியா அழகும் உயிரும் அளித்திருக்கிறது.

இவர் காலத்திலேதான் குமரகுருபரர் என்ற சிவநேசர்-தமிழகத்தின் தெற்குக் கோடியிலுள்ள திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவர் - ஹந்துஸ்தானியை நன்றாகக் கற்றுக்கொண்டு வட இந்தியாவில் சைவப் பிரசாரம் செய்துவந்தார். இவர் தமது காசிமடத்தில் ஹிந்து மொழியிலே கம்பராமாயணச் சொற்பொழிவு செய்வதுண்டென்றும், அக்காலத்தில் துளஸீதாஸரும் அந்தப் பேருரைகளை வந்து கேட்பதுண்டென்றும், அதனால் துளஸீ ராமாயணத்திலுள்ள சில கருத்துக்கள் கம்பரின் கருத்துக்களை ஒத்திருக்கின்றன என்றும் சொல்லுகிறார்கள்.

இது எப்படியிருந்த போதிலும், தமிழ்நாட்டின் ஞானபக்தி வடஇந்தியாவிலும் விநியோகப்பட்டுச் சிற்சில

Koviloor Digital Library

வேறுபாடுகளுடன் பரவியிருக்கிறது என்பது உறுதி. வடஇந்தியா வேதோபநிஷதங்கள், பகவத் கீதை போன்ற ஞானநூல்களை அளித்து நமது நாகரிகத்திற்கும் சன்மார்க்கத்திற் கும் அடிப்படையான சமயக் கோட்பாடுகளை உதவிய தென்றால், அத்தகைய இந்து தர்மத்திற்குச் சங்கரர் ராமானுஜர் ஆகியோரின் பேருரைகளுடன் ஆழ்வார் - நாயன்மார்களின் அமுதொழுகுகின்ற தமிழ்ப் பாசுரங்களை அளித்து ஞான பக்திவாயிலாகப் புத்துயிரளித்தது நம் தமிழகம்தான்.

★ ★ ★ ★

தமிழ்நாடு அமைப்பில் ஏறக்குறைய ஒரு வயிர மணியின் வடிவத்தை நினைவூட்டுகிறது. இம் மணியின் நான்கு முனைகள் சென்னை, கோவை, திருநெல்வேலி, நாகப்பட்டினம் ஆகிய நகரங்கள்.

இப்போது சென்னை மாநகரம் என்று அழைக்கப்படும் நிலப்பகுதியும், இதைச் சார்ந்த வேறு இடங்களும் இன்றும் தொண்டை மண்டலம் என்று சொல்லப்படுகின்றன. இம் மண்டலத்திற்கு வட எல்லை திருமலை என்ற திருவேங்கடம்; தென் எல்லை பெண்ணையாறு - ‘வெண்ணெய் உருகுமுன் பெண்ணை பெருகும்’ என்கிறார்களே, அந்தப் பெண்ணை தான்.

அந்நாளில் தொண்டை மண்டலத்தின் முக்கிய நகரம் காஞ்சிபுரம். இது பல்லவ சக்கரவர்த்திகளின் தலைநகரமாகப் பிரசித்தி பெற்றிருந்தது. இந்தியாவின் மிகப் புனிதமான பழம் பெரும்பதிகள் ஏழில் ‘கச்சி’ என்ற காஞ்சிபுரமும் ஒன்று. ‘முத்திதரும் நகர் ஏழில் முக்கியமாம் கச்சி’ என்பது ஸ்ரீ வேதாந்த தேசிகரின் திருவாக்கு. காஞ்சி இன்று வைணவர் களுக்கும் சைவர்களுக்கும் ஒருங்கே பிரசித்தமான புனித

Koviloor Digital Library

நகராயிருப்பதுபோல், ஒரு காலத்தில் ஜைன பௌத்தர்களுக்கும் ஒரு புனிதப் பெருநகராயிருந்தது.

பல்லவ மன்னர்கள் கட்டிய கோவில்களே தென்னிந்தியத் திருக்கோயில்களில் மிகப் பழைமையானவை. அவர்களுடைய தலைநகரமான காஞ்சியை இன்றும் 'கோயில்களின் நகரம்' என்று சொல்வதுண்டு. 'கல்லுயர்ந்த நெடு மதிள் சூழ் கச்சி', பூம்பொழில் சூழ் கச்சிநகர்' என்றெல்லாம் வைணவர்கள் இக்கோயில்நகரைப் போற்றியிருக்கிறார்கள்.

இவ்வூர் கோயில்களில் மிகவும் பழைமையானவற்றுள் ஒன்று திருவெஃகா. இங்கே கோயில் கொண்டிருக்கும் பெருமாளைச் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' (யதோத்காரி) என்று கூறுவதுண்டு. இக் கோயிலைச் சார்ந்த தாமரைப் பொய்கையில் முதலாழ்வார்களிலும் முதலாழ்வாரான பொய்கையாழ்வார் அவதரித்தார் என்பர்.

ஸ்ரீ வைஷ்ணவர்களின் 'ஆதிகவி' என்று இந்த ஆழ்வாரைச் சிறப்பித்துப் பேசுவதுண்டு. எனவே, பல்வேறு சமயங்களுக்கும் வளர்ப்புப் பண்ணையாக உதவித் தமிழ் நாகரிகத்தைக் கோயில் நாகரிகமாக வளர்த்துவிட்ட கோயில் நகரமே ஸ்ரீ வைஷ்ணவத்திற்கும் தாயகம் எனலாம்.

பொய்கையாழ்வார் ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் தோன்றினார் என்றும், அடுத்த நாளான அவிட்ட நட்சத்திரத்தில் பூதத்தாழ்வாரும், அதற்கு அடுத்த நாளான சதய நட்சத்திரத்தில் பேயாழ்வாரும் தோன்றினர் என்றும் கூறுவர். பூதத்தாழ்வார், 'முத்துக்கள் சேரும் கடல்மல்லை'யென்று வருணிக்கப் பெறும் மாமல்லபுரத்தில் தோன்றினார். பல்லவர்களின் தலைநகரம் காஞ்சி யென்றால்,

Koviloor Digital Library

மாமமல்லபுரம் அம்மன்னர்களின் முக்கியமான துறைமுகப் பட்டினமாகும். அந்த நாளில் இவ்வூரின் இயற்பெயர் மல்லை.

முதலாழ்வார்களுக்குப் பின் தோன்றிய திரு மங்கையாழ்வார் தாம் நேரில் பார்த்த மல்லைமா நகரத்தைப் பின்வருமாறு வருணிக்கின்றார்:

புலங்கொள்நிதிக் குவையோடு,
புழைக்கைம்மா களிற்றினமும்,

நலங்கொள்நவ மணிக்குவையும்,
சுமந்தெங்கும் நான்றொசிந்து

கலங்கள் இயங் கும்மல்லைக்
கடல்மல்லை.

[புலம் கொள் -இந்திரியங்களைக் கவர்ந்து கொள்ளும். நிதிக் குவை - பொற்குவியல். புழைக்கைம்மா களிற்றினம் - துளையோடு கூடிய தும்பிக்கையுடைய யானைகள். நான்று ஒசிந்து - தாழ்ந்து ஒடிந்து. கலம் - மலக்கலம். மல்லைக் கடல் மல்லை - வளமுள்ள கடற்கரையிலுள்ள மல்லை நகரம்.]

இந்தத் துறைமுகத்திலே கப்பல்கள் பொற் குவியல் களை ஒருபுறம் இறக்குமதி செய்கின்றன; ஒருபுறம் நவரத்தினக் குவியல்களை இறக்குகின்றன; இடையே யானைகளும் இறங்குகின்றன. 'இச்சரக்குகளின் கனத்தாலே அங்கே தாழ்ந்து போயிற்று; இங்கே ஒடிந்து போயிற்று' என்று மரக்கலங்களை அங்குமிங்கும் பழுதுபார்த்த வண்ண மாயிருக்கிறார்கள்.

இத் துறைமுகப்பட்டினத்தைப் புதுப்பித்துச் சிறப்பாக அழகு படுத்தியவன் மகாமல்லன் என்ற பட்டப்பெயர் வாய்ந்த முதல் நரசிம்ம பல்லவன். இவன் கி.பி. ஏழாம்

Koviloor Digital Library

நூற்றாண்டில் ஆட்சி செய்தவன். இவனுடைய பாட்டன் முதலான அரசர்களும் விஷ்ணுபக்தர்கள்.

பூதத்தாழ்வார் தாம் தோன்றிய மாமல்லபுரத்தைத் **'தமர் உள்ளும் மாமல்லை'** - பக்தர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் மல்லை நகரம் - என்று குறிப்பிடுகிறார். தமது காலத்திலிருந்த அரசர்கள் விஷ்ணுபக்தியில் சிறந்திருந்ததாக இந்த ஆழ்வார் குறிப்பிடுவதும் கூர்ந்து நோக்கத் தக்கது.

பல்லவ ராஜதானியாக இருந்த காஞ்சிக்கும் துறை முகமாயிருந்த மாமல்லபுரத்திற்கும் கலைத் தொடர்பு இருந்தது. அப்படியே 'திருக்கச்சிமா நகரம் செழிக்க வந்தோன்' என்று வைணவர் போற்றும் பொய்கையாழ் வாருக்கும், 'நல்ல திருக்கடல் மல்லை நாதனார்' என்று போற்றப்பெறும் பூதத்தாழ்வாருக்கும் நெருங்கிய கலைத் தொடர்பு உண்டு. பொய்கையாழ்வாரின் கொள்கை களும் பாசுரங்களும், பூதத்தாழ்வாரின் கொள்கை களுக்கும் பாசுரங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்திருக்க வேண்டும்.

இந்த இரண்டு ஆழ்வார்களின் பக்தி அநுபவங்களுக்கும் ஸாராம்சத்தில் வேற்றுமையில்லை. எனினும், பொய்கை யாருடைய ஞானபக்தியில் ஞானம் அதிகமென்றும், பூதத்தாரின் ஞானபக்தியில் பக்தி அதிகமென்றும் கூறுவதுண்டு.

போதமிகும் பொய்கையார்,
பூதத்தார் வாழியே!

- அதாவது, ஞானமும் பக்தியும் ஒருங்கே வாழவேண்டும் என்று இந்த இரண்டு பக்தர்களையும் ஒருங்கே வாழ்த்துகிறார்கள் வைணவர்கள். இந்த இருவரையும் ஒரு ஜைன ஆசிரியர், 'முக்காலமும் உணர்ந்த இருடிகள்' என்று பாராட்டியுள்ளார்.

Koviloor Digital Library

முதலாழ்வார்களில் மூன்றாமவரான **பேயாழ்வார்** வைராக்கியத்திற்குப் பேர்போனவர். இவர், 'தேனமர்சோலை மாடமா மயிலை' என்று பிரசித்தி பெற்றிருந்த திருமயிலை யென்ற மயிலாப்பூரில் தோன்றியவர்.

மாமல்லபுரம் மயிலாப்பூருக்குத் தெற்கிலும், காஞ்சி தென்மேற்கிலும் இருக்கின்றன. இந்த மூன்று ஊர்களும், அக்காலத் தமிழ் நாகரிகத்திற்கும் ஸ்ரீ வைஷ்ணவம் என்ற பக்தி மதத்திற்கும் ஒளியும் அழகும் தந்த மும்மணிகள். இவ்வூர்களில் தோன்றிய ஞான பக்தி வைராக்கியங்களின் வடிவமாகிய முதலாழ்வார்கள் ஸ்ரீவைஷ்ணவத்தை ஆதியில் உருவாக்கிய பாகவத மும்மணிகளாவர்.

இவர்கள் வாயிலாகத் தமிழகம் தந்திருக்கும் புது மலர்ச்சி, வேத வேதாந்த சாரமான சிந்தனைகளைக் காலத்தின் தேவைக்குத் தக்கவாறு கலையாக்கிக் கவிதையாக்கிப் பக்திமதமாக்கிப் பலருக்கும் வழங்கியிருக்கிறது எனலாம்.

★

Koviloor Digital Library

2. பூந்தோட்டமும் பொய்கையும்

ஒரு பூந்தோட்டத்தில் சில நண்பர்களுடனே பொழுது போக்கிக்கொண்டிருந்தேன். அந்த நண்பர்களில் தோட்டத்தின் சொந்தக்காரரும் ஒருவர். அவர் விஞ்ஞான ரீதியாகத் தோட்டப் பயிற்சி பெற்றவர்; மண்ணின் தன்மை, தட்பவெப்ப நிலை முதலான விவரங்களோடு, செடிகொடி களின் நோய்கள், பரிகாரங்கள் முதலான விவ்காரங்களும் தெரிந்தவர். இத்தகைய பயிற்சியோடு தோட்டக் கலையை யும், இந்தக் கலையின் ஆழ்ந்த சில தத்துவங்களையும்கூட அறிந்திருந்தார்.

அவர் அங்கங்கே பூத்திருந்த பலவகையான மலர்களையும் எங்களுக்குக் காட்டி வரும்போது, நிற வேற்றுமைகளோடு கூடிய சில கனகாம்பர மலர்களைச் சுட்டிக்காட்டினார். காட்டி, 'என்ன அதிசய சிருஷ்டி! வாசனையில்லாவிட்டாலும் என்ன அழகு! ஆஹா, கனகாம்பரம் என்ற வசீகரமான பெயருக்குப் பொருத்தமாகிய இந்த வசீகரமான பொன்னிறத்தைத்தான் பாருங்கள்! என்ன புதிய சிருஷ்டி!' என்று சொன்னார்.

'அதிசய சிருஷ்டி' என்று ஆரம்பித்தார், 'புதிய சிருஷ்டி' என்று முடித்ததும், எங்களுடன் இருந்த ஆஸ்திக நண்பர் மலர விழித்த கண்களுடன், 'கனகாம்பரம் கடவுளுடைய புதிய சிருஷ்டிதானா? ஆழ்வார் - ஆசாரியர் காலத்திலே கிடையாதா?' என்று கேட்டார்.

உடனே எங்கள் கூட்டத்திலிருந்த விஞ்ஞான நண்பர், 'என்ன அஞ்ஞானம்!' என்று சிரித்துக் கொண்டே, 'பகவானுடைய சிருஷ்டி இல்லை இது; மனித சிருஷ்டிதான்! சுவாமிகாள்! இந்த அதிசயப் பொன்னிற மலர் மனிதனுடைய

Koviloor Digital Library

புதிய சிருஷ்டி என்றுதான் தோட்டக்கலைஞர் சொல்ல வந்தார். பகவானைக் கண்ட ஆழ்வார்கள்கூடக் கனகாம் பரத்தைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஏன் காணும், உம்முடைய பாட்டனாருக்கே தெரியாதே; ஒரு தலைமுறைக்கு முன் நமது நாட்டில் தெரியவே தெரியாதே!' என்று பதில் சொன்னார்.

நாஸ்திக நண்பரும், 'வெள்ளை மனிதனுடைய விநோத சிருஷ்டிதான் இந்தப் பொன்னிறப் பூ; ஆழ்வார்களுடைய சிருஷ்டியல்ல!' என்று சிரித்தார்.

'ஓஹோ, கனகாம்பரம் 'சுதேசி'யில்லையா? அன்னியர் களோடு இறக்குமதியான 'விதேசி'தானா?' என்று வருந்தினார் அரசியல் நண்பர்.

'அதுதான் பூசைக்கு எடுக்கவில்லை! அரளிப் பூவைக்கூடப் பகவான் அங்கீகரித்திருக்கிறாரே' என்று ஆறுதலடைந்தார் ஆஸ்திக நண்பர்.

'சுதேசிகளான ஆழ்வார்களால் கனகாம்பரம்போல் ஒரு சிருஷ்டி செய்ய முடியுமா? மூட நம்பிக்கைகளைத்தானே படைக்க முடிந்தது?' என்று மறுபடியும் சிரித்தார் நாஸ்திக நண்பர்.

அதற்கு நான், 'ஆழ்வார்களும் அதிசயமாகப் புதிய சிருஷ்டி செய்திருக்கிறார்கள். எத்தனையோ கனகாம்பரங்கள், ரோஜாக்கள், செந்தாமரைப் பூக்கள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன! பாமணக்கும் கவிதை விதவித மலர்களாய் நம் அகக் கண்முன் மலர்கின்றது! அவர்கள் ஒரு கவிதையஞ் சோலையைப் படைத்து விட்டிருக்கிறார்களே! அழியாத அபூர்வ அழகு வாய்ததல்லவா பிரபந்த நந்தவனம்?' என்றேன்.

தோட்டக் கலைஞர் அரசியல் நண்பரை நோக்கி, 'ஐயா, கனகாம்பரம் 'விதேசி'தான். ஆனால் கிடைத்ததைக் கொத்திக் கொண்டு பறந்துபோகும் அந்த 'விதேசி'யில்லை! நமது

Koviloor Digital Library

பூந்தோட்டங்களில் கனகாம்பரம் குடியேறிவிட்டது; இதனால் நமக்கு நஷ்டமொன்றும் வந்துவிடவில்லையே; நமது புஷ்பச் செல்வம் அதிகரித்துத்தானே இருக்கிறது?' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினார்.

விஞ்ஞான நண்பர், 'அண்மையில் வந்தேறியாகச் சேர்ந்த கனகாம்பரம், உண்மையில் கனகாம்பரமாக வந்து சேரவில்லை!' என்றார்.

'அதென்ன, புதிர் போடுகிறீர்களே?' என்று ஆஸ்திக நண்பர் கேட்கத் தோட்டக் கலைஞர் சொன்னார்: 'மங்களமான மஞ்சள் நிறத்தோடுதான் வந்தது கனகாம்பரம்; இன்று பொன்னிறக் கனகாம்பரமாகவும், வேறு வர்ண ஜாலங்களோடு கூடிய கனகாம்பரமாகவும் நமது பூந்தோட்டத்தைப் பொலியச் செய்கிறது; நாகரிக நங்கைமார் கூந்தலையும் அணி செய்கிறது. இப்படியே புதிய சிருஷ்டிகளான வேறு அழகிய பூக்களும் உண்டு. இந்தத் தோட்டத்திலே இன்னும் சிலவற்றைக் காட்டுகிறேன். வாருங்கள்.'

நாங்கள் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தோம். விஞ்ஞான நண்பர் ஆஸ்திக நண்பரை நோக்கி, 'இந்தப் பூவை உங்கள் ஆழ்வார்கள் பார்த்திருக்கமாட்டார்கள்; சூடிக் கொடுத்த சுடர்க்கொடியும் தன் காதலனுக்குச் சூடிக் கொடுத்திருக்க மாட்டாளே! அந்தக் கனியை அவர்கள் ருசி பார்த்திருக்கவே மாட்டார்கள்! கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்த இந்த நிறங்களைத்தான் பாருங்கள்; இவையெல்லாம் விஞ்ஞானம் விளைத்த அற்புதங்கள்!' என்று மார்தட்டினார்.

'ஆம்; இன்று நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கும் அற்புதங்கள் இவை; ஆழ்வார்கள் விளைத்த அற்புதங்களைப் போல் கற்பனைகள் அல்ல!' என்று நையாண்டி பண்ணினார் நாஸ்திக நண்பர்.

Koviloor Digital Library

நான் சொன்னேன்: 'ஆழ்வார்கள் சமய ஞானத்தால், பக்திக் காதலால், கடவுள் நம்பிக்கையால் விளைத்த சிருஷ்டிகளும் அற்புதங்களும் பொய்யல்ல. புதிய புதிய நிறங்களோடு கூடிய மலர்களை உண்டு பண்ணக்கூடியதுதான் சிருஷ்டியா? புளிப்பான பழங்களை ஒட்டு வித்தை செய்து இனிப்பாக்குவது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையானவை ஆழ்வார்கள் நம் மக்களின் வாழ்விலே பக்திச் சுவை ஊட்டிய அற்புதமும்! தயாமூல தர்மத்தை (அஹிம்ஸாதர்மத்தை) ஒட்ட வைத்துத் தமிழர் வாழ்வை ஒரு புது வாழ்வாக மலரச் செய்தார்களே, அத்தகைய சிருஷ்டிதான் சாமானியமா?'

'ஆனால் தோட்ட நிபுணர்கள் கையாளும் ஒட்டு முறை முதலியவற்றில் இயற்கைச் சட்டத்தை மீறிய அற்புதம் ஒன்றும் நிகழவில்லையே' என்றார் விஞ்ஞான நண்பர்.

'அப்படியேதான் ஆழ்வார்களின் பக்தி - அநுபவங்களும் சிருஷ்டிகளும்!' என்றேன் நான். 'அவையும் இயற்கைச் சட்டங்களை மீறின அற்புதங்கள் அல்ல; நுட்பமான இயற்கை விதிகளை அநுசரித்தவையே' என்று தொடர்ந்துரைத்தேன்.

'அதெப்படி?' என்று விஞ்ஞான நண்பர் அலட்சியமாய்க் கேட்டார். நாஸ்திக நண்பரோ, 'ஆழ்வார்களாவது, சிருஷ்டியாவது? சுத்தப் பொய்' என்று சொல்லி அந்தத் தமிழும் போதாதென்று, 'சுத்த ஹம்பக்' என்று தம் ஆத்திரத்தைக் கொட்டிவிட்டார்.

ஆஸ்திக நண்பரும் ஆத்திரமாகவே, 'அதெப்படிச் சொல்லலாம்? ஆழ்வார்களையும் இயற்கைச் சட்டம் கட்டுப்படுத்துமா? அதிமானுஷ புருஷர்களல்லவா?' என்று கூச்சலிட்டார்.

நாங்கள் பூமரக் கூட்டங்களுக்கிடையே வந்தோம். 'அதோ சரக்கொன்றை - சிவபெருமானுக்கு இயற்கையன்னை மாலையிடுவதுபோல் இருக்கிறதே! இதோ

Koviloor Digital Library

கடம்ப மலர் - முருகக் கடவுள் சதங்கை குலுங்க ஓடிவந்து அணிய விரும்பும் பூ!

'அதோ நாகத்தின் படத்திற்குக் கீழே சிவலிங்கம் வீற்றிருப்பதுபோல நாகலிங்கப் பூ. இதோ பவள மல்லிகை, பாதிரி, பாரிஜாதம். அதோ மந்தாரை, செண்பகம்; நம்மாழ்வாரும் நாடி வந்து உகந்தணிந்து கொண்ட மகிழம் பூ. ஆஹா என்ன கண்விருந்து!'

இப்படியெல்லாம் காட்டிக் கொண்டே வந்தார் தோட்டக் கலைஞர். 'பூசைக்கு ஏற்ற பூக்கள்!' என்று குதூகலப் பட்டார் ஆஸ்திக நண்பர்.

எங்களுடன் இருந்த ரஸிகமணி ஒருவர் - அதுவரை மௌனமாயிருந்தவர் - 'நம்முடைய ஆத்மாவிலே விழித்திருக்கும் அதே சக்திதான், இந்தப் பூக்களில் இப்படியெல்லாம் ஏதேதோ கனவு காண்கிறது!' என்றார். 'அது ஒன்றும் நமக்குப் புரியாது' என்று ஒரே குரலில் ஒத்துப் போனார்கள் ஆஸ்திக அன்பரும் நாஸ்திக நண்பரும்.

'ஆம், அந்த விதமாகத்தான் **டீன் இன்ஜ்** என்ற ஐரோப்பியப் பேரறிஞர்கூடச் சொல்லியிருக்கிறார். கல்லிலே கண்வளரும் சக்தி பூவிலே கனவு கண்டு நமது ஆத்மாவிலே கண் விழித்துக் கொள்கிறதாம். ஆனால் இது விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட செய்தி' என்றார் விஞ்ஞான நண்பர்.

'எனினும் அநுபவம் அநுபவம்தான்; உண்மை உண்மைதான்' என்றேன் நான். 'டீன் இன்ஜ் முதலான உலகப் பேரறிஞர்கள் உணர்த்தும் உண்மைகளை ஒட்டியவைதாம் ஆழ்வார்களின் பக்தி அநுபவங்களும். விதவிதமான பூக்களில் விந்தை விந்தையான கனவுகள் காணும் சக்தியே தங்கள் இதய மலரில் கோயில் கொண்டிருக்கிறது என்பதை ஆழ்வார்கள் பக்திக் கண்ணால் கண்டுகொண்டார்கள். 'கண்டோம், கண்டோம்!' என்று அந்தக் குதூகலத்தைப் புதிய புதிய

Koviloor Digital Library

சிருஷ்டிகளான பாடல்களாக்கி நமக்கும் காட்ட முயல்கிறார்கள். அத்தகைய பக்தி அநுபவங்களும் காரண காரிய முறைப்படியே இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்ட விளைவே!' என்று கூறி முடித்தேன்.

கொடி வீசிக்கிடந்த மல்லிகை முல்லை முதலான பூக்களையும், சூரியகாந்தி செவ்வந்தி நந்தியாவட்டை முதலான பூக்களையும் பார்த்தோம். இடையிடையே பெஸண்ட், மீராபென், ஆண்ட்ரூஸ், ஜி. யூ. போப், கஸின்ஸ், கால்டுவெல் பாதிரியார் முதலானவர்களைப் போல் 'சுதேசி'களோடு கலந்துநின்ற 'விதேசி' மலர்களையும், அழகு பூத்த இலைச் செடிகளையும் பார்த்தோம்.

அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே, நாங்கள் நெளிந்து ஓடிய நீரோடைகளையும் மேலே விசிறி அடிக்கும் நீரூற்றுக்களையும் தாண்டி, நல்லறிஞர் மெய்யன்பர் உள்ளம் போல் தெளிந்திருந்த ஒரு தாமரைக் குளத்திற்கு வந்து சேர்ந்தோம்.

இயற்கையாக உண்டான ஒரு நீர்நிலைபோல் ஒரு செய்குன்றின் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் குளத்தைப் பொய்கை என்று குறிப்பிட்டார் தோட்டக் கலைஞர். 'தண்ணீர் உட்புகுந்து இங்கேயிருந்து தாராளமாக வெளியேறி, நீரோடைகள், செயற்கையூற்றுகள் மூலமாகத் தோட்டமெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. இந்தப் பொய்கை இந்தப் பூந்தோட்டத்தின் உயிர்நிலை' என்றார்.

இந்த நீர்நிலையைச் செந்தாமரை மலர்கள் அழகு செய்தன. எனக்குப் பொய்கையாழ்வார் நினைவு வந்தது.

விஞ்ஞான நண்பர் பக்கத்திலேயிருந்த ரோஜாப் பூவைச் சுட்டிக் காட்டி, 'இதுவும் வந்தேறிதான், முன்னே வந்தது; கனகாம்பரம் பின்னே வந்தது; இவ்வளவுதான் வித்தியாசம்' என்றார்.

Koviloor Digital Library

'அதனால்தான் திருமகள் ரோஜாப்பூவில் குடியிருக்கவில்லை; செந்தாமரைப் பூவிலேதான் கோயில் கொண்டிருக்கிறாள்!' என்றார் ஆஸ்திக நண்பர்.

'ரோஜாவைப் பார்த்திருந்தால், ''ரோஜா'' என்ற பெயரையும் ''உரச நாண் மலர்'' என்ற செந்தமிழ்ப் பெயராக்கிக் காட்டியிருந்தால், ''புஷ்பங்களின் ராணி இதுதான்!'' என்று திருமாமகள் அந்த நீர்ப்பூவைவிட்டு இந்த நிலப்பூவிலே பாய்ந்திருப்பாள்!' என்று கிண்டலாகப் பேசினார் நாஸ்திக நண்பர். 'புஷ்பங்களின் ராணிகூடவா அயல்நாட்டிலிருந்து வரவேண்டும்?' என்று பெருமூச்சு விட்டார் தேசபக்த நண்பர்.

'அழகுத் தெய்வம் ரோஜாவில் இருக்கிறது; தாமரையிலும் இருக்கிறது; மற்றைப் பூக்களிலும் இருக்கிறது' என்று தொடங்கி நான் பேசினேன்: 'பாரசீக தேசத்துப் பக்தமணிகளும் கவிமணிகளும் ரோஜாவைப் பார்த்துப் பரவசமானார்கள். அப்படியே செந்தாமரையின் அழகைப் பார்த்துப் பார்த்துப் பக்தி அநுபவங்களை அடைந்திருக்கிறார்கள் நமது பக்தமணிகள். பொய்கையாழ்வார் உலக அன்னையாகிய மகாலட்சுமியை ''ஒண்தாமரையாள்'' (அழகிய செந்தாமரையில் வீற்றிருக்கிறவள்) என்கிறார். லக்ஷ்மீ நாராயணமூர்த்தியை 'ஒண்தாமரையாள் கேள்வன்' (செந்தாமரைப் பெண்ணின் காதலன்) என்கிறார். செந்தாமரைப் பூவை, 'ஒண் பூ' (அழகிய பூ) என்றே அருமையாகக் குறிப்பிடுகிறார். இந்த ஒரு பூவிலேயே பொய்கையாழ்வார் தமது அழகுத் தெய்வத்தை இரட்டைத் தெய்வமாகத் தரிசித்துவிட்டார்; பரமபத நாதனோடு பரமபதத்தையும் கண்டுகொண்டார்; தமது வாழ்க்கையின் மகத்தான லட்சியத்தை உணர்ந்து கொண்டார்.'

நண்பர்கள் இந்தக் கருத்தமைந்த பாடலைக் கேட்க விரும்பினார்கள். நான் ஒப்பித்தேன்:

Koviloor Digital Library

பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு; ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும்; - உயிரும்
தருமனையே நோக்கும்; ஒண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு.

[பெயரும் - போவதும் மீள்வதுமாயிருக்கும். கதிரவன் - சூரியன். தருமன் -(இங்கே) யமதருமன்.]

ஆறு கருங்கடலையே நோக்குகிறது. உயர்ந்து கொண்டிருக்கும் சூரியனை நோக்குகிறது தாமரை. உயிரோ தருமம் என்ற தராசில் எல்லாரையும் எல்லாவற்றையும் நிறுத்து மதிப்பிடும், 'தருமராஜா' என்ற கால தேவதையை நோக்குகிறது. இந்த ஆழ்வாரின் உணர்வோ உதய சூரியனைக் கண்டு மலரும் தாமரையைப் பார்த்ததும், அந்தச் செந்தாமரைப் பெண்ணின் தெய்வக் காதலனை நோக்குகிறதாம்.

பாட்டைக் கேட்டதும் ரஸிகமணியான நண்பர் குதூகலமாய்ப் பேசினார்: 'ஆ ஹா, என்ன அருமையான வாக்கு! என்ன அழகான உண்மை! சூரிய நாராயணன் வானத்திலிருந்தே தன் சுடர்க் கைகளை நீட்டிச் செந்தாமரைப் பெண்ணைப் 'பாணிக்கிரணம்' செய்துகொள்ளும் அந்தத் திருமண வைபவத்தைக் கண்டு களிக்கிறார் பொய்கையாழ்வார். விண்ணும் மண்ணும் காதல்புரியும் இக் காட்சியிலே, அந்தத் தெய்வக் காதலரான லக்ஷ்மீ நாராயண மூர்த்தியை அப்படியே நோக்குகிறது இவர் உணர்வு! ஆஹா, மகத்தான அநுபவம்!'

இதைக் கேட்ட தோட்டக் கலைஞர், 'இந்தப் பூந்தோட்டத்திலே, இந்தப் பூம் பொய்கையிலேயே, உயர்ந்து வரும் உதய சூரியனைச் செந்தாமரைக் காதலி முக மலர்ந்து நோக்குவதைச் சிறியேன்கூடப் பார்த்திருக்கிறேன். அந்தக் காதலர் இந்தக் காதலியைச் சுடர்க்கை நீட்டி நித்திய கல்யாணம் செய்துகொள்ளும் அந்தக் காட்சியையும் கண்டிருக்கிறேன்.

Koviloor Digital Library

ஆனால் பொய்கையாழ்வார் கண்டது ஒரு புதிய சிருஷ்டியாகிவிட்டது, அந்த அருள்வாக்கிலே! எனக்கோ அத்தகைய சிருஷ்டி சக்தி இல்லை; அந்த உணர்வும் இல்லை' என்றார், ஆனந்தக் கண்ணீர் துளிக்க.

நான் சொன்னேன்: 'இந்தத் தோட்டத்தில் இந்தப் பொய்கைபோல் இருக்கிறார் பொய்கையாழ்வாரும் பிரபந்த நந்தவனத்திலே. ஒரு பொற்றாமரைப் பொய்கையிலே பூத்த ஓர் அழகிய தாமரையிலே தோன்றினார் பொய்கையார் என்கிறார்கள். இவரை உற்பத்தி ஸ்தானமாகக் கொண்டு பிரபந்த நந்தவனம் தழைத்துச் செழித்து வளர்ந்தோங்குகிறது. இந்தக் காரணத்தினாலும் இவரைப் 'பொய்கை' என்று சொல்லிவிடலாமல்லவா?'

நாங்கள் குளக்கரையிலிருந்து புறப்பட்டுக் கொடிப் பந்தல்கள், கொடி வளைவுகள் வழியாகத் திரும்பினோம். அந்த நடைபாதைகள், இடையிடையே தூண் - அலங்காரங் கள், மலர்ப் பாத்திகள், தினுசு தினுசான மரக் கூட்டங்கள், அங்குமிங்குமாக ஊசல்கள் - எல்லாம் அழகு மயமாயிருந்தன. பார்த்துப் பார்த்து அழகு செய்திருந்தார் தோட்டக் கலைஞர், புல்தரைகளையும் வேலிகளையும்கூட.

'அந்தப் பூந்தோட்டமும் பொய்கையும் பொய்கை யாழ்வார் பாடல்களும் மற்றைப் பிரபந்தங்களுக்கும் ஒரு நல்ல நினைவுக்குறி' என்று எனக்குத் தோன்றுகிறது.

★

Koviloor Digital Library

3. தூங்கா விளக்கு

இருட்டறையிலே குருடன் கரும்பூனை தேடிய கதைதான் வேதாந்தம் என்று கூறுவோர் உண்டு. அவர்கள், 'இன்னது சொல்லுகிறோம்!' என்பதை அறியாதவர்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

கரும்பூனையை இருட்டறையில் தேடிய 'குருடன்' உண்மையிற் குருடன் இல்லை! குரு எதைக் காட்டுகிறாரோ அதைப் பார்க்கக் கூடியவன்தான்; 'காண்பனவும் கேட்பனவும் மற்றொன்று இன்றி'க் காணக்கூடியவன்; பிறர் மேம் பொருளாகக் காட்டும் மற்றைப் பொருள்களுக்குத்தான் குருடு!

அத்தகைய சீடனைப் பார்த்துக் குரு, 'நீ அந்த இருட்டறைக்குள்ளே போ' என்று ஏவினார். உடனே இவன், 'அங்கே என்ன செய்யவேணும்?' என்றுகூடக் கேட்காமல், பதில்கூடச் சொல்லாமல், புறப்பட்டான்.

குரு மறுபடியும், 'நில்லு; அந்த இருட்டறைக்குள்ளே போய்க் கரும்பூனையைப் பிடித்துவா' என்றார். சீடன் நின்று அதையும் கேட்டுக் கொண்டு இருட்டறைக்குள்ளே பிரவேசிக்கத் தொடங்கினான்.

குரு மறுபடியும், 'நில்' என்று அவனை நிறுத்தி, ' அந்தக் கரும்பூனை அங்கே இல்லை; அதைப் பிடித்துவா!' என்று கட்டளையிட்டார். சீடன் அறைக்குள்ளே மறைந்து போனான்.

'அங்கே என்ன செய்யப் போகிறான்? குருட்டுப் பையன்!' என்று இகழ்ந்தனர் சிலர். 'வெளிச்சமும்

Koviloor Digital Library

இல்லையே; தேள், பாம்பு இருந்தாலும் தெரியாதே!' என்று, பயப்படுகிறவர்கள் பயந்தே போனார்கள். சிலர் 'ஐயோ!' என்று சீடன்மீது இரக்கமும் கொண்டார்கள்.

இருட்டறைக்குள்ளே போனவன் அங்குமிங்கும் தேடினான்; தேடிக்கொண்டேயிருந்தான். 'பைத்தியம்', 'முட்டாள்', 'ஆபத்து!', 'பொல்லாத குரு; இரக்கம் இல்லாத நெஞ்சு' என்றெல்லாம் வெளியே பேசிக்கொண்டிருந்த சொற்கள் அவன் காதில் விழவேயில்லை.

தேடித் தேடிக் கடைசியாகச் சீடன் ஏதோ ஒரு கனமான கருந்திரையைத் தடவிப் பார்த்துப் பளிச்சென்று அதை விலக்கிவிட்டான். ஆஹா ஆபத்தில்லை; ஆச்சரியந்தான்! குருபக்தியும் அந்த நம்பிக்கையும் வீணாகுமா?

என்ன அழகான விளக்கு! கிளை விளக்குகளோடு கூடிய அந்தக் திருவிளக்கு இப்போது அறையெங்கும் ஒளிவீசுகிறது. கருந்திரையிட்டு மறைந்திருந்ததால்தான் அந்த ஒளியை அறை முழுமையும் பெறவில்லை; பெரும் பகுதியும் இருண்டு கிடந்தது. திரை விலகியதால் தீபம் இருளை ஓட்டித் திவ்யமாக ஒளி வீசுகிறது.

இந்த விளக்கு மங்கிப்போகாதபடி, அணைந்து போகாதபடி, தூங்கா விளக்காய்த் துலங்கும்படி ரகஸியமாகக் குரு அல்லவா நெய் வார்த்து உதவி வந்தார்?

இப்படித்தான் இருக்கிறது வேதாந்த விளக்கும்! 'எவ்வளவோ அக இருட்டைப் போக்கி ஒளி வீசக்கூடிய மணி விளக்கல்லவா?' என்று சீடன் எண்ணி எண்ணி அதிசயம் அடைந்தான்; மன அமைதி அடைந்தான்.

வேதாந்த விசாரமானது ஆதியிலே இருட்டறையில் குருடன் கரும்பூனை பிடிக்கும் கதை போலத் தோன்றிய போதிலும் உண்மையில், வாழ்க்கைக்குச் சிறந்த

Koviloor Digital Library

வழிகாட்டி யும் ஒளிகாட்டியுமான ஓர் அதிசய விளக்கைக் கண்டுபிடிக்கும் ஒரு சிறந்த நற்பெரு முயற்சியாகும். இருட்டறையென்பது ஆன்ம ஆராய்ச்சிச் சாலையின் ஆரம்பத் தோற்றந்தான்.

போகப்போக, தேடத்தேட ஆயிரம் கிளைகளோடு கூடிய ஓர் ஆச்சரியமான மங்கள தீபத்தால் ஒளி செய்யப் பெறும் மண்டலம் தென்படுகிறது. இதைக் கண்டுபிடித்ததும் வேதாந்தியின் வாழ்க்கை, வாக்கு எல்லாம் அந்த ஒளிமயமாகின்றன.

பொய்கையாழ்வார் ஆன்ம ஆராய்ச்சி செய்து கொண்டே, 'உலகமாகிய இருட்டறையில் கரும்பூனை பிடிக்கிறாரோ?' என்று பிறர் எண்ணும்படி அங்கும் இங்கும் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். உண்மையைத் தேடித்தேடி நாடெங்கும் பரபரப்பாய்த் திரிந்துகொண் டிருந்த இப் பெரியார், ஒரு நாள் இருந்த இடத்தில் மறுநாள் இராமல் ஊருக்கு ஓர் இரவாகத் தங்கி யாத்திரை செய்து வந்தார்.

ஒருநாள் திருக்கோவலூர் என்ற தலத்திற்கு வந்து சேர்ந்தார். சூரியன் அஸ்தமித்து விட்டது. வானம் திடீரென்று இருண்டது; அந்த இருளானது உலகத்தைக் கருந்திரையிட்டு மறைத்தது.

'இந்த வாழ்க்கை பெரும்பாலாருக்கும் இப்படித்தானே இருக்கிறது!' என்று சொல்லிக் கொண்டே இப்பெரியார் ஒரு வீட்டு வாசலில் போய் நின்றார். நின்று, 'படுக்க இடம் கிடைக்குமா?' என்று விசாரித்தார்.

வீட்டுக்காரன் அந்த வீட்டின் ஒடுக்கமான இடை கழியை ஒழித்துவிட்டான். இவர் படுத்திருக்கும் போதே வெளியே சிலுசிலுவென்று மழை ஆரம்பித்து விட்டது.

Koviloor Digital Library

ளவேறொருவர் வந்து நின்று தங்க இடம் வேண்டினார். பொய்கையாழ்வார், 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்' என்று வந்தவருக்கு இடம் கொடுத்தார். புதியவர் பூதத்தாழ்வார் என்று தெரியவந்தது.

அப்போது இன்னொருவரும் ஓடிவந்து இரவைக் கழிக்க இடம் கேட்டார். உள்ளே இருந்த இருவரும், 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' என்று அவரையும் அழைத்துக் கொண்டார்கள். இப்போது வந்தவர் பேயாழ்வார் என்று தெரிந்துவிட்டது.

மூவர் நின்று கொண்டிருக்கும் அந்த இடைகழியில் எப்படியோ வேறொருவனும் நான்காமவனாக வந்து நுழைந்துவிட்டான். என்ன அதிசயம்! குரலும் கொடுக்க வில்லையே; எனவே, யாரென்று தெரியவில்லை.

'இந்தப் புதியவன் யார்?' என்று பார்க்க, அந்த இருட்டிலும் மழையிலும் தீபம் கிடைக்கவும் வழியில்லை. இருட்டறையில் கரும்பூனை பார்க்கும் கதை போலத்தான் இருக்கிறது!

இந்த நிலையில் பொய்கையாழ்வார் பளிச் சென்று எப்படியோ ஒரு தீபம் கொண்டுவந்து விடுகிறார். இதுதான்;

> வையம் தகளியா வார்கடலே நெய்யாக,
> வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
> சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை,
> இடராழி நீங்குகவே யென்று.

[தகளியா - (நெய்க்கும் திரிக்கும் ஆதாரமாக இருக்கும்) அகலாக. வார் - நீண்ட. வெய்ய - வெப்பமான. கதிரோன் - கிரணங்களுடைய சூரியன். செய்ய - சிவந்த. சுடர் ஆழி - சுடர் வீசும் சக்கரம். இடர் ஆழி - துன்பக் கடல்.]

Koviloor Digital Library

இந்தப் பாட்டின் மகிமையால் அந்த இடைகழியில் பளிச்சென்று ஏதோ ஒரு திரை விலகி எப்படியோ வெளிச்சம் வந்துவிட்டதாம். அதே சமயத்தில் பூதத்தாழ்வாரும் ஒரு ஞானச் சுடர் விளக்கை ஏற்றப் பேயாழ்வார், 'கண்டேன் உண்மையை! கண்டேன் கள்வனை!' என்று ஆனந்தம் அடைந்தார்.

கள்வன் வேறுயாருமில்லை; பக்தர்களுக்கிடையே வாசம் செய்யும் இஷ்டமூர்த்தி, பரம சாதுக்களான மூவரும் ஒன்றி நின்ற அந்த இடத்தில் நான்காவது ஆளாக ஒண்டி நிற்கிறான்.

இனி, பொய்கையாழ்வாரின் ஞான விளக்காதிய பாட்டைக் கொஞ்சம் கவனித்துப் பார்ப்போம். இது ஒரு சூரியோதயப் பாட்டு; கடலிலே சூரியோதயமாகும் அந்த இயற்கையற்புதத்தை அழகாக வருணிக்கிறது.

ஒரு தீப சிகைபோல் ஜொலிக்கிறது இளஞ் சூரியன் கிழக்குத் திக்கிலே. அந்தத் தீபத்திற்கு நெய்போல் இருக்கிறது கடல். விளக்கின் தகழிபோலத் தோன்றுகிறது பூமி.

இந்தச் சூரியன் - இயற்கையின் தூங்கா விளக்கு - பொய்கையாழ்வாருக்கு இறைவனுடைய சுடராழியையும் நினைவூட்டுகிறது. இவர் இந்த விளக்கைக் கொண்டு அந்தச் சுடராழி வேந்தனைக் கண்டு பாடியதும், இடர்க் கடல் விலகி எங்கேயோ போய்விடுகிறதாம்.

பொய்கையாழ்வாரின் இந்தப் பாசுரத்தைப் பக்தர் களுக்கு ஒளிகாட்டி நெறிகாட்டும் ஒரு தூங்கா விளக்காய்க் கருதலாம். இயற்கையிலே இறைவனைக் காண விரும்பும் வேதாந்திகளுக்கும் இது ஒரு நல்ல விளக்கு.

பொய்கையாழ்வார் பாடியிருக்கும் முதல் திருவந்தாதி முழுமையும், 'எம் பொய்கைப் பிரான், மறையின் குருத்தின்

Koviloor Digital Library

பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்து அன்று எரித்த திருவிளக்கு' என்பர் திருவரங்கத் தமுதனார், தமது 'ராமனுச நூற்றந்தாதி'யிலே.

வேத வேதாந்தங்களின் பொருளையும், சங்க காலம் தொட்டுத் தமிழர்களிடையே வளர்ந்து வந்த கருத்துக்களையும் கலந்து பொய்கையார் ஒரு கலைவிளக்கை ஏற்றி வைத்தார் என்பதும், அதுவே ஸ்ரீ வைஷ்ணவம் என்ற பக்தி விளக்காகி ஒளிவீசுகிறது என்பதும் திருவரங்கத்தமுதனாரின் திருவுள்ளம்.

'இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்து அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்'களில் பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் இம் மூவரும் முதலாழ்வார்கள். இவர்களில் முதல்வர் பொய்கையார்.

★

Koviloor Digital Library

4. செவிவழிக் கதையும் கவிவழிச் செய்தியும்

பொய்கையாழ்வாரின் வரலாறு குறித்து நமக்கு விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை.

உளன்கண்டாய், நன்னெஞ்சே! உத்தமன் என்றும்
உளன் கண்டாய்; உள்ளுவார் உள்ளத்(து)
- உளன்கண்டாய்

என்று கடவுளுண்மையையும், இந்த உத்தமனைப் பக்தி செய்து நாமும் உத்தமராக வாழ்ந்து கதிபெற வேண்டுமென் பதையும் சங்கு கொண்டு ஊதி முழக்குவதுபோல் முழக்கிய இந்த ஆழ்வாரைத் திருமாலின் திவ்ய ஆயுதங்களில் ஒன்றாகிய 'பாஞ்சஜந்யம்' என்னும் சங்கின் அம்சம் என்கிறார்கள். ஸ்ரீ வைஷ்ணவம் என்னும் ஞான கங்கையின் உற்பத்தி ஸ்தானாகிய ஒரு பொய்கைபோல், ஒரு மான ஸரோவரம் போல், விளங்கும் இவரைப் பொய்கையில் அவதரித்த பொய்கையாழ்வார் என்கிறார்கள்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாவார் என்ற மூவரையும் 'அயோநிஜர்கள்' என்பர். இந்த முதலாழ்வார்கள் மூவருக்கும், பரமபத நாதனுடைய கட்டளையினால், அந்தப் பரம பதத்திலுள்ள சேனை முதலியாரே (சேனாதிபதியே) பூலோகத்திற்கு வந்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குரிய பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து திருமந்திரப் பொருளையும் உபதேசித்துப் போனாராம்.

அதனால் இந்த மூன்று ஆழ்வார்களும் சுத்த ஸாத்விகர்களாய் ஒரு நாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள்

Koviloor Digital Library

இராதபடி ஓடித் திரியும் யோகிகளாய், நாடெங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்களாம். அப்படி இவர்கள் திரிந்து கொண்டிருக்கும்போதுதான், திருக்கோவலூரில் ஒரு வீட்டின் இடைகழியில் மூவரும் நெருங்கி நின்று கொண்டு பகவானைக் கண்டு பகவத் குணங்களை அநுபவிக்க நேர்ந்தது என்பர்.

இந்தக் கதைக்கு ஆதாரமாகப் பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதியில் ஒரு பாட்டையும் காட்டுகிறார்கள்:

நீயும் திருமகளும் நின்றாயால், குன்றெடுத்துப்
பாயும் பனிமறுத்த பண்பாளா! – வாசல்
கடைகழியா, உள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி இனி.

[குன்று - (இங்கே) கோவர்த்தன மலை. பனி மறுத்த - குளிர்ந்தமழையை மேலே விழாமல் தடுத்த. வாசல் கடை - வாசலுக்கு வெளியே. கழியா - வெளிப்பட்டுப் போகாமலும். உள் புகா - உள்ளே புகாமலும். காமர் பூங்கோவல் - விரும்பத் தக்க அழகிய திருக்கோவலூர்.]

கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் கிருஷ்ணாவதாரத்தில் லோகோபகாரம் செய்த பகவானே இந்த முதலாழ்வார்கள் மூலமாகவும் உலகத்திற்கு உபகரிக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி இம்மூவரையும் திருக்கோவலூரில் குறித்த வீட்டின் இடைக்கழியில் சந்திக்கச் செய்தான் என்பர்.

இந்தப் பாட்டிலே 'காமர் பூங்கோவல்' என்று திவ்ய ஸ்தலமான திருக்கோவலூரின் அழகு குறிக்கப்படுகிறது. 'கோவல் இடைகழி' என்று அந்த இடைகழியும் குறிக்கப்படுகிறது.

'அந்த இடைகழியிலே பிரியத்தோடு நீயும் திருமகளும் நின்றருளினாய்!' என்று அந்த லக்ஷ்மீ நாராயண மூர்த்தியும்

Koviloor Digital Library

பிரஸ்தாபிக்கப்படுகிறார். 'அந்தப் பெருமான் வாசலுக்கு வெளியிலும் நில்லாமல், வீட்டுக்குள்ளேயும் புகுந்து விடாமல், நடுக்கட்டான இடைகழியிலேயே நின்றருளினான்!' என்றும் பொய்கையாழ்வார் இந்தப் பாட்டிலே பிரஸ்தாபிக்கிறார்.

திருக்கோவலூரில் ஒரு வீட்டின் இடைகழியில் 'பகவத் அநுபவம்' பொய்கையாழ்வாருக்கு ஏற்பட்டதென்று இப்பாட்டிலிருந்து யாரும் ஊகிக்கக் கூடியதுதானே. இந்த வித்து, மூன்று ஆழ்வார்களும் ஒருவரையொருவர் சந்தித்து நெருங்கி நின்றுகொண்டிருக்கும்போது, பகவானும் திருமகளோடு வந்து நெருங்கி அருள் செய்தான் என்ற ஓர் அற்புதக் கதையாக முளைத்து வளர்ந்திருக்கவேண்டும்.

பொய்கை, பூதம், பேய் என்ற மூன்று பரம சாதுக்களும் விரும்பித் தங்கிய அந்த இடைகழியையே பகவானும் விரும்பிய இடமாகக் கொண்டு உள்ளும் போகாமல், வெளியிலும் போகாமல் நின்றுகொண்டிருந்தான் என்று கூறுவது ரஸமாகத்தான் இருக்கிறது. 'பெய்யுமா மழை' போன்ற மேனியில் மின்னற் கொடிபோல் திருமாமகளையும் பார்த்தது, மேலும் ரஸமாக இருப்பதோடு ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்திற்கே வித்தாகவும் அமைந்திருக்கிறது.

கல்லாலே கல்மாரி தடுப்போமென்று கோவர்த்தனம் எடுத்து நின்ற அந்தக் காலத்திலே, ஆயர் ஆய்ச்சியரோடும் பசுக் கூட்டங்களோடும் நெருங்கி நின்றானாம் பகவான். அப்படியே இந்த ஆழ்வார்களோடு நெருங்கி நின்ற குறிப்பும் இந்தப் பாட்டிலே தொனிப்பதாய்க் கருதுகிறார்கள்.

இப்படியெல்லாம் ஊகஞ்செய்து, 'பாவரும் தமிழால் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநாள் இரவில் - மூவரும் நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத' அழகிய, பொருள் புதைந்த, கதையொன்றைப் பக்த ரஸிகர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

தற்சரிதை

இன்னும், இவரது தற்சரிதைக் குறிப்புக்கள் இவரது பிரபந்தத்திலே கிடைக்குமா என்று பார்க்கலாம். பொய்கையாழ்வார் இளமையிலிருந்தே விஷ்ணு பக்தி உள்ளவராக வளர்ந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கும்படியிருக்கின்றன இவர் பாடல்கள்.

கருவிலேயே தமக்கு ஸ்ரீரங்க பக்தி வாய்த்துவிட்டதாக இவர் கூறுவதிலிருந்து, இவர் பிறப்பிடமும் சுற்றுணர்ச்சி களும் எல்லாம் பக்தி மயமாக இருந்தன என்று கருதலாம். இளமையிலேயே விஷ்ணுகதைகள் கேட்டுக் கேட்டு இன்புற்றிருக்க வேண்டும் இந்த உள்ளம்.

கடல் கடைந்த கதை, உலகம் அளந்த கதை முதலான ஹரிகதைகள் இவரை வசீகரித்திருக்க வேண்டும். கண்ணன் கதைகளில் இவர் தமது உள்ளத்தைப் பறிகொடுத்திருக்க வேண்டும். இந்தக் கதைகளெல்லாம் இவரது பக்தி யுள்ளத்தையும் கவியுள்ளத்தையும் ஊட்டி வளர்த்தன என்று ஊகஞ்செய்யலாம்.

பொய்கையாழ்வார் காலத்தில் காஞ்சிபுரத்தை யாண்ட மன்னனும் விஷ்ணுபக்தனாக இருந்தானென்று ஊகிப்பவர்கள் உண்டு. ஆனால் அந்த அரசனைக் குறித்தாவது, வேறு அந்தக் கால வரலாறுகளைக் குறித்தாவது இவர் ஒன்றும் சொல்லவில்லை.

'பகவானை மறந்தறியேன்' என்று சொல்லுகிறவருக்கு வேறு செய்திகள் மறந்து போவது இயல்புதானே? தாம் கண்ணெதிரே பார்த்த அரசர்களைக் காட்டிலும், மக்களைக் காட்டிலும், தம் கண் முன்னே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் காட்டிலும், எவ்வளவோ மெய்யாக மனக் கண்முன் நிகழ்ந்து கொண்டிருந்தன ஹரி கதைகளும், அந்தக் கதை - விவரங்களும்!

Koviloor Digital Library

'பகவானுடைய பெயர்களைத் தவிர மற்ற எவையும் என் செவிகள் கேட்கமாட்டா!' என்று இவரே பாடியிருக்கிறார். 'கண்ணனுடைய உருவத்தைத் தவிர வேறு எதையும் கண்கள் காணமாட்டா!' என்றும் கூறியுள்ளார். ' வாய் அவனை அல்லது வாழ்த்தாது' என்றும் சொல்லுகிறார்.

ஹரி கதைகள் சொல்வதும் கேட்பதும், அந்த நாமங்களை உச்சரிப்பதும் கீர்த்தனம் செய்வதும், பகவானுடைய குணங்களில் ஈடுபட்டு அவற்றைப் புகழ்ந்து கொண்டிருப்பதும், அன்பர்பணி புரிவதும் இவருக்குப் பகல் வேலையாகவும் இராக் கனவாகவும் இருந்திருக்க வேண்டும்.

இக் கருத்துக்களை வெளியிடும் பாட்டிலே, 'உலகங்களைத் தாவி அளந்த உத்தமனைத் தவிர வேறொரு மூர்த்தியையும் என் கைகள் தொழமாட்டா' என்று தமது தீவிர மத உணர்ச்சியையும் வெளியிடுகிறார். எனினும், இவருக்கு மதவெறியாவது பிறமத வெறுப்பாவது இல்லை என்பது, இவர் சிவபெருமானையும் பக்தியோடு குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது.

இனி, இவரது தீவிர விஷ்ணு பக்தியை வெளியிடும் பாட்டைப் பார்ப்போம்:

வாய்அவனை அல்லது வாழ்த்தாது; கை உலகம்
தாயவனை அல்லது தாம்தொழா, - பேய்முலை நஞ்சு
ஊணாக உண்டான் உருவொடுபேர் அல்லால்
காணாகண் கேளா செவி.

[தாயவனை - தாவியவனை. பேய் - (இங்கே) பேயாகிய பூதனை.]

காப்பாற்றும் சக்தியை உலகம் அளந்த கதையும், துஷ்ட நிக்கிரக சக்தியைப் பேய்மகளான பூதனையின் வதமும் வெளியிடுகின்றன இந்தப் பாட்டிலே. இந்த இருவகைச்

Koviloor Digital Library

சக்திகளையும் வெளியிடும் ஹரிகதைகளெல்லாம் பொய்கை யாருள்ளத்திற்கு அமுதமாக இருந்தன என்று சொல்லலாம்.

‘நல்லவன் பகவான் ஒருவன்தான்; அருள் என்பதும் அவனுடைய அருள் ஒன்றுதான்!’ என்று துணிந்தவர், உலகத்திலுள்ள பலர் தயவும் பயனற்றது என்று கருதியதில் அதிசயம் இல்லை. அரசர் பிரபுக்கள் முதலானவர்களுடைய தயவை இவர் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்ற தற்சரிதைப் பகுதியைத்தான்,

நல்லான் அருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லார் அருளும் பழுது

[நாமநீர் வையகத்து - கடல் சூழ்ந்த இப் பூமியில். பல்லார் - பலர்.]

என்ற வாக்கிலே காண்கிறோம்.

இவர் காஞ்சிபுரத்தில் நிலையாக வசித்து வரவில்லையென்றும், தேசமெங்கும் யோகியாகத் திரிந்து கொண்டிருந்தாரென்றும் கதை தெரிவிக்கிறதல்லவா? அப்படித் திரிந்து கொண்டிருந்த தலங்களில் திருக்கோவலூரும் திருமலையும் இவரைச் சிறப்பாக வசீகரித்திருக்கக் கூடும்.

இவர் யோகாப்பியாசங்களில் பழகியவர் என்பதற்கும் பாடல்களில் அகச்சான்று கிடைக்கிறது. ஐம்புலன்களிலும் போய்ப்போய் மேய்ந்து கொண்டிருந்த உள்ளத்தை மேய்ப்போனாகிய பகவான் வசமாக்கி ஞானத் தெளிவு பெற்று விளங்கும் பெரியோர்களை இவர் பாடல்கள் பொதுவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

‘அந்தப் பெரியோர்களின் உள்ளம் தாயை நாடும் கன்று போல் பரமனை எளிதாக நாடிப் போகும்’ என்று கூறும்போது இவர் தமது அநுபவங்களை ஒட்டிப் பேசுவதாகவே தோன்றுகிறது.

Koviloor Digital Library

தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை - எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல்தண்துழா யான் அடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து.

[செந்நிறீ இ - செவ்வனே நிறுத்தி. ஞானத் தெளிதாக - ஞானத்தால் தெளிவுண்டாகும்படி. தண் துழாயான் - குளிர்ந்த திருத்துழாய் மாலையணிந்த திருமால். புரிந்து - விரும்பி.]

'இமையாத கண்ணால் இருள் அகல நோக்கி' மேய்ப்பவனைக் கண்டுகொண்டு, பட்டி மாடுகளாகிய பஞ்சேந்திரியங்களையும் கட்டிப் போடுவது இவர் கண்ட யோக வித்தை.

இத்தைகய அப்பியாசங்களிலே பழகிவந்த இவர், ஏதோ ஓர் எந்திரம்போல் அல்லது கிளிப்பிள்ளைபோல் ஜபம் செய்வதிலோ, மந்திரங்களை உருவேற்றுவதிலோ நம்பிக்கை கொள்ளவில்லையென்றும் தெரிகிறது.

'என் நெஞ்சே! எப்போதும் எம்பெருமான் விஷய மாகப் பேசும் பேச்சையே சிந்தித்துக் கொண்டிரு' என்றெல்லாம் நெஞ்சுக்குச் செய்து கொள்ளும் உபதேசங் களையும் இவர் தமது யோகத்தின் பகுதியாகவே கருதியிருக்க வேண்டும்.

இத்தகைய யோகிகளின் தியானத்திலே வெளிப்படும் உருவம் பகவானுடைய உருவந்தான் என்றும், இவர்கள் கொடுக்கும் பெயர்கள் எல்லாம் அவனுடைய திருநாமங்களேயென்றும் உறுதி கூறுகிறார் பொய்கையார். 'மனிதன் சிந்திக்கிற வண்ணம் உருவாகிறான்' என்ற கொள்கையைப் புதிய மனநூலார் ஒப்புக்கொள்கிறார்கள். பொய்கையாரோ, 'மனிதன் அவ்வண்ணமே பகவானையும் உருவாக்குகிறான்!' என்கிறார்.

Koviloor Digital Library

யோக சக்தியால் கிடைக்கும் சித்திகளில் மனமாசு தீர்ந்து மனம் தெளிவு பெறுவதும் ஒன்று; தீவினைகள் அணுக முடியாமல் எட்ட நிற்பதும் ஒன்று. மூன்றாவதாக, சாதகன் விரும்பும் பொருள் தானே வந்து கைபுகும் என்கிறார். ஆனால் இவரைப்போன்ற பக்திமான்கள் விரும்பும் செல்வமெல்லாம் பக்திச் செல்வம்தானே!

இத்தகைய சாதனங்களெல்லாம் தாமே வந்து கைபுகும், நாமே விரும்பலாகாது என்பது பக்தர் கொள்கை. இப்பேர் பட்ட பக்த யோகிகள் பரமபத ராஜ்யத்தோடு இந்தப் பூமியை யும் ஆட்சி செய்யக்கூடும் என்கிறார் பொய்கையார்.

இந்த 'ஞான அரசர்' சாதாரண அரசர்களையும், பிறர் பொருளையும் மதிக்கவில்லை என்பதில் வியப்பு இல்லை:

> நயவேன் பிறர்பொருளை; நள்ளேன் கீழாரோ(டு);
> உயவேன் உயர்ந்தவரோ(டு) அல்லால்; - வியவேன்;
> திருமாலை அல்லது தெய்வம்என்(று) ஏத்தேன்;
> வருமா(று)என் என்மேல் வினை?

[நயவேன் - விரும்ப மாட்டேன். நள்ளேன் - நட்பு வைத்துக்கொள்ள மாட்டோன். உயவேன் - உசாவேன்; உரையாடிப் பொழுதுபோக்க மாட்டேன். வியவேன் - ஆச்சரியப் படமாட்டேன். வருமாறு - வரும் விதம். என் - என்ன.]

இளமையிலிருந்தே பிறர் பொருளை விரும்பாத இவர், தம்முடைய ஆத்மாவையும் பகவானுடைய பொருள் என்றே மதித்து அந்தப் பொருளையும் 'எனது' என்று கருதவில்லை யாம். பக்தியில்லாதவர்களையே 'கீழ்மக்கள்' என்று கருதிய இப்பெரியார், அந்தக் கீழ்மக்களோடு நட்புரிமை பூண்டு கொள்ளவில்லை. பக்தரல்லாதார் பேரரசர்களானாலும்

Koviloor Digital Library

அவர்களை இவர் மதிக்கமாட்டார் என்பதும், பக்தர்களையே உயர்ந்தவர்களென்று மதித்து நண்பர்களாகக் கொண்டு பழகிவந்தார் என்பதும் குறிப்பு.

இந்தப் பாட்டிலே பொய்கையாழ்வாரின் தற்சரிதை எவ்வளவு தெளிவாகக் காணப்படுகிறது! இத்தகைய பக்த யோகி உயர்ந்தவர்களிடத்திலெல்லாம் உத்தமனையே கண்டார்; இயற்கையிலும் இறைவனைக் கண்டார்; அச்சமே அறியாத அன்பு வாழ்வு வாழ்ந்தார்.

இத்தகைய வரலாற்றுக் குறிப்புக்கள் பொய்கையாழ் வார் பாடல்களில் காணப்படுகின்றன. இவரைப்பற்றி வழங்கும் செவிவழிக் கதைகளைக் காட்டிலும்இவரது கவிவழிச் செய்திகள் முக்கியமானவை.

Koviloor Digital Library

5. வாழ்க்கையும் உபதேசமும்

பொய்கையாழ்வாரைப் போன்ற பரம பக்தமணிகளுக்கு வாழ்க்கை வேறு, உபதேசம் வேறு என்பதில்லை. 'வாழ்க்கையே உபதேசம்; உபதேசமே வாழ்க்கை' என்றுகூடச் சொல்லிவிடலாம்.

பொய்கையாழ்வார் முதலான முதலாழ்வார்களை 'இன்கவி பாடும் பரம கவிகள்' என்றும், 'செந்தமிழ் பாடுவார்' என்றும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் விசேஷமாய்ப் போற்றுகிறார்கள். இவர்களிலும் பொய்கையாழ்வாரைப் 'பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு' என்று சிறப்பித்துத் 'தனியன்' பாடியிருக்கிறார் 'முதலியாண்டான்' என்ற ஸ்ரீ வைஷ்ணவ அறிஞர்.

ஸ்ரீ வைஷ்ணவ இயக்கத்தின் 'ஆதி கவி' என்றும் பொய்கையாரைப் பாராட்டுகிறார்களல்லவா? எனினும், பொய்கையாழ்வார் முதுலான ஆழ்வார்களுக்கெல்லாம் 'பகவத் விஷயத்தில் ஆழ்ந்து ஈடுபட்ட அநுபவசாலிகளான பக்த கவிகள்' என்ற பதவியையே விசேஷமாக அளிக்க வேண்டும்.

பொய்கையாழ்வாருடைய வாழ்க்கையும் உபதேசங்களும் கடவுளைச் சுற்றியே இயங்குகின்றன. கடவுளுண்மையைத்தான் இவர், உள்ளத்தின் ஆழத்திலே எவ்வளவு தெளிவாகக் கண்டு காட்ட முயல்கிறார்!

அகத்திலே கண்ட கடவுளைப் புறத்திலும் காண்கிறார். இவருக்கு அகமே புறம்தான். இயற்கையெங்கும் ஈசனைக் கண்ட இவர், இயற்கை அழகுகளுக்கிடையே திருப்பதி

Koviloor Digital Library

முதலான திவ்ய ஸ்தலங்களிலும் தமது உள்ளத்தை வசீகரித்த அழகனைக் கண்டு ஆனந்த பரவசமாகிறார்.

உளன்கண்டாய், நன்னெஞ்சே! உத்தமன்; என்றும்
உளன்கண்டாய்; உள்ளுவார் உள்ளத்(து)-உளன்கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்என்(று) ஓர்.

[உள்ளுவார் - நினைப்பவர்கள். மேயான் - பொருந்தியவன். ஓர் - அறிந்துகொள்.]

என்று இவர் தாம் கண்ட கடவுளுண்மையை வெளியிடுகிறார்.

இதில் ஐந்து அம்சங்கள் இருக்கின்றன. *(1)* உலகத்தை ஆளும் கடவுள் ஒருவன் உண்டு. *(2)* கடவுள் உத்தமன்; எனவே நன்மைதான் - முடிவாகிய நன்மைதான் - அவனுடைய அருளாட்சியின், அன்பரசின், நோக்கம். *(3)* கடவுள் **என்றும்** இருக்கிறான்; ஏதோ ஒரு காலத்தில் இருந்தான், இன்று இல்லை என்பதில்லை. *(4)* கடவுள் **எங்கும்** இருக்கிறான். கிராமத்தைவிட்டு விலகிப்போய் நகரத்திலே சுகவாசஞ் செய்யும் முதலாளி போல் எங்கேயோ மேகமண்டலத்திற்கு அப்பால் ஏதோ ஒரு பரமண்டலத்திலே பொன்னாடை புழுதி படியாமல் ஒதுங்கி வசிக்கிறான் என்பதில்லை. *(5)* அவன் வெள்ளதில் (பாற்கடலில்) இருக்கிறானென்றும், திருப்பதி மலையில் இருக்கிறானென்றும் பக்தர்கள் தோத்திரம் செய்கிறார்களல்லவா? பகவானோ இவர்களுடைய உள்ளத்தையே பாற்கடலாகவும் பரம பதமாகவும், திருப் பதிகளுக்கெல்லாம் மேலான திருப்பதி யாகவும் கொள்கிறானாம்.

தம் உள்ளத்திலே கண்ட கடவுளைப் பொய்கையார் விண்ணிலும் மண்ணிலும் கண்டார்; வேதப் பண்களிலும் கண்டார். எனினும், எவ்வளவுதான் கண்டுகளித்த போதிலும் அவன் பெருமையை உணரமுடியாதென்கிறார்; அந்த உருவத்தையும் உள்ளபடி உணர இயலாது என்கிறார்.

Koviloor Digital Library

இத்தகைய கடவுளுக்கும் 'உருவம் உண்டா? பேர் உண்டா?' என்று கேட்கிறவர்களை நோக்கி, 'அழகனுக்கு உருவம் அன்பர் அளிக்கும் அன்புருவமும் அழகுருவமும் தான்! பெயரும், அன்பர் அன்புகூர்ந்து அளிக்கும் பெயர் களெல்லாம்தான்!' என்கிறார். 'கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன்...'' என்றெல்லாம் அழகான உச்சரிப்புக்களோடு கூடிய நாமங்களை அன்பர் சூட்டியதும், பெயரில்லாத பரம்பொருளுக்கு எத்தனையோ அழகான பெயர்கள் கிடைத்துவிடுகின்றனவாம்.

'கடவுள் மனிதனைத் தன் சாயலில் படைத்தான்' என்று கிறிஸ்துவ வேதம் சொல்லுகிறதல்லவா? பொய்கை யாழ்வாரோ, 'மனிதனும் கடவுளைத் தன் சாயலில் படைத்துக்கொள்கிறான், அன்பினாலே, பக்தியினாலே!' என்று பகுத்தறிவுவாதிகளும் பிரமிக்கும்படி உபதேசிக்கிறார்:

தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே;
தமருகந்த தெப்பேர்மற்றப்பேர்; - தமருகந்(து)
எவ்வண்ணம் சிந்தித்(து) இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியா னாம்.

[இமையாது இருப்பரே - ஓயாமல் பாவித்துக் கொண்டிருப்பார்களே. அவ்வண்ணம் ஆழியான் ஆம் - எம்பெருமான் அவ்வண்ணமே ஆவன்.]

இத்தகைய பக்தமணி சமரச வாதியாகவும் இருக்கிறார். சைவ வைஷ்ணவ சமரசம் மட்டுமா? சர்வ சமய சமரசத்தையும் பொய்கையாழ்வார் ஆதரிக்கிறார் என்றே தோன்றுகிறது. 'அவரவர் தாம் தாம் அறிந்தவாறு... தொழுவர்' என்று சொல்லுகிறவர், அவரவருக்கு இஷ்ட உருவங்களிலும் பெயர்களிலும் கடவுள் பிரத்தியட்சமாகிறார் என்ற கொள்கையையும் ஆதரிக்கிறார்.

'பாவத்திற்கும் குற்றங் குறைகளுக்கும் தவறுதலுக்கும் பரிகாரம் பச்சாத்தாபக் கண்ணீர் வடிப்பதுதான்; அந்த அழுகை

Koviloor Digital Library

உள்ளத்தைச் சுத்தமாக்கக்கூடும்' என்ற கிறிஸ்தவக் கொள்கை சைவ வைஷ்ணவ பக்தர்களுக்கும் உடன்பாடுதான். இக் கொள்கையைப் பொய்கையார் ஒப்புக் கொள்கிறார். பச்சாத்தாபத்தினால் திருந்தி மனம் உருகி அழுது தொழுது இறைவன் அடிகளைக் கண்டதாக இவர் கூறுவது பிறர்க்கும் உபதேசம்தான்.

இவ்விதமாய்த் திருந்தி நல்வழிப்படுவதற்கு ஒரு வழி பகவந்நாம ஸங்கீர்த்தனம். பகவானுடைய பெயர்களைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதும் புத்தியைக் கொண்டு சிந்திக்க வேண்டும் என்கிறார். கேவலம் எந்திரம்போல் ஜபஞ் செய்வதும் மந்திரங்களை உருச் சொல்வதும் சந்தியா வந்தனம் முதலிய கர்மடானுஷ்டானங்களையும் சடங்குகளையும் உள்ளத்தில் ஒட்டாமல் செய்துகொண்டிருப்பதும் பயனற்ற செயல்கள் என்று உபதேசிக்கிறார்.

பஜனை, யோகம் முதலியவற்றைப் பக்தன் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இவர் உபதேசம். புலனடக்கத்திற்கு யோகம் துணைசெய்யும் என்று கருதுகிறார். புலனடக்கம் அல்லது இந்திரிய ஜயத்தால் ஞானத் தெளிவு ஏற்படும்; ஞானம் மெய்ஞ்ஞானமாகும் என்கிறார். இந்திரிய ஜயத்தால் அன்பும் பரிசுத்தமாகி மெய்யன்பாகும் என்கிறார்.

இத்தகைய பக்தியோடு கூடிய ஒருமை யுணர்வினாலும் ஞானயோகத்தினாலும், கடலில் ஆறு கலப்பதுபோல் உள்ளம் இறைவனோடு ஒன்றுபடக் கூடும் என்கிறார். சூரியனைக் கண்டு மலரும் தாமரைபோல் உள்ளமும் பகவானைக்கண்டு மலர்ச்சி பெறும் என்கிறார். இந்த ஆழ்வாரை ஒரு சிறந்த 'ஞான யோகி' யென்று கருதுவது பொருத்தமே.

ஆழ்வாரைப் போன்ற ஞான யோகிகளும் பக்த சிரேஷ்டர்களும் யோக சித்திகளை விரும்பமாட்டார்கள். மனமாசு தீரவும் தீவினைகளை அணுகி வராதபடி எட்ட நிறுத்தவும் உபயோகமாகும் யோக வழிகளிலே, அவர்களுக்கு

Koviloor Digital Library

அவசியமான செல்வங்களும் தாமே வந்து கைகூடும் என்கிறார். பாவமும் பழவினைகளும் எட்ட நிற்பதோடு, மனத்துன்பங்களும் உடல் நோய்களும்கூட யோகியையும் பக்தனையும் விட்டு அகலப் போய்விடும் என்கிறார். இப்பேர்ப்பட்டவர்கள் கெட்ட வழியிலே போக மாட்டார்கள்.

'மூப்பு உன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை, திருமாலே!' அதாவது, என்றும் அழகனாகிய பகவானைச் சிந்தித்துக் கொண்டே இருப்பவர்களுக்குக் கிழத்தனம் முதலிய விகாரங்களும் இல்லையாம். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, 'திருமாலே!' நின்அடியை வந்திப்பார் காண்பர் வழி' என்றும் உபதேசம் செய்கிறார்.

இத்தகைய பரம ஞானியாகிய பக்தருக்கு அபாரமான தன்னம்பிக்கையும் ஏற்படுவது இயல்புதான். 'என்மேல் தீவினை எப்படித்தான் வரக்கூடும்?' என்று கேட்கிறார். 'அவன் பொன்னடியைக் கிரீடமாகச் சூட்டிக்கொண்ட எனக்கு எது எப்படியானால் என்ன?' என்று இறுமாந்திருப்பது போலவும் பேசுகிறார்.

இப்பேர்ப்பட்ட தன்னம்பிக்கையோடு பிறரை நோக்கி, 'சொல்ல நாக்கு இருக்கிறது; நாராயண மந்திரம் இருக்கிறது; செல்லப் பெரிய ராஜ வழி இருக்கிறது; இப்படியெல்லாம் இருக்க, ஒருவன் ஏன் தீக்கதியில் போய் விழ வேண்டும்?' என்று கேட்கிறார்.

பொய்கையாழ்வாருடைய ஞான பக்தியிலே, கைங்கரியத்திற்கு ஒரு விசேஷ ஸ்தானம் அளிக்கப் பட்டிருக்கிறது. கைகங்கரியமாகக் கனிந்துவிடாத பக்தி, மலடுதான் என்று உறுதியாகக் கருதி விட்டவர்போல், வெயிலுக்குக் குடையாகவும் காலுக்குச் செருப்பாகவும் இருந்து கைக்கரியம் புரியவேண்டும் என்கிறார்.

Koviloor Digital Library

பொய்கையார் பாடல்களில் ஒன்று தொண்டின் இலக்கணத்தை முழு மலர்ச்சிபெற்ற ஓர் அழகான மலர்போலக் காட்டுகிறது:

> சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காசனமாம்;
> நின்றால் மரஅடியாம்; நீள்கடலுள் – என்றும்
> புணையாம்; மணிவிளக்காம்; பூம்பட்டாம்; புல்கும்
> அணையாம் திருமாற்(கு) அரவு.

[மர அடி - பாதுகை. புணை - தெப்பம். மணி விளக்கு - ரத்தினம் தீபம். புல்கும் - தழுவும். திருமாற்கு - திருமாலுக்கு. அரவு - பாம்பு; (இங்கே) ஆதிசேஷன்.]

ஆதிசேஷன் என்ற பாம்பு பகவானுக்கு எப்படி யெல்லாம் தொண்டு செய்கிறது பாருங்கள்! எல்லாக் காலங்களிலும் எல்லா விதமான தொண்டுகளையும் செய்யத் துணிவதுதான் கைங்கரிய நெறி என்ற பாடத்தை அதிசயமாக, ஓரளவு ஹாஸ்ய ரஸத்தோடு, வெளியிடுகிறார் ஆழ்வார்.

பெருமாள் உலாவப் புறப்பட்டால், மழை வெயில் படாதவாறு குடையாகிறானாம் சேஷன். உலாவி முடிந்ததும் உட்கார விரும்பினால் உடனே சிங்காசனமாகிவிடுகிறானாம். பகவான் நின்றுகொண்டிருந்தால் காலுக்குச் செருப்பாய் கிடப்பானாம். மேலும் மகாவிஷ்ணு கடலிலே ஆனந்தமாக மிதந்து செல்வதற்கு ஓர் இன்பப் படகாகவும் அமைந்து விடுவானாம். வெளிச்சம் வேண்டுமென்றால், அந்த ஆயிரம் பணாமுடிகளிலும் உள்ள நாகரத்தினங்களும் அத்தனை ரத்தின விளக்குகளாக ஜொலிக்கத் தொடங்கி விடுமாம். இத்தகைய சேஷன் உடுக்கப் பூம்பட்டாகவும், படுக்க மெத்தையாகவும் தலையணையாகவும் உதவுகிறானாம்.

பக்தர்களெல்லாம் இப்படியே பணி செய்யவேண்டும் என்று சொல்லாமல் சொல்லிவிடுகிறார், ஆதிசேஷனை முன் மாதிரியாகக் காட்டி.

Koviloor Digital Library

இந்த ஆழ்வாருக்குப் பிரசார விருப்பம் அதிகமாகவே இருக்கிறது. 'ஜம்பூத்வீபம்' என்று சொல்லுகிற நாடு முழுமையும் பக்திப் பிரசாரம் செய்யவேண்டும்; நரகவாசலை இனி எவராலும் திறக்க முடியாதபடி அடைத்துவிட வேண்டும் என்ற ஆசை பேராசையாகவே இருக்கிறது.

இந்த ஆசை தவிர வேறு ஆசைகளையெல்லாம் துறந்த இந்த அதிவீர ஞானமூர்த்தி அருளிய நூறு பாசுரங்களும் உபதேச ரத்தினங்களே. இந்த நூறு பாசுரங்களையும் 'முதல் திருஅந்தாதி' என்கிறார்கள்.

இவர் ஒரு நல்ல கவியாக இருந்தபோதிலும், இவர் கவிதையும் உபதேசத்திற்கு உபகரணந்தான். இவருடைய சில பாடல்களில் சில அடிகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்; பாடிக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது. அவ்வளவு நல்ல கவிதை; எனினும், 'மனச்சுடரை'த் தூண்டும் உபதேசங்களே இந்தப் பாடல்களின் முக்கிய அம்சமாகும்.

★

Koviloor Digital Library

6. புராணமும் புதைபொருளும்

கையேந்தி வந்தான், காலால் அளந்தான்!

உலகமெங்கும் போர் புரிந்து வெற்றி சூடிச் சர்வாதிகாரியாக விளங்கினான்; வேள்வி செய்து புரோகிதர்களையும் முனிவர்களையும் திருப்தி செய்தான்; வேண்டியவர்களுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் வாரி வாரித் தானஞ் செய்தவண்ணமாயிருந்தான். வீரத்தோடும் வண்மையோடும் பக்தியும் இவனிடம் இருந்தது. ஆம்; இவன் விஷ்ணு பக்தனாகவும் இருந்தான்.

இத்தகைய சக்கரவர்த்தியின் முன்பு ஒரு நாள் ஒரு குள்ளன் தோன்றினான். சித்திரக் குள்ளன்; விசித்திரக் குள்ளன் என்றும் சொல்லாம். யாசகத்திற்கு வந்தவன்தான்; ஆனால் அவன் விரும்பிய தானம் விசித்திரமாகவே இருந்தது. உலகத்தையெல்லாம் ஒரு குடைக் கீழ் ஆண்ட சக்கரவர்த்தியிடம் வந்து சேர்ந்து பொன்னையோ மாட மாளிகைகளையோ நாடு நகரங்களையோ கேட்கவில்லை. 'எனக்கு மூன்று அடி மண் வேணும்!" என்றுதான் யாசித்தான். அந்தக் குட்டைக் கால்களால் அளந்து கொள்ளக்கூடிய மூன்றே அடி மண்தான்!

நல்லது, கதை தெரிந்துவிட்டதல்லவா? மகா பலசாலியான அந்தச் சக்கரவர்த்தி மகாபலிதான். இந்த விசித்திரக் குள்ளன் வேறு யாருமில்லை; மாயக் கள்ளனான மகாவிஷ்ணுதான்.

மூன்று அடி மண் தானம் வாங்கி அதற்கு அறிகுறியாக நீரைக் கையில் ஏற்றதும் குள்ளன் நிமிர்ந்து வளரத் தொடங்கி

Koviloor Digital Library

விட்டான், நிலம் கடந்த நெடுமுடி அண்ணலாக ! வளர்ந்து வளர்ந்து நிலத்தை அளந்து, திசைகளை அளந்து வானத்தையும் அளந்துவிட்டானாம், இரண்டு அடிகளினாலும். மூன்றாவது அடி அளப்பதற்கு மண்ணும் இல்லை; விண்ணும் இல்லை. மகாபலியின் முடியிலேயே அந்த மூன்றாவது அடியை வைத்துக் கர்வ பங்கம் செய்து அருள்செய்தான் என்பது புராணம்.

இந்த ஹரிகதை பொய்கையாருக்குப் பிரியமான கதைகளுள் ஒன்று. இதை ஓரிடத்தில் இந்த ஆழ்வார்,

பாரளவும் ஓரடிவைத்(து) ஓரடியும் பாருடுத்த
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே!

[பார் - (இங்கே) பூமிப் பரப்பு.]

என்று அந்த நிமிர்ந்த நிலையைக் கம்பீரமாய்க் குறிப் பிடுகிறார். 'இந்த உலகளந்த விசித்திரந்தான் எப்படியோ? அளக்கிறதென்றால் அடிமேல் அடியெடுத்து வைக்க வேணுமல்லவா? நின்ற நிலையிலே அளந்துவிட்டாயா?' என்றும் வியந்து பேசுகிறார்.

இப்படி மகாவிஷ்ணு அளந்த மண்ணுலகத்தை,

சேவடியை நீட்டித் திசைநடுங்க, விண்துளங்க,
மாவடிவில் நீஅளந்த மண்.

(சேவடி - செந்தாமரை போன்ற திருவடிகள். துளங்க - நடுங்கும்படி. மாவடிவு - பெரிய வடிவம்.)

என்று குறிப்பிடுகிறார்.

மண்ணை அளப்பதற்குக் காலை நீட்டியதும், திசை நடுங்க விண்ணும் நடுங்கிப் போய்விட்டதாம். வடிவம் அப்படி நீண்டுகொண்டே போயிற்று; பருத்துக் கொண்டே போயிற்று!

Koviloor Digital Library

அடியும் படிகடப்பத் தோள்திசைமேல் செல்ல,
முடியும் விசும் (பு) அளந்த தென்பர்

(படி -பூமி. விசும்பு - வானம்; வானுலகம்)

என்று அதே உலகளந்த கதையைக் குறித்துப் பாடுகிறார்.

இப்படியெல்லாம் இக் கதையைக் கவிச் சுவையோடும் பக்திச் சுவையோடும் சொல்லுகிறாரே பொய்கையாழ்வார், இதன் பொருள்தான் என்ன? மகாபலி செய்த தவறுதான் என்ன? மகா பலசாலியாக இருந்தது தவறா? பக்தனாக இருந்தது தவறா? வள்ளலாக இருந்தது தவறா? விஷ்ணு பக்தனாக இருந்த மகாபலியை விஷ்ணுவே தண்டித்ததற்குக் காரணந்தான் என்ன?

மகாபலியைத் தண்டித்ததற்கு அவனுடைய வீரமாவது வண்மையாவது காரணமில்லை. ஆனால் கடவுளுடைய பூமியைத் தன்னுடைய பூமியாகக் கருதிவிட்டான், அந்த அசுர சக்ரவர்த்தி. அத்தனை தானதருமங்கள் செய்யும் போதும், 'உலகம் என்னுடையது' என்றுதான் எண்ணியிருந்தான். அந்தச் செல்வச் செருக்கைப் போக்கிஅவனுக்கும் அருள் செய்த கதைதான் உலகளந்த கதை என்கிறார்கள் பக்தர்கள். 'இந்த மண்ணுலகம் எந்த முதலாளிக்கும் சொந்தமானதில்லை; எந்தச் சக்கரவர்த்திக்கும்கூடச் சொந்தமானதில்லை!' என்று அறிவு கொளுத்தி,

வாமனன் மண் இது!

[வாமனன் - குள்ள வடிவமாக வந்த விஷ்ணு.]

- அதாவது கடவுளுக்கே பூமி சொந்தமானது - என்று சித்தாந்தப் படுத்துகிறதாம் இந்த வாமனன் கதை.

இந்த உண்மையை உபதேசிக்க, சேஷசயன மூர்த்தி ஞானத் தெளிவாகிய பாற்கடலையும் அந்தச் சேஷசயனத்தையும் துறந்து வந்தாராம், இந்த மண்மீது,

Koviloor Digital Library

மூன்றடி மண்ணை யாசிக்கும் குள்ளனாக. 'நெஞ்சே!' இத்தகைய பெருமானுடைய அந்த உலகளந்த திருவடிகளைச் சரணமாக அடைந்து வாழ்' என்று பொய்கையாழ்வார் தமது நெஞ்சை நோக்கி உபதேசம் செய்கிறார்.

'நானே பெரியவன்; நானே சக்கரவர்த்தி; நான், நான்!' என்று சக்கரவர்த்தியின் உள்ளத்தில் ஆட்சி செலுத்திய அசுர இருளை ஒழித்து, 'உலகம் கடவுளுக்கே சொந்தம்; எனவே எல்லாருக்கும் பொது' என்ற தத்துவத்தை வெளியிடும் வாமனன் கதை, எத்தகைய பெருந்தத்துவத்தைப் புதைபொருளாக உடையது!

இத்தகைய உலகளந்த மூர்த்தியைக் காண்பது எளிது என்கிறார் பொய்கையார். சரணாகதி வழியாலும் அன்பு வழியாலும் இந்த மூர்தியைக் காண முடியும் என்பது இந்த ஆழ்வார் கருத்து. இந்தக் கதையின் பொருளும் அத்தகைய பக்தர்களுக்கு நன்கு விளங்கியிருக்க வேண்டும். ஆனால்,

ஏழுலகும் தாயினவும் எண்திசையும் போயினவும்,
சூழ்அரவப் பொங்கணையான் தோள்.

[தாயினவும் - தாவினவும். சூழ் அரவப் பொங்கணையான் - ஆதிசேஷனைச் சிறந்த படுக்கையாகவுடைய விஷ்ணு.]

என்று வருணிக்கப்படும் அந்தத் தோளைக் கண்டவர்கள் யார்?

சர்வ சக்திக்கு அறிகுறியான தோளைக் கண்டவரு மில்லை; அகிலலோக ஆட்சிக்கு அறிகுறியான அந்த முடியைக் கண்டவரும் இல்லை.

உணர்வார்ஆர் உன்பெருமை ஊழியதோ றூழி?
உணர்வார் ஆர் உன்உருவம் தன்னை?-உணர்வார் ஆர்
விண் அகத்தாய்! மண் அகத்தாய்! வேங்கடத்தாய்! நால்வேதப்
பண் அகத்தாய்! நீகிடந்த பால்.

Koviloor Digital Library

[ஊழிதோறு ஊழி - காலம் உள்ள அளவும். விண் அகத்தாய் - வானத்தில் இருப்பவனே. மண் அகத்தாய் - இந்த மண்ணுலகிலும் இருப்பவனே. பண் அகத்தாய் - பண்ணுக்குள்ளே இசை வடிவமாக இருப்பவனே. பால் - (இங்கே) பாற்கடல்.]

என்று பொய்கையாழ்வார் எவ்வளவு தெளிவாகப் பாடியிருக்கிறார்!

'உணர்வார் ஆர்?' என்ற அந்த வினாவைத்தான் பாருங்கள். அவன் தன்மை அவனாலும் அறிய முடியாதது என்பது குறிப்பு. 'உணர்வார் ஆர்?' என்ற வினா திரும்பத் திரும்ப வந்து விழுகிறது நம் செவியிலே.

அவனுடைய பெருமையை அறிய முடியாது என்று சொல்லுகிறவர், அந்தப் பெருமான் தன் பரம கருணையால் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறானே அந்த உருவங்களையும் உள்ளபடி அறிந்துகொள்ள முடியாது என்கிறார். வாமனாவதாரம் முதலான அவதாரங்களாகத் தோன்றிய அந்த உருவங்களையும் கேவலம் அறிவைக் கெண்டு அறிந்து கொள்ள முடியாதாம். பக்தர்கள் உகந்த உருவங்களிலெல்லாம் அந்த இஷ்டமூர்த்தி உகந்து தோன்றுகிறான் என்று ஆழ்வார் உறுதி கூறுகிறாரே, அந்த உருவங்களைத்தான் உள்ளபடி உணர்ந்துகொள்ள முடிகிறதா?

பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிறான் என்று புராணம் சொல்லுகிறதே, அந்தப் பாற்கடலைத்தான் உள்ளபடி உணர்ந்தவர் யார் என்றும் பொய்கையாழ்வார் கேட்கிறார்.

புராணங்களின் உட்பொருளை உணர்ந்தவர்கள், பகவான் விண்ணிலும் மண்ணிலும் ஒருங்கே வியாபித்திருக்கிறான் என்று ஒருவாறு உணர்ந்து கொள்ளத்தான்

Koviloor Digital Library

செய்கிறார்கள். இந்த உண்மையையும் உலகளந்த கதை வற்புறுத்துவதால், உலகம் கடவுளுக்கே சொந்தம் என்ற படிப்பினை கிடைக்கிறது இந்தக் கதையிலே.

பகவான் ஸ்தூல உலகங்களை மட்டுமா அளந்தான்? சூட்சம உலகங்களையும் அளந்து அந்த உலகங்களையும் வியாபித்திருக்கிறானாம். கருத்துலகு, கீத உலகு போன்ற உலகங்களையும் அதிசூட்சுமமாக வியாபித்திருக்கிறானாம்.

இந்த உண்மையை வலியுறுத்தவே, 'நால் வேதப் பண்ணகத்தாய்!' என்று எம்பெருமானை அழைக்கிறார் பொய்கையாழ்வார். விண்ணிலும் மண்ணிலும் இருப்பவன் வேதங்களின் பண்ணிலும் இருந்து அருள் சுரக்கிறான்; திருப்பதி மலை போன்ற தலங்களிலும் இருந்து அருள் செய்கிறானாம், 'வாமனன் மண் இது' என்கிறார்.

இந்த உண்மையைத்தான் எவ்வளவு அதிசயமாக வெளியிடுகிறது, வாமனனாகி மண்ணையும் விண்ணையும் ஒருங்கே அளந்த அற்புதக் கதை.

அசுர இருளை ஒழித்துத் தன் அருளாகிய ஒளியைப் பரப்பியிருக்கிறானாம் ஈசுவரன் விண்ணிலும் மண்ணிலும் - கருத்துலகிலும்கூட. தன் அருள்வெளியிலே அண்ட கோடி களையும், நம்முடைய எண்ணங்கள் உணர்ச்சிகளையும் கூடத் திகழ வைத்திருக்கிறானாம் பகவான்; - பார்க்கும் இடங் களிலும் பாராத இடங்களிலும்கூடத் தன்னைப் பார்த்துக் கொள்ளும்படி.

'இவ்வளவு பொருளாழம் இருக்கிறதா? ''மூவடி மண்தா'' என்று யாசித்த குள்ளன் கதையிலே?' என்று கேட்கலாம். சில புராணக் கதைகளில் எவ்வளவோ பொருளாழம் இருக்கத்தான் இருக்கிறது. எவ்வளவோ நுட்பமான தத்துவங்களையும் சில கதைகள் ரஸமாய்க்

Koviloor Digital Library

குறிப்பிட்டு, எவ்வளவு எளிதாக்கிவிடுகின்றன! தத்துவ நூலார் எவ்வளவோ சிரமப்பட்டு உணர்த்த முயலும் உண்மைகளையும், ஒழுக்க நூலார் தேர்ந்தெடுத்து உபதேசிக்கும் உண்மைகளையும், சில சமயங்களில் பௌராணிகர்கள் எவ்வளவு அழகான கதை வடிவங்களில் கற்பித்து விடுகின்றனர்! இத்தகைய கதைகளில் உலகளந்த கதையும் ஒன்று.

கஜேந்திர மோட்சம்

பக்தி, விசுவாசம் பரோபகார சிந்தை முதலான நல்ல காரியங்களில் நம்மைச் செலுத்தும் ஹரிகதைகளிலே 'கஜேந்திர மோட்ச'த்திற்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. இந்தக் கதை இந்தத் தலைமுறையிலும் பிரசித்தமானதுதான்; பொய்கையாழ்வார் காலத்திலே மிகவும் பிரசித்தமாயிருந்திருக்கவேண்டும்.

கஜேந்திர மோட்சம் என்று சொன்னவுடனேயே 'யானை முதலையிடம் அகப்பட்டுக்கொண்ட அந்தக் கதைதானே? அந்த யானை துயரம் பொறுக்க முடியாமல் கதறியிருக்க வேண்டும். அந்தக் கதறல் திருப்பதிமணி, ''கோவிந்தா!'' என்று பக்தர்கள் செவியிலே கதறுவதுபோல் பகவான் காதில், ''ஆதிமூலமே!'' என்று விழுந்ததாம். உடனே அந்த ஆதிமூலம் வைகுண்ட லோகத்திலிருந்து இறங்கிக் ''கருட' விமானத்திலோ, அதுவுமில்லாமலோ, ஓடிவந்து அந்த யானையின் காலை முதலை வாயிலிருந்து விடுவித்தாராம். இதுதானே கதை?' என்று சாதாரணமாய்ச் சொல்லி விடலாம்.

பொய்கையாழ்வாருக்கோ இது ஒரு சாதாரணமான கதையல்ல. 'எங்கும் கடவுள்; எல்லாம் கடவுள்!' என்று வேதாந்தங்களும், 'எல்லாம் வல்ல கடவுள்; எல்லாவற்றையும்

Koviloor Digital Library

கடந்துநிற்கும் கடவுள்' என்று உலகத்திலுள்ள பல்வேறு சித்தாந்தங்களும் முழக்குகின்றன, இல்லையா? ஆனால் அதே கடவுள் யானை அழைத்த குரலுக்கும் ஓடிவந்தான் என்று சொல்வதில் பொய்கையாழ்வாருக்கு ஒரு விசேஷ திருப்தி.

இப்போது படித்துப் பாருங்கள், இந்த ஆழ்வாரின் இந்தப் பாட்டை:

இறையும் நிலனும் இருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயும் ஆவான் - பிறை மருப்பின்
பைங்கண்மால் யானைப் படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய், தெளி

[இறையும் - இறைவனாகவும் தலைவனாகவும். நிலன் - நிலம். இரு விசும்பு - (இங்கே) பரவிய ஆகாசம். அறை புனல் - மோதுகிற தண்ணீர். செந்தீ - சிவந்த நெருப்பு. பிறை மருப்பின் - பிறைச் சந்திரனைப் போன்ற தந்தத்தையுடைய. பைங்கண் - பசுமை பூத்ததுபோல் தோன்றும் கண்கள். மால் யானை - பெரிய யானை. செங்கண் மால் - சிவந்த கண்களையுடைய திருமால்.]

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இறைவனாக இருந்தும், எம்பெருமான் 'பரத்வம்' என்ற அந்த மேன்மையோடு நின்றுவிடவில்லையாம். அந்தப் பரலோக சிங்காசனத்திலிருந்து குதித்திறங்கி இந்த மண்ணிலும் அந்தர்யாமியாகப் பரவியிருக்கிறானாம். எங்கும் பரவியிருக்கும் ஆகாசத்திற்குள்ளும் ஆகாசமாய்ப் பரவிக் கிடக்கிறானாம். காற்றோடு காற்றாக வந்து நமக்கு உயிரை ஊட்டுகிறான்; தண்ணீரிலிருந்து தாகம் தணிக்கிறான்; நெருப்பிலிருந்து சுடுகிறான். எத்தனையோ பணிகள் புரிகிறான்; லீலைகள் புரிகிறான்! எஜமானாகவும் இருக்கிறான்; பணியாளனாகவும் இருக்கிறான்!

Koviloor Digital Library

சுருங்கச் சொன்னால், எல்லாவற்றுக்கும் நாதன், எல்லாமாகி எங்குமாகிப் படர் கொடிக்குக் கொழு கொம்பு போல் உலகத்தைத் தாங்கித் தன்மீது சிருஷ்டி என்ற அற்புதத்தைப் படர விட்டிருக்கிறானாம். கொழு கொம்பு சரியாக இருப்பதால் நாம் பயமில்லாமல் கவலையில்லாமல் வாழ்க்கை நடத்தலாம்.

ஸர்வேசுவரன் ஸர்வாந்தர்யாமியாக இருந்து வேற்றுமை பாராட்டாமல் எல்லாரையும் காப்பாற்றுவதால், 'உயிர்க் குலம் ஒன்றே; மக்கள் அனைவரும் சகோதரர்; மற்ற உயிர்களும் நம்முடைய இளைய சகோதரர்கள்!' என்றெல்லாம் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

பகவான் நம்மைக் காப்பாற்றுவதோடு பிற உயிர்களையும் காப்பாற்றி வருகிறான், வேற்றுமையில்லாமல்; எனவே அஹிம்ஸா தர்மந்தான் நல்ல தர்மம், நல்ல நெறி. இப்படியெல்லாம் வேதாந்த - சித்தாந்த பாடங்களைக் கற்பிப்பது கஜேந்திர மோட்சம் என்ற புராணக் கதை.

அந்த யானையைப் 'பிறை மருப்பின் பைங்கண் மால் யானை' என்று வருணிப்பது கவனிக்கத் தக்கது. யானையின் தந்தத்தைப் 'பிறைச் சந்திரன் போன்ற தந்தம்' என்கிறார். அந்தக் கண்ணின் நிலையையும் 'பைங்கண்' என்று அருமையாக வருணிக்கிறார். ஏன் இந்த வருணனைகள்? கொஞ்சம் ஆலோசித்துப் பார்ப்போம்.

குளத்திலே விழுந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றிக் கரையில் எடுத்துப் போட்டவர்கள், 'ஐயோ, என்ன முக அழகு, என்ன தலை அழகு! இந்தக் கை கால்களின் அழகைத்தான் பாருங்கள்! தந்தப் பாவைபோல் கிடக்கிறதே குழந்தை!' என்றெல்லாம் சொல்லிச் சொல்லிக் கண்ணைக் கசக்குவார்களல்லவா? அப்படியே அன்புக் கடவுளான திருமாலும் பரிந்து சிவந்த கண்களுடன் (செங்கண்மால்)

Koviloor Digital Library

முதலை வாயிலிருந்து தான் விடுவித்த அந்த யானையினுடைய தந்தத்தின் அழகிலும் கண்களின் அழகிலும் ஈடுபட்டுக் கரைந்து போகிறானாம்.

'இப்படிப்பட்ட பகவான் (செங்கண்மால்) உண்டு; நாம் உண்டு; நம்முடைய துயரம் அவனுடைய நெஞ்சிலே படும், கண்ணிலே படும்; நெஞ்சமே! அஞ்சாதே, தெளிந்துகொள்' என்று, இந்த ஆழ்வார் தாம் சொல்லும் இந்த யானைக் கதையை முடிக்கிறார்.

ஆம்; ஒரு நீர்நிலையில் முதலையிடம் அகப்பட்டுக் கொண்ட ஒரு யானைக்காக, 'அரைகுலையத் தலைகுலைய' ஓடிவந்தான், ஸம்ஸார சமுத்திரத்திலே ஐம்புலன்கள் என்ற ஐந்து முதலைகளின் வாயிலே பட்டுத் தவிக்கும் நம்மைக் கைவிடுவானா? - என்பது குறிப்பு.

முதலை வாயிலிருந்து பகவானால் காப்பாற்றப்பட்ட யானையைக் 'கஜேந்திராழ்வான்' என்று போற்றுகிறது பக்தருலகம். யானையையும் கஜேந்திர ஆழ்வானாகச் செய்த பகவத் கிருபை நமக்கு என்ன என்ன செய்யக் காத்திருக்கிறதோ! - என்பது பக்தர் பரவச நிலை.

எனினும் மதம் பிடித்த யானைகளைப்போல் கண்டபடி திரிகிறவர்களுக்குப் பகவத் கிருபையும் பயன்படுவதில்லை என்கிறார் பொய்கையார்:

வாரி சுருக்கி மதக்களி(று) ஐந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ, - கூரிய
மெய்ஞ்ஞானத் தால்உணர்வார் காண்பரே மேல் ஒருநாள்
கைந்நாகம் காத்தான் கழல்.

[வாரி - நீர்; (இங்கே தாகத்தையும் தாபத்தையும் உண்டாக்கும் விஷயங்கள். மதக் களிறு - மதம் பிடித்த யானைகள். சேரி - (இங்கே) கண்ட கண்ட இடங்கள்.

Koviloor Digital Library

செந்நிறீஇ - செவ்வையாக நிறுத்தி. கைந்நாகம் - தும்பிக்கையுள்ள யானை; (இங்கே, கஜேந்திரன்.) கழல் - திருவடிகள்.]

புலன்களை அடக்கிச் செவ்வையாக நிலைநிறுத்தினால் ஞானம் கூர்மையாகும்; நேர்மையாகும். அந்த மெய்ஞ் ஞானத்தால் உணர்ந்து பார்க்கிறவர்கள் கஜேந்திரனைக் காப்பாற்றிய திருவடிகளைப் பார்ப்பார்களாம்.

ஆனால் இந்திரிய ஜயத்திற்கும் பகவத் கிருபை வேண்டியதுதான். இந்திரியங்களாகிய மதயானைகள் கண்ட கண்ட நீர்நிலைகளில் புகுந்து முதலைபோன்ற ஐந்துக்களால் ஆபத்திற்கு உள்ளாகாமல் இருக்க வேண்டுமே; அந்த மதயானைகளை மடக்கி அடக்கி ஆளவேண்டுமே; - அது லேசான காரியமா? எனவே பகவத் கிருபையை அடைய இந்திரிய ஜயந்தான் சாதனமென்று முடிவுகட்டவில்லை.

பகவானுடைய நாமத்தை நினைத்துக் கொண்டிருப் பதாலும் சொல்லிக் கொண்டிருப்பதாலும், பகவத் கிருபை சுலபமாகும்; இந்திரிய ஜயமும் சுலபமாகக் கூடும். இது பூஜை, ஜபம், தவம் முதலான நியமங்களைக் காட்டிலும் சுலபமான வழி என்பது பக்தர்களின் கருத்து. இதைக் காட்டிலும் சுலபமான வழி கஜேந்திர மோட்சம் போன்ற ஹரிகதைகளைக் கேட்பதும் சொல்வதும் நினைப்பதுந்தான்.

கஜேந்திர மோட்சம் போன்ற புராணக் கதைகளில் கைங்கரியத்தைப் பற்றிய சில அருமையான கருத்துக்களையும் புதைபொருளாகக் காணலாம் என்பர். முதலை வாய்ப்பட்ட காலத்தில் கஜேந்திர யானை தன் இஷ்ட தெய்வத்திற்கு அர்ச்சனை செய்ய வேண்டுமென்று தாமரைப் பூவைத் தும்பிக்கையில் கொய்து வைத்திருந்ததாம். தான் உயிருக்குப்

Koviloor Digital Library

போராடிக்கொண்டிருந்த அந்த நேரத்திலும் அந்த மலரை அது கீழே போட்டு விடவில்லை. திருமால் முதலையை வதஞ் செய்தபின் அந்தத் தாமரைப் பூவைத் தன்அடியில் இடுவித்து யானையின் திருப்பணி நோன்பை நிறைவேற்றிக் கொடுத்தானாம். கைங்கரிய ஆசை உள்ளபடியே உள்ளத்தில் நிலைபெற்றுவிட்டால் அந்த ஆசை எப்படியும் நிறை வேறுமாறு உதவுகிறான் இறைவன் என்பதையும் கஜேந்திரன் கதை ஓர் உட்பொருளாகக் காட்டுகிறது.

ஆலிலைமேல் பாலன்

உலகளந்த கதைபோல், கஜேந்திரன் கதைபோல், பொருளும் பயனுமுள்ள வேறு ஹரி கதைகளும் உண்டு. இவற்றில், 'ஆலிலைமேல் பாலன்' என்ற கதையும் ஒன்று.

உலகங்களுக்கெல்லாம் பிரளய காலத்திலே முடிவு வந்துவிடுகிறதாம். 'ஐயோ! இத்தனை அழகுகளையும் காட்சிகளையும் புற உலகங்களையும் அக உலகங்களையும் அழித்துவிடுவதா? என்ன பொருளற்ற நாசவேலை!' என்று சொல்லக்கூடுமல்லவா? அதுதான் இல்லை.

'முடிவு' என்றால் 'அழிவு' என்பதில்லை. இந்த இயற்கைச் செல்வங்களெல்லாம் அழிந்து போகாதபடி யுக முடிவில் வயிற்றிலே வைத்துக் கொண்டு தாயாகிய ஸர்வசக்தி காப்பாற்றுகிறதாம்.

'அப்படியா? உலகங்களெல்லாம் அடங்கக்கூடிய அவ்வளவு பெரிய வயிறா? அப்படியானால் அந்த உருவந்தான் எப்படியிருக்குமோ? எப்பேர்ப்பட்ட மகா மகா விசுவரூபமோ?' என்றெல்லாம் மனம் கூசுகிறது; புத்தி பிரமித்துப் போகிறதல்லவா? 'அதுதான் இல்லை; அந்த நிலையில் பரம்பொருள் குழந்தை வடிவமாகத்தான் இருக்கிறது!' என்று கருதுகிறது புராண மனோபாவம்.

Koviloor Digital Library

குழந்தையிலும் சிறு குழந்தைதானாம், அந்த மகா ரூபம்; ஒரு கையகலத்து ஆலிலைப் பரப்பினுள் அடங்கும் சின்னஞ்சிறு வடிவந்தானாம்.

பகவத் பக்தியோடு, குழந்தைகளிடத்திலுந்தான் நம் முன்னோர்களுக்கு எவ்வளவு பக்தி! தெய்வத்தை மகாப் பிரளய காலத்திலும் குழந்தையாகப் பார்த்தவர்கள், குழந்தையையும் தெய்வமாகத்தானே பார்த்திருக்க வேண்டும்?

அந்த விசுவரூபத்தை அப்படிச் சுருக்கிக் கொண்ட போதிலும், அந்தச் சிறு குழந்தை தங்குவதற்கும் இடம் வேண்டுமல்லவா? அந்த மகாப் பிரளய வெள்ளத்திலே ஆதார பூமியோ, தீவுகளோ இருக்க முடியுமா?

உலகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் சூரிய பகவானுக்குங்கூட நிலையுமில்லை, நீச்சுமில்லை என்றிருக்கும் போது, 'அந்தக் குழந்தை எங்கே எப்படி இருக்குமோ? எந்தப் படகில் மிதந்துகொண்டிருக்குமோ?' என்ற கவலையும் ஆதி பௌராணிகர்களுக்கு ஏற்பட்டது.

எவ்வளவு தைரியமாக அவர்கள் அந்தத் தெய்வக் குழந்தையை ஓர் ஆலிலைமேல் - சயனிப்பதற்குப் சிறிதும் பற்றாத ஓர் ஆலந்தளிரில் - கிடத்தி, அந்த ஆலிலையை அந்தப் பிரளய மகாசமுத்திரத்திலே மிதக்கவிட்டார்கள்!

இந்தக் கற்பனையைப் பொய்கையாழ்வார் எவ்வளவு சமத்காரமாக ஒரு வெண்பாவில் அமைத்திருக்கிறார்:

பாலன் தன(து)உருவாய் ஏழுல(கு)உண்டு ஆலிலையின்
மேல்அன்று நீவளர்ந்த மெய்என்பர்! - ஆலன்று
வேலைநீர் உள்ளதோ? விண்ணதோ? மண்ணதோ?
சோலைசூழ் குன்றெடுத்தாய்! சொல்லு.

Koviloor Digital Library

[உண்டு -(இங்கே) உண்பதுபோல் வயிற்றிலே வைத்து. அன்று - அந்தப் பிரளய காலத்திலே. வளர்ந்த - கண் வளர்ந்த. வேலைநீர் - சமுத்திர வெள்ளம்; (இங்கே) பிரளய சமுத்திரம். குன்று - (இங்கே) கோவர்த்தனகிரி.]

மலையைக் குடையாகப் பிடித்த அந்த அற்புதத்திற்கும் மேலான அற்புதம் ஆலிலைமேல் ஒரு பாலனாகி அகிலலோகங்களையும் உண்டு காப்பாற்றுவது. இது மெய்தான் என்கிறார்களாம் பௌராணிகர்கள். இந்தப் புராண உண்மையை அலசி அலசிச் கேள்வி போடுகிறார்.

'அந்த ஆலிலை எந்த ஆலமரத்தில் தோன்றியதோ?' என்று கேட்கிறார். 'அந்த ஆலமரம் எந்த அடிநிலத்திலிருந்து தோன்றியதோ?' 'பிரளய வெள்ளத்திலே கரைந்துபோன மண்ணிலிருந்தா? அல்லது பிடிப்பு ஒன்றுமில்லாத விண்ணி லிருந்தா? அல்லது ஒரே வெள்ளமாய்ப் போர்த்துக் கிடக்கும் அந்தப் பிரளய மகாசமுத்திரத்திலேயே வேரூன்றி அந்த வெள்ளத்திலேயே தளிரோடி இலை வீசிவிட்டதா?' இப்படிக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறார் ஆழ்வார்.

இப்படியே கேள்விக்குமேல் கேள்வி முளைத்துச் செழித்துக் கிளைத்து இலைமேல் இலையாக வீசிக்கொண்டே போகமுடியுமல்லவா? இவைகளுக்கெல்லாம் வைதிகர்கள் சொல்லும் பதில் சுருக்கமானதுதான். 'ஸர்வ சக்தியின் அதிமானுஷ சேஷ்டிதம்' என்கிறார்கள். அதற்கும் அஞ்சாதவர்களை நோக்கி, 'அகடித கடநா சாமர்த்தியம்' என்பார்கள். இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கெல்லாம் பயப்படாதவர்களை நோக்கி, 'நம்பு; குதர்க்கம் பண்ணாதே; நம்பினார் நலம் பெறுவர்' என்று நம்பிக்கையின் அற்புதத்தை வற்புறுத்துவார்கள். 'முனிவர்களின் தீர்ப்பல்லவா?' என்றும் சொல்லுவார்கள்.

'நம்பிக்கையில் ஆறுதல் இல்லையா? கற்பனைகளிலும் உண்மையில்லையா?' என்பது பொய்கையாழ்வார் போன்ற

Koviloor Digital Library

ஞான பக்தர்களின் மனநிலையென்று தோன்றுகிறது. பக்தர்கள் குழந்தைபோல் இருப்பார்கள்; ஞான பக்தர்களோ ஞானக் குழந்தைகள்! ஒவ்வொரு மதத்திலும் இத்தகைய ஞானக் குழந்தைகளைப் பார்க்கலாம்.

இவர்களுடைய கொள்கைகள் சிலவற்றை ஆராய்ச்சிக் காரர்கள், 'மூட நம்பிக்கை'யென்று சொல்லிவிடலாம். ஆனால் நம்பத் தகாத விஷயங்களை நம்பும் மூட நம்பிக்கை தாமா இவை?

கவித்வ சக்தியோடு வெளிப்படும் பக்தி அநுபவங் களுக்குப் புராணக் கதை சில சமயங்களில் பேருதவி புரிகின்றன. இக் கதைகள் பக்தர்கள் என்ற ஞானக் குழந்தைகளின் அநுபவங்களைத் தூண்டுவதும் உண்டு. நமக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் மனோபாவத்தைத் தூண்டும் அழகான கதைகளை அநுபவிக்கலாமல்லவா?

'அழகே உண்மை; உண்மையே அழகு' என்பது நவீன ரஸிகர்களும் ஒப்புக் கொள்ளக் கூடியதுதானே?

★

Koviloor Digital Library

7. இவர் கண்ட கண்ணன்

பொதுவாக ஆழ்வார்களுக்கெல்லாம் கிருஷ்ண லீலைகளில் காதல் அதிகம். ஆழ்வார்களில் எல்லாம் காலத்தால் முதன்மை பெற்ற பொய்கையாழ்வாரின் பாடல்களிலும் கிருஷ்ண லீலைகளின் பிரஸ்தாபங்களைக் காணலாம்.

பகவானைப் பொதுவாகக் குறிப்பிட வேண்டிய இடங்களிலும் **'கண்ணன்'** என்று பொய்கையாழ்வார் குறிப்பிடுவதுண்டு. ஓரிடத்தில் இவர், 'அசைவில் சீர்க் கண்ணன் நெடுமால்' என்கிறார்.

வேறோர் இடத்தில் அறிதுயில் அமர்ந்த வண்ணம் உலகத்தைக் காப்பாற்றும் சேஷசயன மூர்த்தியை, 'அரவணைமேல் பேராயன்' (சர்ப்ப சயனத்தின் மேலுள்ள பெரிய கோனார்) என்று குறிப்பிடுகிறார்.

அந்தக் கோனாரின் லீலைகளையெல்லாம் பக்திக் கண்ணால் பார்க்கவேண்டும் என்பதும், அந்தப் பெரிய கோனார் பாற் கடலைவிட்டு ஆயர் குலத்தில் பிறந்து புரிந்த லீலைகளையும் பக்தியோடு அநுபவிக்க வேண்டும் என்பதும் குறிப்பு.

கண்ணனுடைய பாரதக் கதைகளைக் காட்டிலும் பாகவதத்திலே பிரஸ்தாபிக்கப்படும் கிருஷ்ண லீலைகள் பொய்கையாழ்வாரை அதிக அளவில் வசீகரிக்கின்றன. ஆனால் ஆழ்வார்கள் காலத்திற்குப் பின்புதான் ஸ்ரீமத் பாகவத புராணமே ஏற்பட்டிருக்கவேண்டும் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகிறார்கள். இதைக் குறித்து நாம் இங்கே

Koviloor Digital Library

ஆராய்ச்சி செய்யப் போவதில்லை. பொதுவாகப் பார்க்கும் போது, கண்ணன் கதைகள் பாகவத புராண காலத்திற்கு முன்பே வழங்கி வந்தன என்று சொல்லலாம்.

தமிழ் நாட்டையும் வட இந்தியாவைப் போலவே இக்கதைகள் வசீகரித்த வண்ணமாயிருந்திருக்கின்றன. இந்தக் கதைகளே பெரும்பாலும் வைணவத்தை இந்நாட்டில் உருவாக்கியுள்ளனவென்று ஊகிக்கலாம்.

'கடல் வண்ணன் கண்ணன்; கடற்கரையிலே உள்ள வெண்மணல் போன்றவன், அவனது அண்ணனான பலராமன்' என்று இரு தெய்வச் சகோதரரையும் சேர்த்து வருணிக்கிறது ஒரு பழங் செய்யுள். திருமாலிருஞ்சோலை மலையில் அவ்விரு தெய்வங்களும் கோயில் கொண்டிருப்பதாகப் பரிபாடல் தெரிவிக்கிறது. சிலையில் வழிபட்டவர்கள் கண்ணனைக் கரிய திருவுருவம் உடையவனாய்ச் செவ்வாடை உடுத்துச் சங்கு, சக்கரம் ஏந்தியவனாகவும், பல தேவனை வெண்ணிற மேனியனாய்க் கரிய ஆடை உடுத்துக் கலப்பையும் தண்டும் ஏந்தியவனாகவும் அமைத்துக் கொண்டனர். இந்த இரு சகோதரரையும் ஆண்டாள்,

> செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
> உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

என்று திருப்பாவைப் பாசுரமொன்றில் குறிப்பிடுகிறாள்.

'ஆதிகவி' என்றும், முதலாழ்வார்களிலும் முதலாழ்வார் என்றும் சொல்லப்படும் பொய்கையாரே பெரும்பாலும் கண்ணன் கதைகளில் ஈடுபட்டுத்தான் ஸ்ரீவைஷ்ணவத்திலும் ஈடுபட்டிருக்கவேண்டும். இவர் ராம கதையையும் பிரஸ்தாபிக்கிறார். உதாரணமாக, இலங்கை செல்வதற்குக் கடலை அடைந்து ராமன் அணை கட்டியதையும், நாட்டுக்குத் திரும்பும்போது அணையை உடைத்துவிட்டதையும்

Koviloor Digital Library

பிரஸ்தாபிக்கிறார். எனினும், கிருஷ்ணலீலைகளைப் பிரஸ்தாபிக்கும்போது இவருக்கு ஏற்படும் குதூகலம் தனிச்சிறப்பு வாய்ந்தது எனக் கருதலாம்.

பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி

ஓர் உதாரணம்: பூதனை என்ற பேய்மகள் ஒருத்தி தாய் வடிவு கொண்டு வந்து குழந்தைக் கண்ணனுக்குப் பால் கொடுத்துக் கொல்ல முயன்று, தானே கொல்லப்பட்ட கதை பிரசித்தமல்லவா? இக் கதையை உத்ஸாகமாய்க் குறிப்பிடுகிறார் பொய்கையார். வேஷக்காரர்கள் தாங்களே மோசம் போவார்கள் என்பதும், வஞ்சகர் வஞ்சிக்கப்படுவர் என்பதும் இக்கதையின் படிப்பினை. பூதனையை, 'பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி' என்பர் திருமங்கையாழ்வார்.

கையும் களவும்

வேறொரு உதாரணம் : 'கண்ணன் வெண்ணெய் உண்டான்' என்ற வாக்கியத்தைப் பால பாடங்களிலும் காணலாம். கண்ணனுக்கும் வெண்ணெய்க்கும் உள்ள நெருங்கிய தொடர்பை நாம் குழந்தைப் பருவம் முதல் மறப்பதில்லை.

தாயார் கொடுத்த வெண்ணெயை உண்பதைக் காட்டிலும், அந்த வெண்ணெயைத் தாய்க்கும் தெரியாமல் உறியிலிருந்து களவாடி உண்பதில் கண்ணனுக்கு ஆசை அதிகம்.

தன் வீட்டில் மட்டுமல்ல; ஆய்ப்பாடியில் உள்ள வேறு வீடுகளிலிருந்தும் கண்ணன் வெண்ணெய் திருடுவானாம். இந்தத் திருட்டு, வீட்டிலே திருடுவதைக் காட்டிலுங்கூட அவனுக்குப் பிரியமாக இருக்குமாம்.

இத்தகைய வெண்ணெய்த் திருட்டின் பொருள்தான் என்ன? பொய்கையாழ்வாரையே கேட்டுப் பார்ப்போம்.

Koviloor Digital Library

'என் வீட்டில் வெண்ணெய் திருடினான்; அவள் வீட்டிலும் திருடினான்; இவள் வீட்டிலும் திருடி உண்டான்' என்றெல்லாம் எத்தனையோ ஆய்ச்சிமார் குற்றம் சுமத்திய போதிலும், அந்தப் பெரிய ஆய்ச்சி கொஞ்சமும் நம்ப வில்லை. அவனுக்கும் அது ஒரு சுமையாகத் தோன்றவில்லை!

'என் மகனாவது திருடுவதாவது; சுத்தப் பொய்! கண்மணியல்லவா?' என்று ஒரே அடியாகச் சொல்லி விடுவாள். 'கண்ணே! நீ வெண்ணெய் திருடினாயா?' என்று கொஞ்சிக் கேட்பாள். அவனும், 'நானாவது திருடுவதாவது! மோசம்; முழுமோசம்!' என்று சிரித்து விடுவான்.

ஒருநாள் யசோதையே பார்த்துவிட்டாள். 'உன்னுடைய விரல்களிலும் வாயிலும் என்ன?' என்று கேட்டாள். தன் கண்களையும் நம்பாமல் இருக்க முடியுமா? 'அப்படியா செய்தி? உன்னைத் தண்டிக்கப்போகிறேன். இவ்வளவு வெண்ணெய் சாப்பிட்டால் எப்படி ஜீர்ணமாகும்?' என்று சொல்லிக்கொண்டே பிள்ளையை உரலோடு சேர்த்துக் கட்டிவிட்டாள்.

அந்தப் பிள்ளையோ, 'எனக்கும் ஜீர்ணமாகாதா?' என்று கத்துவதும் ஏங்குவதுமாக இருந்தான். அயல் வீட்டுப் பிள்ளைகள் வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கண்ணனுக்கும் அது ஒரு வேடிக்கையாக இருந்தது; கள்ளக் கிருஷ்ணனுக்குத்தான் வெட்கமில்லையே!

இந்தக் கிருஷ்ண லீலையைப் பொய்கையாழ்வார் பின் வருமாறு பாடுகிறார்:

> விரலோடு வாய்தோய்ந்த வெண்ணெய்கண்(டு) ஆய்ச்சி
> உரலோ(டு) உறப்பிணித்த நான்று, - குரல் ஓவா(து)
> ஏங்கி நினைந்(து) அயலார் காண இருந்திலையே?
> ஓங்கோத வண்ணா! உரை.

Koviloor Digital Library

[ஆய்ச்சி - (இங்கே) யசோததை. உறப் பிணித்த - சேர்த்துக் கட்டி வைத்த. நான்று - ஞான்று; பொழுது. ஓவாது - நீங்காமல். இருந்திலையே - இருந்தாயல்லவா? ஓதவண்ணா - கடல் போன்ற வடிவையுடையவனே.]

உண்மையில், வெண்ணெயை விரல்களால் அள்ளி எடுத்து வாயில் போட்டுக் கொண்டபோதே, யசோதை கண்டு கள்ளனைப் பிடித்துக் கொண்டாளாம். அப்பொழுது அந்த வெண்ணெய் தோய்ந்த வாயினாலேயே, 'நான் திருட வில்லை!' என்றான் கண்ணன். 'திருடியதோடு பொய்யும் சொல்லுகிறாயா?' என்ற ஆய்ச்சி, வெறுமனே கயிற்றினால் கட்டி வைத்தாள் துஷ்டப் பிள்ளை அறுத்துக் கொண்டு போய்விடுவான் எனக் கருதி ஒரு பெரிய உரலோடு கட்டி வைத்தாள்.

நெடு நேரம் ஏங்கி ஏங்கி அழுதான். அப்பொழுதும், 'நான் திருடவில்லை; அம்மா! நான் திருடவேயில்லை!' என்றுதான் கத்திக் கொண்டிருந்தானாம். 'அதே சமயத்தில் இன்னும் எங்கே திருடலாம்? எப்போது திருடலாம்?' என்று நினைத்துக் கொண்டிருந்தானாம்.

அந்த நிலையில் எத்தனையோ பேர் வந்து வேடிக்கை பார்த்தார்களல்லவா? எனினும், 'நான் திருடவில்லை; நீங்களே என் உடைமையைத் திருடுகிறீர்கள்!' என்றானாம்.

உண்மைதானே, அவன் பொருளை அவன் எடுத்துக் கொண்டான்! எல்லாம் பகவான் உடைமைதானே, உண்மையில், திருடன் யார்? அவனா?

ஆழ்வாரும் இந்தக் காட்சியைப் பார்க்கிறார். ஆனால் வேடிக்கையாகப் பார்க்கவில்லை. 'கண்ணா! நீயும் களவு செய்யவேண்டுமா? அதற்காக, - ஐயோ, பாவம்! - கயிற்றினால் கட்டப்பட்டாயா? கட்டை அவிழ்க்கத்

Koviloor Digital Library

தெரியாமல் அழுதாயா? என்று பரிந்து கேட்கிறார். அவனோ, 'நான் திருடினதும் இல்லை; ஆய்ச்சி என்னைப் பிடித்ததும் இல்லை!' என்று சாதிக்கிறானாம்.

உள்ளங்களைத் திருடும் கள்ளன்தானே கண்ணன்? வெண்ணெய்போல் இளகி உருகக் கூடிய உள்ளங்களைத் திருடுவதிலும் விசேஷ விருப்பம் உண்டு. அவ்வளவுதான்.

அவனைக் கட்ட முடியுமா? சம்சாரக் கட்டையே அவிழ்க்கிறவனுக்குக் கயிற்று கட்டை அவிழ்க்கத் தெரியாதா? பக்திக் கயிற்றினால்தானே அவனைக் கட்ட முடியும்?

'முழுப் பூசணியைச் சோற்றில் - வெண்ணெயில்தான் - மறைக்க முடியுமா? நீயே சொல்லு கிருஷ்ணா?' என்று மறுபடியும் கேட்கிறார் ஆழ்வார். 'இவற்றில் ஒன்றுமே நடந்ததில்லை!' என்கிறான் கள்ளக் கிருஷ்ணன் என்பது குறிப்பு.

உண்மையிலும் உண்மை! எல்லாம் கவிஞர், பக்தர் முதலானவர்கள் சொல்லும் கதைதானே, எனினும் உண்மையான கதை; நாம் உண்மையெனக் கருதும் வேறுவிதமான நிகழ்ச்சிகளைக் காட்டிலும் மேலான உண்மை!

மரங்களுக்கும் அருளா?

ஒரு நாள் யசோதை கண்ணனைக் கயிற்றினால் உரலில் கட்டி வைத்ததும், முன்போல் குழந்தை அழவில்லை; அவளையும் லட்சியம் செய்யவில்லை. அந்த உரலையும் லட்சியம் செய்யாமல் கண்ணன் தவழ்ந்து போனானாம். உரலும் வேறு கதியில்லாமல் கூடவே போயிற்றாம்.

பக்கத்திலே இருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே போகும்போது உரல் குறுக்காக நின்றுவிட்டது. அதற்காக நின்றிவிடப் போகிறானா கண்ணன்? அந்த நிலையிலும் உரலை இழுத்துக் கொண்டுதான் போனான். ஆம்; அந்த

Koviloor Digital Library

மரங்கள் இரண்டும் முறிந்து விழும்படி இழுத்துக் கொண்டே போய்விட்டானாம்.

மரங்களும் முறிந்தன; குபேர புத்திரர்களின் சாபமும் முறிந்தது! அந்த மரங்கள் உண்மையில் மரங்கள் அல்ல; மதுபான மயக்கத்தினால் நாணம் இன்றி மரம்போல் இருந்துவிட்டு, சாபத்தால் மரங்களே ஆகிவிட்டவர்கள்!

இந்தக் கதையைக் குறிப்பிடும் பொய்கையாழ்வார், 'உலகளந்த அந்த உத்தமனே இப்படியும் ஒரு பால லீலை செய்து, அசுரத் தன்மையோடு மரம்போல் இருந்தவர்களுக்கும் அருள் செய்தான்!' என்று குறிப்பாகக் கூறுகிறார்.

வேறு லீலைகள்

யானைக்கு அருள் செய்தவன், கம்ஸனால் ஏவப்பட்ட மதயானையைக் கொன்றருளிய கதையையும் குறிப்பிடுகிறார் ஆழ்வார். துஷ்டநிக்கிரகம், சிஷ்ட பரிபாலனம் என்ற இரண்டும் ஒரே நாணயத்தின் இருபக்கம்போல - என்பது குறிப்பு.

கண்ணனுடைய துஷ்ட நிக்கிரக லீலைகளில், கம்ஸனால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன் கொக்கின் உருவங்கொண்டு யமுனைக் கரையில் கண்ணபிரானை விழுங்கி ஜீரணம் செய்ய எத்தனித்துத் தானே கொல்லப்பட்ட வரலாற்றையும் குறிப்பிடுகிறார். துஷ்ட அசுரர்களுக்கும் அந்தத் தீவினைக் கூட்டிலிருந்து விடுதலை அருளினான் என்பது பக்தர்களின் கொள்கை.

பாற்கடலை விட்டுக் கண்ணனாக வந்து பிறந்தவனைப் 'பெற்றார் தளை கழல' வந்தவன் என்கிறார் பொய்கையார். பெற்றோரான வசுதேவ, தேவகிகளுடைய விலங்கு கழன்று அவர்கள் விடுதலை பெறும்படியாக வந்தவன், தாய்போல் வந்த பேய்மகளுக்கும் விடுதலை அருளினான்; மற்றை

Koviloor Digital Library

அசுரர்களுக்கும் தீவினைக் கூட்டிலிருந்து விடுதலை அருளினான் என்றெல்லாம் இந்த ஆழ்வார் குறிப்பாய்க் கூறுவதாகக் கருதலாம்.

துஷ்ட நிக்கிரக லீலைகளைப் போல் பரிபாலன லீலைகளும் பக்த இருதயத்தை ஊட்டி வளர்க்கின்றன. மலையால் குடை கவித்து மழை தடுத்த கிருஷ்ண லீலை முக்கியமான சிஷ்ட பரிபாலன லீலைகளுள் ஒன்று.

ஆயர்கள் தேவேந்திரனை வழிபட்டு அவனுக்குச் சோறு படைப்பது வழக்கம். இந்திரன் மழைக் கடவுளானதால் அந்தத் தெய்வத்தின் அருளால் கிடைத்த மழைக்கு நன்றி தெரிவித்துப் பூஜை போட்டார்களாம். மழை இல்லாவிட்டால் மலையில் மாடுகளை மேய்ப்பது எப்படி?

கண்ணன் சொன்னான் : 'கோவர்த்தன மலையிலுள்ள மேய்ச்சல் தரையில்தானே நீங்கள் மாடு மேய்க்கிறீர்கள்? நல்லது; அந்த மலைக்கே நன்றி தெரிவித்துப் பூஜை போட்டுச் சோறு போடுங்கள். பிரத்தியட்ச தெய்வமான அந்த மலையை விட்டு எங்கேயோ இருக்கும் தேவேந்திரனுக்குப் பூஜை போடுவானேன்?' குதர்க்க வாதமா, நாஸ்திகப் பேச்சா? கண்ணனுடைய ஆலோசனை இது!

ஆயர்கள் அப்படியே செய்தார்கள். கோவர்த்தன மலைக்கு இட்ட சோற்றை அந்த மலை சாப்பிட்டதா? கண்ணனே சாப்பிட்டுவிட்டானாம். எல்லாம் ஸர்வாந்தர்யாமியான எம்பெருமானுக்குத்தானே அர்ப்பணம்!

இந்திரனுக்கோ பசியும் சினமும் தாங்க முடியவில்லை. மழைக் கடவுளின் சீற்றத்தால் ஏழு நாள் விடாமல் மழை பெய்தது. ஆனால் கண்ணன் கோபாலன் அல்லவா? பசுக்களைப் பரிபாலிக்க வேண்டியது அவன் கடமைதானே? பசுக்களுக்கும் ஆயர்களுக்கும் ஒரு தீங்கும் நேரிடாதபடி அந்தக் கோவர்த்தன மலையையே குடையாகத் தூக்கிப்

Koviloor Digital Library

பிடித்து அவர்களையெல்லாம் காத்தருளினான் என்பது பிரசித்தமல்லவா? ஆன்மாக்களாகிய பசுக்களைப் பகவான் இப்படியெல்லாம் காப்பாற்றுகிறான் என்பது குறிப்பு.

காளிய மர்த்தனம் முதலான கிருஷ்ண லீலைகளையும் பொய்கையாழ்வார் குறிப்பிடுகிறார். தன் மேன்மையைப் பாராமல் தாழ நின்று கண்ணன் செய்த லீலைகளெல்லாம் இவர் இதயத்தைப் பெரிதும் வசீகரிக்கின்றன.

கோபியருடன் கைகோத்து ஆடிய ராஸக் கிரீடையிலும் ஈடுபடுகிறார் பொய்கையார். நப்பின்னை என்பவளை மணம் புரிவதற்காகக் கண்ணன் பெரிய வடிவுள்ள ஏழு ரிஷபங்களை அடக்கி வென்றான் என்ற ஒரு கதை தமிழ் நாட்டில் வழங்குகிறது. இக் கதையையும் குறிப்பிடுகிறார்.

அவனுக்கு வெண்ணெய் விழுங்குவதில் இருந்த ஆசை இந்த ஆழ்வாருக்கு அந்தக் கண்ணன் மீது உண்டு.

வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாம் திருமாலே! – ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொரு நாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு?

[வான் - வானம்; ஆகாசம். மறிகடல் - அலை விரிகிற கடல். மாருதம் - காற்று. ஆன் ஆய்ச்சி - பசு மேய்க்கும் குலத்தில் பிறந்தவளான யசோதை. நிறையுமே - நிறையுமோ?]

என்பது பொய்கையார் வாக்கு.

இப்படியெல்லாம் கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டுப் பகவானுடைய திருவடிகளைக் காணும் அறிவை நன்றாகப் பெற்றுவிட்டால், நரக வாசல்களெல்லாம் அடைபட்டுப் போகும் என்று உறுதி கூறுகிறார் பொய்கையாழ்வார்.

Koviloor Digital Library

இனியார் புகுவார் எழுநரக வாசல்?
முனியாது மூரித்தாள் கோமின்! - கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு.

[ஏழு நரகம் - ஏழுவகை நரகம். முனியாது - கோபங்கொள்ளாமல். மூரித் தாள் - பெரிய தாழ்ப்பாள்; மிக்க வலிமையுள்ள தாழ்ப்பாள். கோமின் - கோத்து விடுங்கள்; தொடுத்துப் பூட்டி விடுங்கள். கனிசாய - பழம் உதிர்ந்து விழும்படி. கன்று எறிந்த - கன்றின் வடிவமாக வந்த ஓர் அசுரனை எடுத்து எறிந்த. கனை கழல் - ஒலிக்கின்ற வீரக்கழல். நாவலஞ் சூழ் நாடு - அழகிய ஜம்பூத்வீபம்; இங்கே இந்த நாட்டிலுள்ள உயிர்கள்.)

இத்தகைய ஞான வீரர்களின் வீரமே வீரம். இத்தகைய வீரத்தையும் பக்தியையும் எத்தனை நூற்றாண்டுகளாகக் கிருஷ்ண லீலைகள் நமது நாட்டிலே வளர்த்திருக்கின்றன!

★

Koviloor Digital Library

8. இவர் உகந்த ஸ்தலங்கள்

'வடக்கே காசி; தெற்கே காஞ்சி' என்று சொல்லும்படி அவ்வளவு பிரசித்திபெற்றது காஞ்சிமாநகரம் என்ற கச்சியம்பதி.

காசிமுத லாகியநன் னகரி யெல்லாம்
கார்மேனி அருளாளர் கச்சிக்(கு) ஒவ்வா!

என்று ஸ்ரீ வேதாந்த தேசிகனால் புகழ்ந்தோதப் பெறும் காஞ்சிமாநகரின் ஒரு பகுதியான திருவெஃகா என்ற திவ்ய ஸ்தலத்திலே தோன்றிய பொய்கையாரைக் 'கச்சிநகர் வந்துதித்த பொய்கைப் பிரான்' என்பர். இவர் உகந்த ஸ்தலங்களில் திருவெஃகாவும் ஒன்று.

'ஒருநாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள் இராதபடி ஓடித் திரியும் யோகி'யான இந்த ஆழ்வார் திவ்ய ஸ்தலயாத்திரைகளில் விசேஷ நம்பிக்கையுள்ளவர் என்பதில் ஐயமில்லை. இதற்கு இவர் பாடல்களிலே சான்று உண்டு.

திருவரங்கம்

திவ்ய ஸ்தலங்களிலெல்லாம் திவ்ய ஸ்தலம் என்றும், 'பெரிய கோயில்' என்றும் கொண்டாடப் பெறும் ஸ்ரீரங்கத்தைப் பொய்கையார் பெரும்பக்தியோடு குறிப்பிடுகிறார்:

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்;
இன்று மறப்பனோ? ஏழைகாள்! – அன்று
கருஅரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்,
திருவரங்கம் மேயான் திசை.

Koviloor Digital Library

[ஓதநீர் வண்ணன் - கடல்நீர் போன்ற வடிவழகுள்ள பெருமாள். ஏழைகாள் - அறிவில் ஏழைகளே. கருஅரங்கம் - கர்ப்பப் பையாகிய ஸ்தானம். மேயான் - மேவியவன்; அடைந்த பெருமாள்.]

'ஸ்ரீரங்கநாதனை ஒருகணமும் மறந்தறிய மாட்டேன்!' என்று சொல்லும் பொய்கையார், 'மறக்க முடியாத ஞானம் பெற்ற நான் இன்று மறக்கப் போகிறேனா?' என்று சொல்வதுகூட அதிசயமில்லை; 'கர்ப்பவாசம் செய்யும்போதே திருவரங்கம் இருக்கும் திசைநோக்கிக் கைதொழுதேன்; கண்டேன்!' என்று கூறுவதுதான் அதிசயம்.

இறைவன் தம்மைக் கர்ப்பத்திலேயே கடாட்சித்துப் பக்தனாக்கிவிட்டான் என்று இவர் கருதுவதாகப் பொருள் கொள்ளவேண்டும். 'பக்தியென்ற திருவைக் கருவிலேயே பெற்றுவிட்டேன்; நான் கர்ப்ப ஸ்ரீமான்!' என்று இவர் அவ்வளவு தன்னம்பிக்கை கொள்ளுமாறு செய்துவிட்டது, இவருக்கு இளமையிலேயே ஏற்பட்டிருந்த ஸ்ரீரங்க பக்தி.

கருவிலே திருவாக அமைந்த அந்தப் பக்தியைக் குறிப்பிடும்போது, 'ஸ்ரீரங்கநாதன் பள்ளிகொண்டிருக்கும் அந்தத் திசைநோக்கிக் கைதொழுதேன்; கண்டேன்!' என்று இவர் பாடியிருப்பதால், 'திருவரங்கம் பெரிய கோயில்' என்ற திவ்ய ஸ்தலத்தை இவருள்ளம் பச்சிளம் பருவத்திலேயே, 'பூலோக வைகுண்ட'மாகக் கண்டதெனலாம்.

திருவேங்கடம்

ஸ்ரீரங்கத்திற்கு அடுத்தபடியாக வைணவர்களால் மதிக்கப்பெறுவது திருவேங்கடம் என்னும் திருப்பதிதான். இந்த ஆழ்வார் திருவரங்கத்தைக் காட்டிலும் வேங்கட மலையைக் காதலித்தார் என்றுகூடச் சொல்லலாம். இந்த மலையை,

Koviloor Digital Library

மனச்சுடரைத் தூண்டும் மலை

என்று ஈடுபட்டு வருணிக்கிறார்.

மனமாகிற சுடரை - இதயமாகிற விளக்கைத் தூண்டி ஒளிரச் செய்யும் மலையென்று சொல்லும்போதே, இவருடைய இதயத்தில் சுடர்விட்டெரியும் பக்திவிளக்கை நாம்கூட ஒருவாறு பார்க்கமுடிகிறது. மண்ணவர்களுக்கு மட்டுமல்ல, விண்ணவர்களுக்கும் மனச்சுடரைத் தூண்டுகிறது திருவேங்கட மலை என்கிறார்.

பக்தி என்ற ஒரு நெருப்பை மூட்டி, மற்றொரு நெருப்பை அணைக்கிறது திருவேங்கடம் என்று சமத்காரமாகப் பாடுகிறார் பொய்கையார்:

வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே, வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை.

பாருங்கள்: அழகான பக்திச்சுடர் அழகான கவிதையில் பொதிந்து காண்கிறதல்லவா?

பொய்கையாழ்வார் காலத்திலே அறிஞர்கள் பல திசைகளிலிருந்தும் திருப்பதி மலைக்கு வந்து வணங்கினார்களாம். தினந்தோறும் தூபதீபங்களோடும் மலர்களோடும் வந்து வணங்குகிறார்கள் என்கிறார் பொய்கையார். அப்படிப் பக்தர்கள் வந்து வணங்குவதால், பகவானும் உள்ளம் உவந்து இந்தத் திவ்ய ஸ்தலத்திலே எழுந்தருளியிருக்கிறான் என்றும் குறிப்பிடுகிறார்.

திருவேங்கடத்தை இவர் நேரிலே தரிசித்திருக்கிறார் என்பதில் ஐயமே இருக்க முடியாது. அந்தக் காலத்திலே திருப்பதி யாத்திரை மிகவும் கஷ்டமாகவே இருந்திருக்க வேண்டும். அம் மலைக் காடுகளிலே தாம் கண்ட பாம்புகளை, 'ஊரும் வரிஅரவம்' என்கிறார். ஊர்ந்து செல்லும் அந்தப் பாம்புகளை அவற்றின் உடலிலே உள்ள

Koviloor Digital Library

வரிகளோடு நமக்கும் காட்டுகிறார் என்று தோன்றுகிறது. மலைப் பாம்புகளைக் குறிப்பிடுகிறார் என்றும் கருதலாம்.

அந்த மலைக் காடுகளிலுள்ள குறவர்களைத்தான் எவ்வளவு அன்புடனும் அனுதாபத்துடனும் '**ஒண்குறவர்**' (அழகிய குறவர்கள்; சிறந்த குறவர்கள்) என்று குறிப்பிடுகிறார்! 'ஒண்மையாவது ''இவர்கள் பாட்டன் - பாட்டனிலே ஒருத்தன் பூமியிலே இறங்கினான்'' என்னும் பழியின்றிக்கே இருக்கை' என்பது வியாக்கியானம். அதாவது, வம்ச பரம்பரையாகத் திருப்பதி மலையைவிட்டுக் கீழே இறங்காமல் அங்கேயே நித்தியவாசம் செய்யும் சிறப்பு அந்தக் குறவர்களுக்கு உரியது என்று கூறி, ஆழ்வார் கருத்தை விளக்குகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

குறவர்கள் தங்களுடைய தினைப்புனங்களைக் காவல் செய்துகொண்டிருக்கையில் யானை முதலிய மிருகங்கள் பட்டி மேயப் புகும் என்றும், அந்தக் குறவர்கள் பரண்களில் இருந்தபடியே கற்களை எறிவார்கள் என்றும் சொல்ல வந்த ஆழ்வார், அவர்கள் பெரிய மாணிக்கக் கற்களையும் அப்படியே எறிகிறார்கள் என்கிறார். இது வெறும் உயர்வு நவிற்சி அணி அன்று; அவர்களுடைய மதிப்பிலே கல்லும் மாணிக்கமும் ஒன்றுதான் என்பது குறிப்பு. ஞானிகள் மதிப்பிலும் அப்படித்தானே?

கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தவன் என்று இவர் வருணிக்கும்போது, அந்த மலைக்குக் கீழ் நின்ற பகவானை மானஸீகமாகத்தான் அநுபவிக்க முடிகிறது. 'கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு' என்று ஸ்ரீ தேசிகன் கூறுவதுபோல், 'பகவான் திருப்பதி மலைமேல் நிற்கிறான்!' என்று இவர் சொல்லும்போதோ, இம் மலைக்குமேல் நின்ற கண்ணனை இன்றும் கண்ணாரக் காண முடிகிறதல்லவா?

Koviloor Digital Library

அவதார மூர்த்திகள் வாழ்ந்த காலத்திற்கு நாம் யாத்திரை செய்ய முடியாது; திருமலை, திருவரங்கம் முதலான திவ்ய ஸ்தலங்களுக்கோ யாத்திரை செய்து போய்ச் சேர முடியும். எனவே, பக்தர்கள் தங்கள் ஜீவ யாத்திரையிலே திவ்ய ஸ்தல யாத்திரைக்கு ஒரு முக்கிய ஸ்தானம் அளித்திருக்கிறார்கள்.

தாம் உகந்த ஸ்தலங்களைக் குறித்துப் பொய்கை யாழ்வாரின் மனநிலை இது என ஊகிக்கலாம். திருமலை, திருவரங்கம், திருவெஃகா முதலான சில ஸ்தலங்களை இவர் பாடியிருப்பதிலிருந்து, இவர் காலத்திலே இந்த ஸ்தலங்கள் விஷ்ணு பக்தியின் வளர்ப்புப் பண்ணைகளாக இருந்தன என்று கருதலாம்.

நான்கு திருப்பதிகளில் பகவான் நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் நடப்பதுமாகிய திருக்கோலங்களில் காட்சி தருவதை நினைப்பதாலும் சொல்வதாலும், நாம் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அநுபவிக்கின்ற இடர்கள் கெட, நன்மை விளையும் என்கிறார் பொய்கையார்:

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் – நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால், கெடுமாம் இடர்.

(அஃகாத பூங்கிடங்கின் -பூ மாறாத நீர்நிலை களையுடைய. நீள் கோவல் பொன்னகரும் - சிறந்த திருக்கோவலூர் என்கிற திவ்ய ஸ்தலமும்.)

இந்த நான்கு திருப்பதிகளிலும் இறைவன் வரிசைக் கிரமமாக நிற்பதும் வீற்றிருப்பதும் பள்ளிகொண்டிருப்பதும் நடப்பதுமாகிய திருக்கோலங்களில் காட்சி தருகிறான் என்பது பாட்டின் பொருள்.

விண்ணகர், ஒப்பிலியப்பன் சன்னிதியாகிய திருவிண்ணகர்த் தலத்தைக் குறிக்குமென்று கருதுவோருண்டு. ஆனால் இங்கே பெருமாள் வீற்றிருந்த திருக்கோலத்தில்

Koviloor Digital Library

இல்லை; நின்ற திருக்கோலத்திலேயே காட்சி அளிக்கிறார். எனவே, கச்சிமாநகரிலுள்ள பரமேச்சுர விண்ணகரைப் பொய்கையார் குறிப்பிடுவதாகக் கொள்வதும் உண்டு. பரமபதமாகிய வைகுந்தமா நகரையே, 'விண்ணகர்' குறிப்பதாகுமென்று கருதுவோரும் உண்டு.

திருக்கோவலூரை, 'நடந்த கோல'த் திருப்பதியாகப் பொய்கையார் குறிப்பிடுகிறார். இங்கே பெருமாள் உலகளந்த திருக்கோலமாகக் காட்சி தருகிறார்.

திரண்டமரர் தொழுதேத்தும்
திருமால்! நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும்
இருள்தீர நடந்தனையே!

என்று **சிலப்பதிகாரம்** கூறுவதும் காண்க.

மூன்று ஆழ்வார்களும் விரும்பித் தங்கிய அந்த இடைகழியையே பகவானும் தான் விரும்பிய இடமாகக் கொண்டான் என்பதல்லவா கதை? பொய்கையாரும், 'நீயும் பிராட்டியுமாக அந்த இடைகழியில், உள்ளும் போகாமல் வெளியிலும் போகாமல் நின்றுகொண்டிருந்தாய்!' என்று பாடியிருக்கிறாரல்லவா? அந்த இடைகழியே இப்போது திருக்கோவலூர்ப் பெருமாள் கோவிலின் முக்கிய சன்னிதியாக இருக்கிறது.

இத்தகைய திவ்ய ஸ்தலங்கள் இறைவனுக்குகந்த தலங்களாக இந்த ஆழ்வார் உகந்தருளிய போதிலும், இவ்விடங்களில் இறைவன் உறைவதானது தக்க தருணம் பார்த்து அன்பர்களின் உள்ளத்திலே புகுந்து விடுவதற்காகத்தான் என்பதே இவர் கருத்து.

வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்என்(று) ஓர்

[வெள்ளம் - (இங்கே) கடல். ஓர் - தெரிந்துகொள்.]

என்று இந்த ஆழ்வார் தமக்குத் தாமே உபதேசம் செய்து கொள்வதுபோல் பிறருக்கும் உபதேசிக்கிறாரல்லவா?

Koviloor Digital Library

9. இவர் காட்டும் சமரசம்

ஸ்ரீரங்கத்தில் வீதியிற் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். போர்வெறிகொண்ட மக்கள் வசிக்கும் நகரங்களிலே சிறு பிள்ளைகளின் விளையாடல்களிலும் வீரச் சுவை கொழிக்கும். 'திருவரங்கம், பெரியகோயில்' என்று சொல்லப்படும் ஸ்ரீ வைணவ ராஜதானியிலோ அந்தப் பழைய காலத்திலே, விளையாட்டிலும் பக்திச் சுவைதான். அப்பிள்ளைகள் அந்தப் பழைய காலத்துப் போர்க் கருவிகளான வில், அம்பு, கத்தி, வேல் முதலானவற்றை விளையாட்டுக் கருவிகளாக வைத்துக் கொள்ளவில்லை; அவர்களுடைய விளையாட்டிலுங்கூடக் கோவிலும் திருவிழாவுந்தான்; பெருமாளும் பிராட்டியுந்தான்!

அந்தச் சிறு பிள்ளைகளில் ஒருவன் தரையிலே சில கோடுகளைக் கீறினான். சில கீறல்களைத் தன்னுடைய தோழர்களுக்குக் காட்டி, 'இதுதான் கோயில்!' என்று சொன்னான். அது கேட்ட பையனொருவன் வேறொரு கோடு கீறி, 'இதுதான் பெரிய திருமண்டபம்!' என்றான்.

அதே சமயத்தில் அங்கே வந்து சேர்ந்தார் ஸ்ரீ வைணவ ஆசாரிய சிரேஷ்டரான ராமானுஜர். அவரைக் கண்டதும் ஒரே உத்ஸாகம் பொங்கிவிட்டது பிள்ளைகளுக்கெல்லாம். உடனே அவர்களிற் சிலர் காலால் சிலகோடுகளைக் கீறி, 'இதோ உம்முடைய எம்பெருமான் திருமேனி!' என்று அவருக்குக் காட்டினார்கள். பிள்ளைகளல்லவா? பக்தியிலும் விளையாட்டுப் புத்தி வந்துவிட்டது.

'என்ன துஷ்டத்தனம்!' என்று அவர் கோபித்துக் கொண்டாரா, வருத்தப்பட்டாரா? அலட்சியமாகத்தான்

 Koviloor Digital Library

போய்விட்டாரா? பிள்ளைகள் காலால் கீறின அந்தக் கீறல்களிலும் பெருமாளைக் கண்டு வணக்கம் செலுத்தினார். 'பெரியவரே! பிரசாதம் வாங்கிக்கொள்ளும்' என்று ஒரு பையன் மணலைக் கையில் எடுக்க, அதையும் பக்தியோடு பெற்றுக்கொண்டார்.

சிறு பிள்ளைகளின் தெரு விளையாட்டிலும் எம்பெருமானுடைய ஒரு திருவிளையாடலைக் கண்டார் ராமானுஜர். இறைவன் தனக்கு வேண்டியவர்களான பக்தர்கள் என்ன என்ன உருவத்தில் வழிபடுகிறார்களோ அந்த அந்த உருவத்தையே தன்னுடைய விக்கிரகமாக அங்கீகரிக் கிறானாம்.

தமர்உகந்த(து) எவ்வுருவம்
அவ்வுருவம் தானே!

(தமர் - தமக்கு வேண்டியவர்களான பக்தர்கள்.)

என்பது பொய்கையாழ்வார் வாக்கு.

பொய்கையாழ்வாரின் இந்த வாக்காகிய ஞான தீபந்தான் அந்தச் சிறுபிள்ளைகளின் விளையாட்டிலும் ராமானுஜருக்கு ஒரு பேருண்மையைக் காட்டிக் கொடுத்ததாம்.

கடவுளுக்கு உருவம் உண்டா, இல்லையா? சில மதங்கள் கடவுளுக்கு உருவம் இல்லையென்று சொல்லு கின்றன. ஆனால் நம்மைச் சுற்றியிருக்கும், 'சிருஷ்டி' என்ற அழகான காட்சிகளைப் பாருங்கள். இந்த அழகுகளெல்லாம், இந்த உருவங்களெல்லாம் சுத்த சூனியத்திலிருந்து, வெறும் பாழிலிருந்து முளைத்துவிட்டனவா? ஆலமரம் எப்படி வித்தில் அடங்கிக் கிடக்கிறதோ, அப்படியே இயற்கையழகு களெல்லாம், உருவங்களெல்லாம் ஆதிமூலத்தில் உள்ள படியே அடங்கியிருக்க வேண்டுமல்லவா?

எனவே, பொய்கையாழ்வார் உருவமுள்ள பகவானை உபாசிக்கிறார். ஆனால் பகவானுடைய உருவம் நாம் காணும்

 Koviloor Digital Library

உருவங்களைப்போல் மாறக்கூடியதன்று, அழியக் கூடியதன்று. அழியா அழகு இறைவனாகிய அன்பனுடைய வடிவம் என்பர். அழகு வடிவமாகிய அன்பன், அன்பர்கள் ஆசைப்பட்டு வழிபடும் உருவங்களில் எல்லாம் காட்சி தருகிறானாம்; அன்பர் உகக்கும் பெயர்களையும் தன்னுடைய திருநாமங்களாக அங்கீகரிக்கிறானாம்:

> தமர்உகந்த(து) எவ்வுருவம் அவ்வுருவம் தானே;
> தமர்உகந்த(து) எப்பேர் மற்றப்பேர்!

இறைவனுடைய திருமேனி அதி சூட்சுமமாகவும் இயற்கைக்கு அதீதமாகவும் இருந்தபோதிலும் இயற்கைப் பொருள்களில் தாம் விரும்பும் ஒன்றைப் 'பகவானே! நீ இதை உனக்குத் திருமேனியாகக் கொள்ளவேணும்' என்று நல்லவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டால், அப்படியே நல்லான் அருள் செய்கிறானாம்.

கடவுளுக்கு உருவம் இல்லை என்று சொல்லும் ஒரு மதம், 'கடவுள் தன் சாயலில் மனிதனைப் படைத்தான்!' என்று சொல்லுகிறது. 'இது எப்படிப் பொருந்தும்? கடவுளுக்குத் தான் சாயலே இல்லையே!' என்று வாதிக்கிறார்கள், நாஸ்திகர்கள், இவர்களோ, 'மனிதன்தான் தன் சாயலில் கடவுளைப் படைத்துக் கொள்கிறான்!' என்பர்.

பொய்கையாழ்வாரின் .கொள்கையோ, கிறிஸ்தவர் கொள்கையையும் ஒப்புக்கொள்ளக் கூடும்; நாஸ்திகர் கொள்கையையும் ஒப்புக்கொள்ள முடியும். பகவான் தன் சாயலில் பக்தனைப் படைக்கிறான்; பக்தனும் தன் சாயலில் பகவானைப் படைத்துக் கொள்கிறான், ஓர் அழகான விக்கிரகமாக. பக்தர்கள் பகவானைச் சார்ந்திருப்பவர்கள்; பகவானது சொரூபமோ புக்தர்களின் விருப்பத்தைச் சார்ந்திருக்கிறதாம்.

பகவானையே நம்பி அன்பு செய்யும் பக்தர்கள் உகப்பதுதான் பகவானுக்குத் திருமேனி, திருப்பெயர். எவ்வளவு ஆறுதலான, பொருத்தமான கொள்கை!

Koviloor Digital Library

சில பக்தர்கள் விக்கிரக ரூபமாய்ப் பகவானை பிரதிஷ்டை செய்து வழிபடுகிறார்கள். சுவர்களிலே சித்திரமாக எழுதி வழிபடும் பக்தர்களும் உண்டு. அவரவர் களுடைய அறிவுக்கும் குணங்களுக்கும் தகுந்தபடி இறைவனுடைய உருவங்களையும் அமைத்துக் கொள் கிறார்கள் என்பது பொய்கையாழ்வார் வாக்கு.

சிலர் அசுர சக்திகளை அழித்து உலகத்தைக் காப்பாற்றும் காளியாகக் கடவுளை வழிபடக்கூடும். வேறு சிலர் உலகங்களையெல்லாம் ஆனந்த நடனமாகக் கண்டு இறைவனை நடராஜாவாக வழிபடக்கூடும். இன்னும் சிலர் அறிதுயில் அமர்ந்த கருணைமாமுகிலாக வழி படுவார்கள்.

பெருமாளையும் பல உருவங்களில் வழிபடுவதுண்டு. பள்ளிகொண்ட பெருமாளாக மட்டுமா? - நின்ற திருக்கோலத்திலும், இருந்த திருக்கோலத்திலும், உலகளந்த திருக்கோலத்திலும், வேறு திருக்கோலங்களிலும் வழிபடுகிறார்களல்லவா?

எப்படி வழிபாடு செய்த போதிலும், அந்தரங்க பக்தியைப் பார்த்து, இதயத்தைப் பார்த்து, அருள் செய்கிறானாம் இஷ்ட மூர்த்தி:

அவர்அவர் தாம்தாம் அறிந்தவா(று) ஏத்தி,
இவர்இவர் எம்பெருமான் என்று, - சுவர்மிசைச்
சாத்தியும், வைத்தும் தொழுவர் உலகளந்த
மூர்த்தி உருவே முதல்.

சைவ வைணவ சமரசம்

பொய்கையாழ்வார் தமது இஷ்ட மூர்த்தியாகிய திருமாலைப் பரம்பொருளாக வழிபட்ட போதிலும் சமரச ஞானம் வாய்ந்தவரே. நமது சநாதன தருமத்தின் இருகண்கள் என்று சொல்லத் தக்க சைவ வைணவ சமரசத்தை இவர்

KOVILOOR ANDAVAR
26731

Koviloor Digital Library

வற்புறுத்துவது போலவே தோன்றுகிறது. உதாரணமாக இந்தப் பாட்டைப் பாருங்கள்:

அரன்நா ரணன்நாமம்; ஆன்விடை புள்ஊர்தி;
உரைநூல் மறை; உறையும் கோயில் - வரைநீர்;
கருமம், அழிப்(பு) அளிப்பு; கையதுவேல் நேமி;
உருவம்,எரி கார்மேனி ஒன்று.

[ஆன்விடை - எருது. புள் - (இங்கே) கருடப் பறவை. ஊர்தி - வாகனம். உரை - உரைக்கும் பிரமாணம். நூல் - (இங்கே) ஆகம நூல். மறை - வேதம். உறையும் கோயில் - உறைவிடம். வரை - மலை; (இங்கே) கைலையங் கிரி. நீர் - (இங்கே) கடல். கருமம் - தொழில். அளிப்பு - காப்பாற்றும் தொழில். கையது - கையில் உள்ளது. வேல் - (இங்கே) சூலாயுதம். நேமி - சக்கராயுதம். எரி - நெருப்பு.]

சிவபெருமானுக்கும் நாராயண மூர்த்திக்கும் மேனி ஒன்றுதான் என்பது இந்தப் பாட்டின் தேர்ந்த பொருள் என்று தோன்றுகிறது. 'வண்ணம் வேறு உடம்பு ஒன்றாய் வானவில் அனையரே' என்று சிவ விஷ்ணு ஒருமையை வேறொரு புலவரும் வருணித்திருக்கிறார்.

'நிறந்தான் வேறு, இந்த இரண்டு மூர்த்திகளுக்கும்; மேனி ஒன்றுதான்!' என்று சொல்லும் இந்தப் புலவர், 'ஆம்; அப்படித்தான் இருக்கிறார்கள், வானவில்லைப் போலே!' என்று வசீகரமான ஓர் உபமானமும் காட்டுகிறார். வானவில்லின் முக்கியமான இரண்டு நிறங்கள் சிவப்பும் நீலமும் அல்லவா? சிவப்பானது சிவபெருமானுடைய செம்மேனியையும், நீலம் திருமாலின் திருமேனியையும் நினைவூட்டுகின்றன அந்தப் புலவருக்கு.

இந்தக் கருத்தைத்தான் பொய்கையாழ்வார் தமது வெண்பாவிலே,

உருவம்எரி கார்; மேனி ஒன்று

என்ற கடைசி அடியில் வெளியிடுகிறார்.

Koviloor Digital Library

அரியும் அரனும் இரண்டு உருவங்களுடன் காணப்பட்ட போதிலும் ஒருவன், ஒருவன் அங்கத்தில் என்றும் இருப்பதாகப் பொய்கையார் கூறியுள்ளார்:

பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் - என்றும்
இருவர்அங்கத்தால்திரிவ ரேலும் - ஒருவன்
ஒருவன்அங்கத்(து) என்றும் உளன்.

[புரிசடை அம் புண்ணியனும் - பின்னின சடை முடியோடு கூடிய அழகிய புண்ணிய மூர்த்தியான சிவனும். உலகம் தாய நெடுமாலும் - உலகங்களையெல்லாம் தாவி அளந்து கொண்ட திருநெடுமாலும். இருவர் அங்கத்தால் திரிவரேலும் - இருவேறு வடிவம்கொண்டு திரிவார்களேயா னாலும்.]

திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள நிறவேற்றுமை இந்த மூர்த்திகளின் தொழில் வேற்றுமைக்கும் அறிகுறி என்று கருதலாம். சிவபெருமானின் தொழில் அழிப்பு; திருமாலின் தொழில் அளிப்பு. நெருப்பு மயமான சிவ்பெருமானுடைய சிவப்பை அழிப்பின் அறிகுறியாகவும், மேகத்தை ஞாபகப்படுத்தும் மகா விஷ்ணுவின் நீலக் கரு நிறத்தை அளிப்பின் குறியாகவும் கருதலாம்.

சிவபெருமானுடைய ஆயுதமாகிய திரிசூலம் அழிப்புத் தொழிலுக்கு ஏற்றதுதான். ஆனால் திருமாலின் சக்கராயுதத்தைத் துஷ்ட நிக்கிரகத்திற்கு ஏற்றதாகக் கொள்வதைக் காட்டிலும் சிஷ்ட பரிபாலனத்திற்கு ஏற்றதாகவும், அழிக்கப்படும் துஷ்ட ராக்ஷஸர்களுக்கும் அருள் புரிவதாகவும் கருதுவது சம்பிரதாயம்.

எனவே, சச்சராயுதத்தை, 'அருளார் திருச்சக்கரம்' (அருள் நிறைந்த சக்கராயுதம்) என்று வைணவர்கள் சொல்வதுண்டு. இக் கருத்தையே நவீன கவியாகிய பாரதியும்,

Koviloor Digital Library

சக்கரத்தை எடுப்ப தொரு கணம்
தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்

என்று வெளியிட்டிருக்கிறார்.

இவ்வளவு கருத்தையும் பொதிந்திருப்பது பொய்கையாழ்வார் வாக்கு :

கருமம் அழிப்(பு) அளிப்பு: கையதுவேல் நேமி;
உருவம்எரி கார்; மேனி ஒன்று.

ஒரே கடவுள் திருமாலாக இருந்து அளிக்கிறாரென்றும், சிவ பெருமானாக இருந்து அழிக்கிறாரென்றும் பொய்கையாழ் வார் கருதுவதாகத் தோன்றுகிறது.

சிவபெருமானுடைய செயல் முதலியவை பற்றிய சாஸனங்களை **ஆகமங்கள்** என்றும், திருமாலைப்பற்றிய ஆதார நூல்களை **வேதங்கள்** என்றும் பொய்கையார் குறிப்பிடுகிறார். வேதங்களும் சிவ பரத்வம் கூறுவதாகச் சைவர்கள் சொல்வதுண்டு. சில ஆகமங்கள் விஷ்ணுவை முழு முதற் கடவுளாகக் கூறுவதாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் குறிப்பிடுவதும் உண்டு.

இத்தகைய சமரசப் பாட்டையும் பிற்கால விஷ்ணு பக்தர்கள் திருமாலுக்கே பெருமை கூறுவதாக வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆனால் முதலாழ்வார்கள் காலத்திலே சிவபெருமானையோ விஷ்ணுவையோ இஷ்ட தெய்வமாகக் கொண்டு பக்தர்கள் வழிபட்டு வந்தபோதிலும் சைவ வைணவச் சண்டை இல்லை என்று ஊகிக்கலாம்.

சிவ பரத்வத்தை வற்புறுத்தும் கதைகளில் சிரித்துப் புரம் எரித்த சிவகதையும் ஒன்று. மூன்று அசுரர்கள் வானத்திலே பறந்து திரியும் முப்புரம் அல்லது மூன்று பட்டணங்களிலே இருந்துகொண்டே தங்கள் அசுரப் படைகளோடு உலகத்தைப் பாழாக்கி வந்தார்களாம். சிவபெருமான் அந்தத் திரிபுர தகனம்

Koviloor Digital Library

செய்ய விரும்பிச் சண்டைக்குப் புறப்பட்டாராம். இந்தச் சிவகதையைப் பொய்கையார் குறிப்பிடுகிறார்.

பூமியை ரதமாகக் கொண்டார் சிவபெருமான், தேர், சக்கரமில்லாமல் ஓடுமா? சந்திர சூரியர்கள் தேர்ச்சக்கரங்களாக அமைந்தார்களாம். தேருக்குக் குதிரைகள் வேண்டுமே; நாலு வேதங்களும் நாலு தேர்க்குதிரைகள் ஆகிவிட்டன. பிரமன் சாரதியாக அமர, மகா மேருமலையை வில்லாகத் தூக்கிக் கொண்டார் சிவபெருமான். மகாவிஷ்ணு அம்பாக அமைந்தாராம். என்ன கருவிகள்! என்ன போர்!

ஆனால் அந்தக் கருவிகள் இல்லாமலே போர் முடிந்து விட்டது! போர் தொடங்கும்போதே சிவபெருமானுக்குச் சிரிப்பு வந்துவிட்டது! அந்தச் சிரிப்பிலே நெருப்பு வந்து விட்டது; அந்த நெருப்பில் எரிந்து போனார்கள் அசுரர்கள், தங்கள் நகரங்களோடும் அடாநெறி நாகரிகத்தோடும்!

இந்தச் சிவ பராக்கிரமத்தைப் பாராட்டிப் பொய்கை யாழ்வார், 'மாமதிள் மூன்று எய்த இறையோன்' என்று சிவபெருமானைக் குறிப்பிடுகிறார். இத்தகைய சிவபெரு மானுக்கு மகாவிஷ்ணு தமது வலது பக்கதிலே இடம் அளிப்பதாகவும் சொல்லுகிறார்.

இந்த ஆழ்வார் சிவபெருமானை,

ஆலமர நீழல் அறம்நால்வர்க்(கு) அன்றுரைத்த
ஆலம்அமர் கண்டத்(து) அரன்

[ஆலம் அமர் - விஷம் அமர்ந்த. கண்டத்து - கழுத்தை யுடைய.]

என்று குறிப்பிடுகிறார்.

திருமால் இரணியன் முதலான அசுரர்களை நிக்கிரகம் செய்து லோகோபகாரம் செய்தார் என்றால்; சிவபெருமானும் திரிபுர ஸம்ஹாரம் செய்து லோகோபகாரம் செய்தார் என்று புராணம் சொல்லுகிறது. மகாவிஷ்ணு நீல ரத்தினம் போன்ற

Koviloor Digital Library

குளிர்ந்த வடிவத்தோடு உலகத்திற்கு அருள் செய்து கொண்டிருக்கிறார்; சிவபெருமான் நீறு பூத்த நெருப்பைப் போல் இருந்து உலகத்திற்கு உயர்ந்த வழியைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறாராம்.

மகாவிஷ்ணு லக்ஷ்மீநாராயண மூர்த்தியாகக் காட்சி தருகிறாரென்றால், சிவபெருமானும் பார்வதியைப் பாகத்திலே தரித்துக்கொண்டு அம்மையப்பராகக் காட்சி தரவில்லையா? மகாவிஷ்ணு ரட்சகத் தொழிலுக்கு அறிகுறியாக நீண்ட கிரீடம் அணிந்து ராஜாதி ராஜனாக விளங்குகிறார் என்றால், சிவபெருமான் நீண்ட ஜடாமகுடம் தரித்துத் துறவுக்கு அரசாகக் காட்சி தருகிறாரல்லவா?

இத்தகைய கருத்துக்களையெல்லாம் பொதிந்து வெளியிடுவதுபோல் இருக்கிறது பின்வரும் பொய்கையார் வாக்கு:

ஏற்றான், புள் ஊர்ந்தான்; எயில்எரித்தான், மார்விடந்தான்;
நீற்றான், நிழல்மணி வண்ணத்தான்; - கூற்(று) ஒருபால்
மங்கையான், பூமகளான்; வார்சடையான், நீள்முடியான்;
கங்கையான் நீள்கழலான் காப்பு.

[ஏற்றான் - ரிஷபத்தை வாகனமாக உடையவன். புள் ஊர்ந்தான் - பறவையாகிய கருடனை வாகனமாக உடையவன். எயில் - மதில். மார்வு - மார்பு. இடந்தான் - பிளந்தொழித்தான். நீற்றான் - நீறு பூசிக்கொண்டவன். கூற்று ஒருபால் - உடம்பின் ஒரு பக்கத்திலே.]

பொய்கையாழ்வாரின் ஸ்ரீவைஷ்ணவம் சைவ வைஷ்ணவ சமரசத்துடன் ஸர்வ சமய சமரசத்திற்கும் இடங் கொடுப்பதுபோல் அவ்வளவு ஆழ்ந்தகன்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது.

★

Koviloor Digital Library

10. பொய்கையாரின் பக்தி அநுபவங்கள்

நாம் எவ்வளவோ காலத்தை வீணாகப் போக்கி விடுகிறோம். பலர் அதைக் குறித்து வருந்துவதுமில்லை; சிந்திப்பதுமில்லை. 'எப்படியோ பொழுது போக வேண்டுமே; காலந்தான் ஒருநாள் நம்மைக் கொன்றுவிடப் போகிறதே; நாமும் காலத்தை எப்படியாவது கொன்று தள்ளிவிட வேண்டியதுதான்!' என்று எண்ணுவதுபோல் பொழுது போக்குகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், 'பொழுதை வீணாகப் போக்கக்கூடாது; காலமாக நம்முன் வருவதும் கடவுள்தான்!' என்பது அறிஞர்களின் கருத்து. இந்தக் கருததைக் குறிப்பாகப் பொய்கையாரும் வெளியிடுகிறார்.

ஆழ்வார் ஆவதற்கு முன்பு தாம் காலம் கழித்து வந்த நிலை இவருக்குத் திடீரென்று நினைவிற்கு வந்து விட்டது. வீணாகப் பல தினங்கள் போய்விட்டனவே என்று அஞ்சினார்; அழுதார். கருவிலே திருவுடைய பக்தராக இருந்தும், பல்வேறு லௌகிகச் செயல்களில் கழிந்த காலம் பக்தியில் ஆழ்ந்துபோக அவகாசம் கொடாமலே கழிந்து விட்டதால், அந்தக் காலமும் பழுதாகிவிட்டதாகவே கருதினார்.

தமது பழைய நிலையை எண்ணி எண்ணிக் குழந்தை போல் விம்மிவிம்மி அழுதார். பச்சாத்தாபமாகப் பொங்கிய கண்ணீர், இதயத்தை அப்படியே பரிசுத்தமாக்கிவிட்டது.

அப்போது அந்த இதயத்திலே இறைவனைக் காணும் நிலை ஏற்பட்டதாம். அந்த நிலையில் பாடுகிறார்:-

Koviloor Digital Library

பழுதே பலபகலும் போயினஎன்(று) அஞ்சி
அழுதேன்; அரவணைமேல் கண்டு - தொழுதேன்!

[பகல் - (இங்கே) தினங்கள். அரவணை - சேஷ சயனம்.]

அழுகையும் தொழுகையுமாகிப் பொய்கையாழ்வார் இருந்த இந்த நிலையை உண்மையான - மிகச் சிறந்த - பிரார்த்தனை நிலை என்று சொல்லலாம். நாம் செய்த தவறுகளை, நம்முடைய குறைகளை, நினைத்து இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும் என்பது பல மதத்தினரும் ஒரு முகமாக ஒப்புக் கொள்ளும் கொள்கை.

நாம் உண்மையாகப் பிரார்த்தனை செய்ய ஆரம் பித்தால், நமது வாழ்வை ஒரு புது வாழ்வாக மாற்றிக் கொள்ளலாம் என்பது பக்திமான்கள் அநுபவத்தால் அறிந்ததே. இந்த மாறுதல் உள்மனத்தின் ஆழத்திலிருந்து ஏற்படுகிறது. எனவே, பிரார்த்தனைகளால் ஏற்படக்கூடிய மாறுதல்களைச் 'சீர்திருத்தம்' என்ற வார்த்தையால் குறிப்பது போதாது; 'புரட்சி என்ற பதத்தினாலேயே குறிப்பிடலாம்.

பொய்கையாழ்வார் வாழ்க்கையிலும் ஒரு 'புரட்சி' ஏற்பட்டுத்தான் இவர் ஆழ்வாராகப் பரிணமித்திருக்க வேண்டும். பிரார்த்தனை ஆன்ம எழுச்சியாகும்போது, ஒரு பெருஞ் சக்தி, மிகப் பெருஞ் சக்தி பிறந்துவிடுகிறது. இத்தகைய உண்மையான பிரார்த்தனையை, 'அழுகையும் தொழுகையுந்தானே!' என்று சொல்லிவிடலாமா?

உள்ளத்திற்கும் உடம்பிற்குங்கூட ஒரு தெய்விக மாறுதல் அளிக்கிறது பிரார்த்தனை. சோறு எப்படி உடம்பிற்கு உணவாகிறதோ, அறிவு எப்படி உள்ளத்திற்கு உணவாகிறதோ, கலை எப்படி இதயத்திற்கு உணவாகிறதோ, அப்படியே பிரார்த்தனையும் ஆத்மாவுக்கு உணவாகி, உள்ளத்தையும்

Koviloor Digital Library

உடம்பையும்கூட அறிவியலுக்குத் தெரியாத ஒரு முறையில் ஊட்டி வளர்த்துப் பூரிப்பு அடையச் செய்கிறது.

பிரார்த்தனை, அறிவை ஆழ்ந்த ஞானமாக்குகிறது; ஒழுக்கத்திற்கு ஓர் அடிப்படையான துணிவை, உறுதியை, அமைத்துக் கொடுக்கிறது. பிரார்த்தனை, வாழ்க்கையிலே ஒரு புதிய ஒளி காட்டுகிறது; வாழ்க்கைக்கே ஒரு புதிய பொலிவு - ஒரு புதுமலர்ச்சி - தருகிறது. வாழ்வைப் புது வாழ்வாக, ஒரு பெரு வாழ்வாகப் பரிணமிக்கச்செய்கிறது. இவையெல்லாம் உண்மையான 'புரட்சி'யல்லவா?

பிரார்த்தனைகளால் ஒருவன் தன்னைத்தானே அறிந்து கொள்கிறான்; தனக்கு ஆதாரமான தலைவனையும் அறிந்து கொள்கிறான். எப்படி? அவன் தன்னுடைய குறைகளையும் தவறுகளையும் கண்டு போக்கிக் கொள்ள விரும்புகிறானல்லவா? தன்னலம், பேராசை, அசட்டுத்தனமான ஆணவம், சினம் முதலிய குறைகளெல்லாம் போகவே, கடவுளை நோக்கி ஆத்ம யாத்திரை ஆரம்பமாகிவிடுகிறது. இந்த யாத்திரையின் ஆரம்பத்திலேயே அடையவேண்டிய குறிக்கோளும் தெரிந்துவிடுகிறது.

தமது ஆத்ம யாத்திரையின் ஆரம்பத்திலே பொய்கையாழ்வாரும் தமது நிலைமையையும் குறிக் கோளையும் கண்டுகொண்டு பாடுகிறார். இப்போது அந்தப் பாட்டு முழுமையும் பார்க்கலாம்.:

பழுதே பலபகலும் போயினஎன்(று) அஞ்சி
அழுதேன்; அரவணைமேல் கண்டு - தொழுதேன்,
கடல்ஓதம் கால் அலைப்பக் கண்வளரும் செங்கண்
அடல்ஓத வண்ணர் அடி.

[கடல் ஓதம் - கடல் அலை. அடல் - வலிமை; வெற்றி; (இங்கே) அழகின் சக்தியும் வெற்றியும். ஓத வண்ணர் - கடலின் நிறமும் அழகும் வாய்ந்த பெருமான்.]

Koviloor Digital Library

ஒரு பெரும் புரட்சிநுபவம் இது: இதயத்திலிருந்து ஏதோ ஒரு கடல் பொங்கிவருவதுபோல் வந்தது பொய்கையாருக்கு. அந்தக் கண்ணீர் வெள்ளம் பெருமாள் பள்ளி கொண்டிருக்கும் பாற்கடல் வெள்ளத்தையே காட்டிவிட்டதாம் மனக் கண் முன்பு.

கண்ணீருக்கு ஊடே, எங்கேயோ தொலைதூரத்தில் எப்படியோ அலை அலையாகப் பொங்கிக் கொண்டு தெரிகிறது பாற்கடல்! அந்த அலைகள் சேஷசயன மூர்த்தியைக் கால்பிடித்து உறங்கச் செய்கின்றன. அப்படிக் கண் வளரும்போதே அந்தப் பெருமாளைப் பொய்கையார் தமது கண்ணீரைத் துடைத்துக் கொள்ளாமல் பார்க்கிறார்.

ஆம்; பாற்கடல்மீது அழகுக் கடல் கிடப்பதுபோலப் பள்ளிகொண்டிருக்கும் அந்த இஷ்ட தெய்வத்தின் காட்சிதான்! அது குறித்து இவருக்கு யாதொரு ஐயமும் இல்லை.

ஆனால் இவர் அந்த முகத்தைப் பார்க்கவில்லையாம். அந்த அடிகளைத்தான் பார்த்துத் தொழுகிறார். பக்திக் கண்ணுக்குத் திருவடிகளே போதுமல்லவா? சக்திக்கு அறிகுறியான முடியைக் காட்டிலும் அருளுக்கு அறிகுறியான அடிகளையே பக்தர்கள் வணங்க ஆசைப்படுகிறார்கள். அந்த அடிகளை, ‘அடல்ஓத வண்ணர் அடி’ என்று வாய் குளிரப் பாடுகிறார் பொய்கையார்.

இந்தக் காட்சியின் பயனாக இந்த ஆழ்வாருக்கு,

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்;
இன்று மறப்பனோ? ஏழைகாள்!

என்று சொல்லிக் கொள்வதும் சாத்தியமாகிறது.

கருவிலே திருவுடையராக இருந்ததால் இவருக்குத் திருவருள் இறைவனது காட்சியைக் காட்டலாயிற்று. அவன், தானே காட்டக் கண்டதால் இவர் தூய நன்னெஞ்சராகி அப்பெருமானுடைய கல்யாண குணங்கள் முதலியவற்றைத்

Koviloor Digital Library

தாமும் அநுபவித்துப் பிறருக்கும் எடுத்துக் காட்டும் ஆற்றல் வாய்ந்தவராகத் திகழ்கின்றார். இறைவனது வடிவழகு நெஞ்சை வசீகரித்துவிட்டால் அவனை மறப்பது சாத்தியமாகுமா?

இந்த அருளாளனைப் பக்தர்கள் அழுதும் தொழுதும் காண்பதுபோல், ஞானிகள் பகவத் விஷய ஞானத்தால் நாடிக் கண்டுகொள்வர் என்பதும் பொய்கையார் வாக்கு. ஞானிகள் உள்ளத்தை அடக்கி எம்பெருமானோடு தமக்குள்ள உறவை அறிந்து அவனைப் பற்றிக்கொள்வர்.

ஒரு கன்றுக்குட்டி பசுக் கூட்டத்திலே தன் தாயைக் கண்டுபிடித்துக் கொள்வதுபோல் ஞான பக்தர்களும் இறைவனை நாடிக் கண்டுகொள்கிறார்களாம். இத்தகைய ஞான பக்தர்களில் ஒருவர் பொய்கையார்.

பொய்கையார் எம்பெருமானை அறியும் அறிவையே, 'மெய்யறிவு' என்றும், ஞானமென்றும் கருதுகிறார். தாமரைப் பூவானது கதிரவனையே நோக்கி மலர்வதுபோல் ஞானம் என்பது திருமால் ஒருவனையே நோக்கி மலர்ச்சிபெற வேண்டும் என்பது இந்த ஆழ்வார் திருவுள்ளமல்லவா?

இந்த நிலையில்,

வாய்அவனை அல்லது வாழ்த்தாது! கைஉலகம்,
தாயவனை அல்லது தான்தொழா

[தாயவன் - தாவி அளந்தவன்.]

என்பது இவர் அநுபவம்.

இறைவன் திருவடிகளில் தொழுது நிற்கும் பாகவதர்களுக்கு, 'மன மாசு தீரும்; அருவினையும் சாரா' என்று பொய்கையார் கூறுவதும் அநுபவத்தை ஒட்டிய வார்த்தைதான்.

மாசு தீர மனம் தெளியும்; மனம் தெளிவு பெற்றால் இறைவன் அடிகளைக் காணலாம். 'என் உள்ளமே! நீ

Koviloor Digital Library

இறைவனது திருநாமங்களைச் சிந்தித்துத் தெளிவுற்றிருக்கும் போது அவனுடைய திருவடிகளைச் சேவிப்பது எளிது. அவன் பிரசன்னனாகி அருள் புரிவான்' என்று இவர் தமது நெஞ்சிற்கு உபதேசிப்பதும் தமது பக்தி அநுப்வத்தை ஒட்டிய உபதேசம்தான்.

தன்னை அடைவதற்கு வழியையும் இறைவனே காட்டுகிறான் என்பர் பொய்கையார். ரட்சகனான இறைவனை நினைக்கும்போது இடையூறுகளெல்லாம் விட்டு நீங்குகின்றனவாம்; கர்ம பந்தம் என்ற கட்டும் அவிழ்ந்து ஒழிகின்றதாம். இந்த நிலையில் அவன் வழிகாட்ட அவன் அடியை வந்திருப்பவர்கள் அந்த வழியைக் கண்டு கொள்கிறார்கள்.

காப்புன்னை உன்னக் கழியும்; அருவினைகள்
ஆப்புனை உன்ன அவிழ்ந்தொழியும்; - மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை, திருமாலே! நின் அடியை
வந்திப்பார் காண்பர் வழி.

[காப்பு - காவல்; (இங்கே) தடை. உன்ன - நினைக்க. ஆப்பு - யாப்பு; கட்டு. அருவினைகள் ஆப்பு - கரும பந்தம்.]

'மூப்பு உன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை!' என்று இவர் கூறியிருப்பதும் இவரது பக்தி அநுபவமாகத்தான் இருக்க வேண்டும்.

அவன் அருளால் வழி கண்டு அவனை அடையப் பெற்ற வெற்றிப் பெருமிதத்தை வெளியிடுவதுதான்,

பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகில் என்னே எனக்கு?

[பொன்ஆழி - அழகிய சக்கராயுதம். சூடுவேற்கு - சூடிக் கொண்டிருக்கும் எனக்கு. என்னாகில் என்னே - எது எப்படியானால் என்ன?]

என்ற பொய்கையார் வாக்கு.

Koviloor Digital Library

11. ஒரு கலங்கரை விளக்கு

பொய்கையாழ்வார் தோன்றிய தொண்டை மண்டலத்திலேயே பல்லவ ராஜதானியாகிய காஞ்சிபுரதிற்குச் சமீபத்தில் மகாபலிபுரம் என்று இந்நாளில் வழங்கும் மாமல்லபுரம் என்ற துறைமுகப் பட்டினத்தில் பூதத்தாழ்வார் தோன்றினார். பொய்கையாழ்வார் தம் உள்ளம்போல் தெளிந்த ஒரு பொய்கையிலே அந்த உள்ளத்தின் திவ்விய சௌந்தரியமே பூத்ததுபோலத் தோன்றிய ஒரு தாமரைப் பூவிலே பிறவாது பிறந்தார் என்று வைணவ பக்தர்கள் நம்புகிறார்களல்லவா? அதே நம்பிக்கைதான், பூதத்தாழ் வாரையும் கடல்மல்லை என்ற மாமல்லபுரத்திலே குருக்கத்திப் பந்தலில் ஒரு குருக்கத்தி மலரில் தோற்றுவித்துத் திருப்தி யடைந்தது; பேயாழ்வாரையும் மயிலாப்பூரில் ஒரு கிணற்றிலே தோன்றிய செவ்வல்லிப் பூவில் அவதரிக்கச் செய்தது.

மூன்று வாடாமலர்கள்போல் இருக்கும் இம் முதலாழ்வார்கள் மூன்று மலர்களில் தோன்றினார்கள் என்பது இவர்களுடைய வைபவங்களை அதிசயித்து அதிசயித்து அநுபவித்த பக்தியுள்ளத்தின் ஓர் அழகான கற்பனை.

இத்தகைய கற்பனைத் திறன்தான் பொய்கையாழ் வாரைத் திருமாலின் திவ்விய ஆயுதங்களில் ஒன்றாகிய **பாஞ்சஜந்யம்** என்னும் சங்கின் அம்சமாகவும் அறுதியிட்டது. 'உளன் கண்டாய், நன்னெஞ்சே! உத்தமன்; என்றும் உளன் கண்டாய்...' என்றெல்லாம் ஶ்ரீவைஷ்ணவத்தின் வெற்றிச் சங்கம் ஊதிய ஆதி கவியல்லவா?

Koviloor Digital Library

இதே கற்பனைத் திறன் பூதத்தாழ்வாரையும் பகவானுடைய கதாயுதத்தின் அம்சமாக அறுதியிட்டது. அவ நம்பிக்கைகளையும் மூட நம்பிக்கைகளையும் ஒருங்கே சிதறடிக்கும் கதாயுதமாக இந்த ஆழ்வாரின் பாடல்களை மதிக்கலாம்.

இப்படியே பேயாழ்வாரைப் பகவானுடைய வாளாக மதிக்கிறார்கள். வைராக்கியம் என்ற வைர வாள் ஏந்தி வெற்றி கண்டவரல்லவா இவர்?

பொய்கையாழ்வார் என்ற பெயரைப்போல் பூதத்தாழ்வார் என்ற பெயரும் பொருள் பொதிந்தது. களைத்துத் தாகித்து வரும் பிரயாணிகளுக்கு வழியிலே நிறைந்த நன்னீரோடு தோன்றும் பொய்கைபோல் விளங்கிய இந்த ஞானப் பொய்கைக்குப் 'பொய்கையார்' என்ற ஒரு பழந் தமிழ்ப் புலவரின் பெரும் பெயர் வாய்த்ததும் விசேஷமான பொருந்தந்தான். அப்படியே பூதத்தாழ்வார் என்ற பெயரும் பொருத்தமாகவே அமைந்ததுபோல் இருக்கிறது.

பகவானுடைய பூதங்கள் மண்ணில் இறங்கிவந்து எவ்வளவோ நன்மை செய்வதைத் தம் ஞானக்கண்ணால் பார்ப்பதாக நம்மாழ்வார் பாடியிருக்கிறார். இத்தகைய தேவ தூதர்களில் ஒருவராக வந்து, 'பாடும் பக்த மணி'யாகிய பூதத்தார் நாட்டை உய்விக்க முயன்றார் என்று கருதக்கூடும்.

பேயாழ்வார் என்ற பெயரும் பொருள் பொருந்தியது தான். இவருடைய பக்திப் பைத்தியத்தைக் கண்டவர்களெல்லாம், 'என்ன இப்படி நெஞ்சழிந்து, கண் சுழன்று அழுகிறார்; சிரிக்கிறார்; தொழுகிறார்; எழுகிறார்; ஆடுகிறார்; பாடுகிறார்; அலறுகிறார் - பேய் பிடித்தவர் போல!' என்று பரிகசித்தார்களாம். அந்தப் பரிகாசமே இந்தப் பரப பக்தர் உகந்து பெற்ற திருப் பெயராயிற்று. இப்படிப் 'பொய்கை, பேய், பூதம்' என்ற மூன்று விநோதப் பெயர்களிலும் மறைந்திருக்கும் அருமை பெருமைகள் கொஞ்சமோ?

Koviloor Digital Library

ஸ்ரீவைஷ்ணவ ஞானபக்தி வைராக்கியங்களின் ஆதி நிலையமாகித் தமோகுணமும் ரஜோ குணமும் சிறிதும் இல்லாமல் பரம ஸாத்விகர்களாய்த் தொண்டு பூண்டொழுகு வதையே பெரும் பேறாகக் கொண்டு திரிந்து உலகம் உய்ய வாழ்க்கை நடத்திவந்த இம்மூவருள் பொய்கையாழ்வாரிடம் ஞானத்தையும், பூதத்தாழ்வாரிடம் பக்தியையும், பேயாழ்வாரிடம் பெயருக்கேற்ற வைராக்கியத்தையும் சிறப்பாகக் காணலாம் என்பர்.

ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக் கொண்டிருந்த இம்மூவரையும், ஓரிடத்திலேயே சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் வாயிலாகத் தமிழ்நாட்டை வாழ்விக்க வேண்டுமென்று பகவானே சங்கற்பித்ததாகவும், சத்திய சங்கற்பனாகிய பகவானுடைய மனோரதம் பழுது படாமல் இவர்கள் இரவிலே திருக்கோவலூரில் ஒரு வீட்டின் இடைகழியிலே சந்தித்ததாகவும், இவர்கள் நெருங்கிக் கொண்டு நின்றபோது பகவானும் புகுந்து நெருக்கிக் காட்சி வழங்கியதாகவும் வழங்குகிற கதை, உலகிலேயே நித்திய யௌவன சௌந்தரியக் கதைகளில் ஒன்று.

'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' என்ற வாக்கை அறிந்தும் அறியாமலும் மந்திரமாகக் கொண்டு சிறப்பாகத் தமிழ்நாடும், பொதுவாக இந்தியாவும் ஒழுகிவந்திருப்பது சரித்திரப் பிரசித்தம்.

வெளியே கனத்த மழை; பேரிருள்; அந்த இடைகழியிலும் இருட்டு; அந்த இருட்டிலே, அந்த நாலாவது ஆளைக் கண்டுபிடிக்கத்தான் பொய்கையாழ்வார் பூமியாகிய தகழியில் கடல்நீரை நெய்யாகக் கொண்டு உதயசூரியனை விளக்காக ஏற்றிவைத்துப் பாடினாராம். அவர், 'சூரிய விளக்கு' ஏற்றியதும் பூதத்தாழ்வார்,

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி

Koviloor Digital Library

ஞானச் சுடர்விளக்(கு) ஏற்றினேன் நாரணற்கு,
ஞானத் தமிழ்புரிந்த நான்

[ஆர்வம் - அன்பின் மூலமாகப் பிறந்த உள்ளுணர்ச்சி. இன்பு - இன்பம். இடு திரி - விளக்கிலே இடும் திரி. நன்பு - நன்றாக.]

என்று மனமார வாயாரப் பாடித் தமது ஞான விளக்கையும் ஏற்றிவைத்தாராம்.

பொய்கையாழ்வார் பூமியை அகலாகக் கொண்டதுபோல், பூதத்தாழ்வார் ஆர்வமாகிய நெய்க்கும், இன்பமாக உருகிக் கொண்டிருக்கும் சிந்தையாகிய திரிக்கும் ஆதாரமாகிய தகழியாகத் தமது அன்பையே கொள்கிறார். இத்தகைய விளக்கிலே பகவானைக் கண்டுபிடித்தார்களாம்.

இந்தக் காட்சியைத்தான் பேயாழ்வார், 'கண்டேன்! கண்டேன்!' என்று பாடியிருக்கிறார். இத்தகைய ஞானக் காட்சி இம்மூன்று ஆழ்வார்களுக்கும் பொதுவானதுதான் என்பதற்கு இவர்களுடைய பிரபந்தங்களும் சான்றாகும்.

இம் மூவர் பாடியதும் ஞானத் தமிழ்தான்; எனினும் பூதத்தாழ்வார் பிரபந்தத்திலே ஞானத்தைக் காட்டிலும் அன்பும் ஆர்வமும் இன்ப உணர்ச்சியும் அதிகமாய்க் காணப்படுகின்றன என்று கருதலாம். எனவே இவருடைய, 'ஞானச்சுடர் விளக்கை' ஸாராம்சத்தில் பக்திச் சுடர் விளக்கென்றே சொல்லிவிடலாம்.

இந்த அன்பு விளக்கால் தாம் கண்ட பகவானையே இவர் தமக்குத் தாயும் தந்தையுமாகக் கருதினார். பகவானும் லக்ஷ்மீநாராயண மூர்த்தியாகவே இவருக்குக் காட்சியளித்தார். மகாலட்சுமியைப் 'பனி மலராள்' அதாவது, குளிர்ந்த தாமரைப் பூவில் பிறந்த பிராட்டி என்கிறார், இவர் தமது அன்பு நிறைந்த ஞானத் தமிழிலே.

இந்தப் 'பனிமலராளோடு' கூடிய மூர்த்தியைப் பனி மலராகிய தாமரைப் பூவால் அருச்சித்து வழிபட விரும்புகிறார்

Koviloor Digital Library

பூதத்தாழ்வார். ஆனால் தாமரைப் பூவைக் கொய்வதற்காக ஒரு தாமரைத் தடாகத்தைத் தேடிப் போகவில்லையாம்; பக்தியாகிற தாமரைப் பூவை ஏந்தி அடிபணிகிறார்.

இந்தத் தாமரைக்கு வேறு எந்தத் தாமரையும் நிகரில்லையாம். சிநேகமாகிற முத்தே இதன் புறஇதழ் என்று குறிப்பாகச் சொல்லுகிறார். தாமரைப் பூவுக்கு அக இதழும் வேண்டுமல்லவா? பக்திக் காதலின் பருவச் சிறப்புக்கள் மாணிக்கமும் வயிரமும் போலத் தோன்றி அக இதழாகவும் மகரந்தமாகவும் அமைகின்றனவாம்.

இத்தகைய அழகான மானஸிக பூஜையைக் குறிக்கும் பாட்டைப் பார்ப்போம்:

நகர்இழைத்து நித்திலத்து நாள்மலர்கொண்(டு) ஆங்கே
திகழும் மணிவயிரம் சேர்த்து – நிகர்இல்லாப்
பைங்கமலம் ஏந்திப் பணிந்தேன், பனிமலராள்
அங்கம்வலம் கொண்டான் அடி.

[நகர் - நகரம். நித்திலம் - முத்து. நாள் மலர் - அன்று மலர்ந்த மலர். மணி - மாணிக்கம். பைங்கமலம் - அழகிய தாமரை. அங்கம் வலம் - வல மார்பு.]

இவர் எம்பெருமானுக்கு ஒரு மானஸிக மண்டபம் - இதை ஒரு நகரமோ என்று அதிசயிக்கும்படி - நிர்மாணம் செய்துவிடுகிறாராம், தமது இருதயத்திலே. அந்த மண்டபத்திலேதான் பக்தி என்ற தாமரைப் பூவைக்கொண்டு பூசனை நடைபெறுகின்றது.

முத்தைப்போல் இருக்கும் சிநேக புத்தியோடும், பேரன்பின் வேறு நிலைகளோடும் சேர்ந்தே பக்திப் பூ மலர்ச்சி பெறுகின்றதாம். அன்பிலும் சிறந்த பூசனை உண்டோ?

தாம் ஞானத்தமிழ் விளக்கு ஏற்றிப் பார்த்த லக்ஷ்மீ நாராயண மூர்த்திக்கு எத்தகைய பக்திப் பெரும்பூசனை! இத்தகைய பக்தி இந்த ஆழ்வாரின் முக்கிய இயல்பு என்று சொல்லலாம்.

Koviloor Digital Library

பூதத்தார் தோன்றிய மாமல்லபுரம், சென்னை நகரத்திற்குத் தெற்கே கடற்கரையில் நவநாகரிகப் பரபரப்பிற்கும் சந்தடிகளுக்கும் அருகிலேயே இருக்கிறது. இந்தத் தலம் இன்று உலக நிலையாமையை நினைவூட்டுவதாய், உயிரற்றதாய் இருந்தும் உயிர்பெற்றதாகக் காண்கிற கற்பாறைகளும் குகைகளும் கோயில்களும் உள்ள ஒரு வசிய பூமியாகக் காணப்படுகிறது.

சிற்ப ஜாலங்களுக்குப் பேர்போன இச்சிற்றூர் அக்காலத்தில் பொருள் வளமும் நாகரிக மாட்சியும் உள்ள துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்திருக்க வேண்டும்.

அந்நாளிலேயே இத்துறைமுகப்பட்டினத்தில் மரக் கலங்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கு இருந்திருக்க வேண்டும்; இன்றும் இக்கால நாகரிகத்திற்கு இசைய இங்கே ஒரு கலங்கரை விளக்கம் உண்டு. இவ்வூரில் தோன்றிய பூதத்தாரை, வாழ்க்கைப் பெருங் கடலிலே யாத்திரை செய்வோரில் திசை காண விரும்பும் விஷ்ணு பக்தர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகக் கருதக்கூடும்.

★

Koviloor Digital Library

12. காதலே தவம்

திருக்கோவலூரில் பூதத்தார் பொய்கையாரையும் பேயாரையும் சந்தித்ததற்கு முன்பு, தனிமையாக, 'அதோ பகவானுடைய பூதம் போகிறது!' என்று சொல்லும்படி எம்பெருமானது கல்யாண குணங்களை அநுபவித்துக் கொண்டே சஞ்சரித்துக் கொண்டிருந்ததாகவும், அந்தச் சந்திப்பிற்குப் பின்பு அவர்களோடு சேர்ந்து நெடுங்காலம் சஞ்சரித்துத் திவ்விய ஸ்தலங்களில் பகவானை வாழ்த்தி உலகத்தை வாழ்வித்ததாகவும் சொல்லுகிறார்கள். பொய்கை யாரையும் பேயாரையும்போல் பூதத்தாரும் திருமாலின் அருளால், 'மூப்பு உன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை!' என்று துணிந்து யோக பலத்தால் இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார் என்பர்.

திருக்கோவலூரில் கிடைத்த அநுபவம் மேன்மேலும் பரிபக்குவமாகி வளர, இவர் பகவானுடைய பண்புகளைக் கண்டு கண்டு அநுபவித்துத் தமது உள்ளத்தை மேன்மேலும் பண்படுத்திக் கொண்டாரென்றும், தமது அநுபவத்தைப் பிறரும் அறிந்து அநுசரித்து வாழுமாறு பிரபந்த ரூபமாக வெளியிட்டார் என்றும் சொல்லலாம். இந்தப் பிரபந்தத்தைப் பொய்கையாழ்வாருடைய அந்தாதிப் பிரபந்தத்திற்கு அடுத்தபடியாகச் சேர்த்து வைத்து, 'இரண்டாம் திருவந்தாதி' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இனி, இந்தப் பிரபந்தத்திலிருந்து பூதத்தாழ்வார் வாழ்க்கையைக் குறித்தும் உபதேசங்களைக் குறித்தும் நாம் என்ன தெரிந்து கொள்ளக் கூடுமென்று பார்க்கலாம்.

இந்த ஆழ்வார் திவ்ய ஸ்தலங்களில் வழிபாடு செய்ததோடு யோக பலத்தால் மானச வழிபாடும் செய்தார்.

Koviloor Digital Library

தியானம் செய்து தரிசனம் பெற்றார் என்பதற்கெல்லாம் இவர் பிரபந்தத்தில் ஆதாரம் உண்டு. ஹரிகதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொல்லிச் சொல்லி இவர் தமது பக்தியை வளர்த்துக் கொண்டதோடு, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்தும், இந்திரிய ஜயம் செய்தும் பகவான்மீது தமக்குள்ள அன்பைப் பெருக்கிக் கொண்டார் என்பதற்கும் பிரபந்த ஆதாரம் உண்டு.

பகவந்நாம ஸங்கீர்த்தனம் சுலபமான வழி என்பதை அநுபவத்தால் கண்டுதான் பிறருக்கும் உபதேசிக்கிறார்.

பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்!
தீர்த்தகரர் ஆமின் திரிந்து.

(பேர்த்த கரம் - திக்குகளையே பேர்த்துப் போடும் என்று சொல்லும்படி விம்மி வளர்ந்து நாலு திசைகளையும் தழுவிக் காப்பாற்றும் கைகள். தீர்த்தகரர் - 'தீர்த்தங்கரர்' என்ற பதத்தின் சிதைவு; ஜைனப் பெரியோர்களைக் குறிக்கும் இப்பதம், தாம் திரிந்த ஸ்தலங்களையெல்லாம் பரிசுத்தமாக்கக் கூடிய பாகவதப் பெரியார்களை இங்கே குறிப்பிடுகிறது.)

இவர், பக்தி வாழ்வே வாழ்வென்று வாழுமாறு தூண்டுகிறார். 'தாமரைப் பூ இருக்கிறது, பூஜை செய்ய; உள்ளம் இருக்கிறது, பக்தி செய்ய!' என்று சொல்லுகிறவர், பக்தர்களுக்கு மறுமையிலும் நரகம் இல்லை, இம்மையிலும் நரக வாழ்வு போன்ற கவலை இல்லை என்று உறுதி கூறுகிறார்.

தாம் அடைந்த மகிழ்ச்சியின் பாக்கியத்தைப் பிறரும் அடைய வேண்டுமென்று ஆசைப்படுகிறார். இத்தகைய பக்திச் செல்வத்தை அடையாதவர்கள் ஏழைகள் என்கிறார்.

இவர் தமது நெஞ்சுக்கு உபதேசம் செய்து தம்மைத் திருத்திக் கொண்டதும் பிறரையும் திருத்த முயன்றார். 'பக்தியோடு உயர்ந்த வாழ்வு வாழாதவர்களை மானிடராகவே மதிக்கமாட்டேன்!' என்கிறார்.

Koviloor Digital Library

இப்படியெல்லாம் பிரசாரம் செய்துகொண்டு இவர் திரிந்த திவ்விய ஸ்தலங்களில் சில, பின்வரும் வெண்பாவில் குறிக்கப்பட்டிருக்கின்றன:

தமர்உள்ளம், தஞ்சை, தலைஅரங்கம், தண்கால்,
தமர்உள்ளும் தண்பொருப்பு, வேலை - தமர் உள்ளும்
மாமல்லை, கோவல், மதிள்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக்(கு) இடம்.

[தமர் உள்ளம் - பக்தர்களுடைய இதயம். தலை அரங்கம் - சிறந்த திருவரங்கம். தண்கால் - திருத்தண்கால் என்ற திவ்விய ஸ்தலம். தமர் உள்ளும் - பக்தர் தியானிக்கிற. தண்பொருப்பு - குளிர்ந்த மலையாகிய திருவேங்கடம். வேலை - கடல்; (இங்கே) திருப்பாற்கடல். மாமல்லை - பெரிய கடல் மல்லை என்ற திவ்விய ஸ்தலம். கோவல் - திருக்கோவலூர். குடந்தை - கும்பகோணம். ஏ வல்ல - அம்புகள் போடுவதில் வல்லவனான; துஷ்ட நிக்கிரகம் செய்வதில் வல்லவனான.]

இந்தப் பாட்டில் கூறியுள்ள ஒன்பது திருப்பதிகளும், 'ஒருநாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள் இராதபடி ஓடித் திரிந்த' இந்த ஆழ்வாரும் உகந்து வந்து அடிக்கடி பார்த்துப் போன ஸ்தலங்கள் என்று ஊகிக்கலாம்.

விஷ்ணு ஸ்தலங்களிலெல்லாம் தலையானது ஸ்ரீரங்கம் என்பதை இவரும் ஒப்புக் கொள்கிறார். எனினும் தம்முடைய ஊரான கடல்மல்லையையும் தம்முடைய விசேஷ உகப்பிற்கு உரிய திருவேங்கடத்தையும், 'தமர் உள்ளும்' (பக்தர் சிந்திக்கிற) என்ற விசேஷணம் கொடுத்துக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

இப்படிக் குறிப்பிடும் இந்த ஆழ்வார் திவ்விய ஸ்தலங்களில் எல்லாம் திவ்விய ஸ்தலம் என்றும், திருவரங்கம் திருவேங்கடம் முதலிய திருப்பதிகளைக் காட்டிலும் மேலான

Koviloor Digital Library

திருப்பதி என்றும் குறிப்பிடுவது அன்பர்களுடைய உள்ளத்தைத்தான். பகவந்நாமத்தைச் சொல்லிக் கொண்டு உள்ளக் கோயிலில் உத்தமனை வழிபடும் பக்தியோகமே யோகம், தவம், பாக்கியம் எல்லாம் என்பது இவரது அந்தரங்கமான கொள்கை என்று கருதலாம்.

இறுதிப் பாட்டிலே இவர், 'என்தன் அளவன்றால் யானுடைய அன்பு' என்று, ஸ்வாநுபவம்' பேசிப் பிரபந்தத்தை முடிக்கிறார். 'என்னளவில் நிற்கவில்லையே உன்னிடம் நான் வைத்திருக்கிற அன்பு!' என்று சொல்லும் இம் மனநிலையை இவரது வாழ்க்கையின் ஜீவநாதமாகக் கொள்ளலாம்.

'அன்பு, ஆழியானை அணுகு என்னும்' - அதாவது, 'திருமாலை அணுகிவிடு' என்று அன்பு கூறுவதாகச் சொல்லுகிறார் பொய்கையார். இந்த வாக்கோடு பூதத்தார் கூறுவதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

'சிறு கிளையில் பெரும் பழம் தொங்குவதுபோல் என் உயிர் மிகச் சிறிது; என் காமமோ பெரிது!' என்று சொன்ன காதலியின் நிலை பூதத்தாழ்வார் நிலையும்! இவரால் தாங்க முடியாதபடி வளர்ந்து சென்ற காதல் இந்தப் பிரபந்தத்திலே ஊடுருவிக் கிடக்கிறது.

இத்தகைய பக்திப் பெருங்காதலைப் 'பக்திப் பெருந்தவம்' என்றும் குறிப்பிடலாம். பக்திப் பெருந்தவம் குறித்துப் பூதத்தாழ்வார் சொல்வதைக் கேட்போம்:

> அறிந்(து)ஐந்தும் உள்அடக்கி, ஆய்மலர்
> கொண்(டு), ஆர்வம்
> செறிந்த மனத்தராய்ச் செவ்வே - அறிந்(து) அவன்தன்
> பேர்ஓதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே,
> காரோத வண்ணன் கழல்.

Koviloor Digital Library

[ஐந்து - (இங்கே) ஐந்து இந்திரியங்கள். ஆய்மலர் - ஆராய்ந்து தேர்ந்தெடுத்த பூக்கள். செவ்வே - செவ்வையாக. காரோத வண்ணன் - கருங்கடல் வண்ணனாகிய திருமால். கழல் - திருவடி.]

பகவானுடைய திருநாமங்களை ஓதித் துதிப்பதே பெருந் தவம் என்கிறார் ஆழ்வார். அன்பைத் துறக்க வேண்டாம்; ஆர்வத்தைத் துறக்க வேண்டாம் என்கிறார்.

அழகான மலர்களோடும், அவற்றைக் காட்டிலும் அழகான அன்பு மலரோடும் பக்தி செய்யுங்கள் என்கிறார். அறிய வேண்டியதை அறிந்து கொண்டு பகவானுடைய திருநாமங்களை ஓதிக்கொண்டே நாட்டில் இருக்கலாம்; வாழ்வு நடத்தலாம்; இதுவே தவம்; பெருந்தவம் என்கிறார்.

இந்தத் தவத்திலும் புலனடக்கம் சித்திக்கிறதாம். அந்தத் தவத்தைக்காட்டிலும் இந்தத் தவமே சுலபமாக இந்திரிய ஜபம் அளிக்கத் தக்கது என்பது குறிப்பு. இந்த அன்பு நெறியை - அமுதமான இன்ப நெறியை - அறிந்து கொண்டதும், இந்திரிய சுகமாகிய சிற்றின்பம் தானே இந்த ஆரா அமுதத்தில் அடங்கிப் போகும் என்பது கருத்து. புலனைந்தும் பகவத் விஷயத்திலே ஊன்றிப் போக, அந்தக் காமம் பக்திக் காமமாகிவிடுமாம்.

சாதாரணமான தவங்களில் நாமே சித்த சக்தியை உபயோகித்துப் பெரு முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது; பக்திப் பெருந் தவத்திலோ அந்தக் கவலை இல்லை. கைகள் கைங்கரியமான முயற்சிகளைச் செய்து கொண்டுதான் இருக்கும்; வாய் பகவந்நாமத்தைச் சொல்லிக் கொண்டும், நெஞ்சு அருளை நம்பிக்கொண்டும் இருக்கும்.

இது குறித்துப் பூதத்தாழ்வாரின் அபிப்பிராயத்தை இன்னும் தெளிவாகப் பார்க்கலாம்:

Koviloor Digital Library

தனக்கடிமை பட்டது தானறியா னேலும்
மனத்தடைய வைப்பதாம் மாலை: - வனத்திடரை
ஏரியாம் வண்ணம் இயற்றும் இதுஅல்லால்,
மாரியார் பெய்கிற்பார் மற்று?

[பட்டது - அமைந்திருக்கிறது என்பதை. தான் அறியானேலும் - ஒருவன் தானே அறிந்துகொள்ளாமல் இருந்தாலும். மனத்து அடைய - இறைவன் தானாகவே மனத்தை அடைந்த அளவில். வைப்பதாம் மாலை - அத்திருமாலை இடம் கொடுத்து வைத்துக் கொள்வது தகும். திடர் - மேட்டுநிலம். பெய்கிற்பார் - பெய்யுமாறு செய்விக்க வல்லவர்கள்.]

'அருள் இன்னாருக்குத்தான், மற்றவர்களுக்கு இல்லை' என்று யாரோ சொல்லத் துணிவர்?

மாரிதான் சிலரை
வரைந்து பெய்யுமோ?

என்று, 'கபிலரகவல்' கேட்கிறதல்லவா? அப்படியே பகவானுடைய அருள்மாரியும் எவரையும் வரைந்து விலகிப் பெய்வதில்லை.

எனினும் அந்த அருளை நாம் பெற்றுக் கொள்ளும்படி, அந்த அருள்மாரி தடையின்றி வந்து இறங்கும்படி, உள்ளத்தைப் பள்ளமாக்கிக் கொள்ள வேண்டும்; ஏரியாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வளவுதான் அருள்மழையைப் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டிய தவம் என்கிறார் பூதத்தாழ்வார்.

ஒரு குடியானவன் தன்னுடைய நிலபுலங்களுக்கு நீர் பாய்ச்சும் ஏரியைப் பள்ளமாக வைத்துக் கொள்ளாமல் காடெழுந்து கிடக்கும் திடராகும்படி விட்டுவிட்டால் மழை பெய்தும் பயன் என்ன? அந்த வனத் திடர்களைக்

Koviloor Digital Library

குழித்து ஏரியாக்கினாலன்றி மழைநீர் தங்கி நிலத்தை விளைவிக்குமா?

மாரி பெய்யுமாறு செய்யும் வல்லமை வேளாளனுக்கு இல்லை; எனினும் ஏரியைத் தயாராக்கி வைத்துக் கொள்ளலாமல்லவா?

இப்படி உயர்தர ஞான விவசாயம் செய்யும் வேளாளர்களே பக்தர்கள். இவர்கள் தங்கள் உள்ளத்தைக் காடெழுந்த மேட்டு நில.மாக்கிவிடாமல் அருள் வந்து விழும் ஏரியாக வைத்திருப்பார்கள்.

நாம் செய்யும் சாதனங்களும் அனுஷ்டானங்களுமே திருவருள் பெருகுவதற்கு இன்றியமையாதன என்று எண்ண வேண்டாம். கடையில் ஒரு பொருளை வாங்குவதற்கு வேறொரு பொருளைக் கொடுப்பதுபோல் பகவானோடு வியாபார முறையால் அருளைப் பெற முடியாது.

அருள் பொழிவது பகவானுடைய சங்கற்பம். எம்பெருமான் எப்படியாவது நம்மைத் திருத்திப் பணி கொள்ள வேண்டுமென்று படாத பாடு படுகிறான் என்கிறார்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள். நம்மைக் காப்பாற்றுவது நம்முடைய சாதனமல்ல; நம்முடைய முயற்சியல்ல; அவன் கடமை; அவன் பொறுப்பு.

ஆனாலும் நம்மை மண்ணும் மரமும் கல்லும் கரியும் போல் அசேதனப் பொருளாகப் படைத்துவிடவில்லையே! அறிவுள்ள சேதனப் பொருளாகப் படைதிருக்கிறானே. அந்த அறிவை உபயோகித்து நாம் செய்ய வேண்டியதும் உண்டல்லவா?

அவனைப் பெற்று வாழ வேண்டும் என்னும் ருசியாவது வேண்டாமா, ஆசை வேண்டாமா, அன்பு வேண்டாமா, ஆர்வம் வேண்டாமா? 'வேண்டாம்' என்று விலக்காத

Koviloor Digital Library

மனநிலையாவது வேண்டாமா? சுருங்கச் சொன்னால் வாழ்விலே பக்திச் சுவை இம்மையிலும் பேரின்பம் என்பர்.

இறைவனை இதயக் கோயிலில் தியானித்துக் கொண்டிருந்தால், அவன் அருளாகிய வெள்ளத்தை நம் உள்ளமாகிய பள்ளத்திலே நிரப்பிவிட்டால், முத்தியென்ற விடுதலை பெறுவதற்கு வேறு சாதனங்கள் வேண்டாம்; வேறு அனுஷ்டானங்கள் வேண்டாம். அந்த நிலையில் 'இச் சுவையே போதும்; அந்த முத்திச் சுவையும் வேண்டாம்!' என்றுகூடத் தோன்றுகிறதாம் பக்தர்களுக்கு.

இத்தகைய பக்திப் பெருந்தவத்தையே தவமாகச் செய்கிறார்கள் பக்தமணிகள். இத்தகைய நிலையைச் சரணாகதி தர்மமாகிய **பிரபத்தி** என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிறப்பித்துப் பேசுகிறார்கள்.

இந்த நிலை தவநிலையாகுமென்றால், 'தவத்தை உபாயமாகக் கொண்டு முனிவர்கள் எத்தனையோ காரியங்களைச் சாதித்துக் கொண்டார்களே; பக்திப் பெருந் தவத்தையும் அப்படிப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ?' என்று கேட்கலாம். இதற்குப் பதிலாக ஸ்ரீ வைஷ்ணவ அறிஞர்கள் உபமானங்களும் கதைகளும் சொல்வதுண்டு.

இதோ ஒரு கதை : ஒரு செம்படவனுக்கு ஒரு முத்து அகப்பட்டது. மீன் பிடித்துப் பிழைக்கும் அவனுக்கு அது விலை உயர்ந்த பொருள் என்று தெரியாது. பசியோ தாங்க முடியவில்லை. அந்த முத்தை நாழி நெல்லுக்கு விற்று விட்டான்; விற்றுப் பசி தீர்ந்து மகிழ்ந்து போனான்.

இப்படியே பக்திப் பெருந்தவமாகிய முத்தையும், 'செல்வம் வேண்டும், பிள்ளை குட்டி வேண்டும், காரிய சித்தி வேண்டும்' என்றெல்லாம் உபயோகித்துக் கொள்கிறவர்களும் உண்டு. ஆனால் இத்தகைய பக்தர்கள் பக்திப் பெருந்தவம்

Koviloor Digital Library

என்ற அந்தப் பெரிய ஏணியில் தாழ்ந்த படியில் இருப்பவர்களே.

வெண்முத்தைச் செந்நெல்லுக்கு வாங்கிய அந்த வேளாளன் அதே முகத்தைக் கொண்டுபோய் ஒரு வியாபாரிக்கு விலைகூறினான். அவனுக்கு முத்தின் மதிப்பு நன்றாகத் தெரிந்துவிட்டது. அவன் பேரம் பண்ணி மிகக் குறைந்த விலைக்கு வாங்கிவிட்டான். நெல்லுக்குக் கிடைத்தது வெள்ளிக்கு மாறிவிட்டதே என்ற மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான் விற்ற வேளாளன்.

பக்திப் பெருந்தவத்தை உபயோகித்து வெளகிகப் பதவிகள் தேடிக் கொள்வோர் உண்டு. எவ்வளவு பெரும் பதவியைப் பக்தியாகிய விலை கொடுத்து வாங்கிக் கொண்டாலும், வேளாளன் முத்தைக் குறைந்த விலைக்கு வியாபாரியிடம் விற்ற கதையாகவே முடியும்!

அந்த வணிகன் அந்த முத்தை என்ன செய்தான்? பசி தெரியாதவன்; பணமுடை இல்லாதவன். சீமான்கள் தகுந்த விலைக்குக் கேட்டுப் பார்த்தும் கொடுக்கவில்லை. ஒரு மகாராஜாவிடம் போய் வணிகன் முத்தை மிகவும் உயர்ந்த விலைக்கு விற்றுவிட்டான்.

அந்த வணிகனைப்போல் மகா ராஜாதி ராஜனாகிய பகவானிடத்திலேயே பேரம் செய்து வாணிபம் செய்யப் பார்க்கிறவர்களும் உண்டு. ஆம்; பக்தி வாணிபத்திலே சூட்சும சக்திகளையும் சித்திகளையும் பெறுவோர் உண்டல்லவா?

முத்தி வாங்கின மகாராஜா அதன் அழகிலே மோகித்துப்போய் ஒரு பெரிய ஆரத்திலே இணைத்து அணிந்து கொண்டான். இவனுடைய நிலையில் இருப்பவர்களே பக்திப்பெருந்தவத்தை உபாயமாகவோ சாதனமாகவோ கொள்ளாத பரம பக்தமணிகள்.

Koviloor Digital Library

இவர்கள் ராஜகுலத்திலோ, வேறு உயர்குலத்திலோ பிறக்க வேண்டிய அவசியமில்லை; இத்தொண்டர்களுக்கே ராஜகுலம் பிறந்துவிடுகிறது. இவர்களுடைய வழியைப் 'பிரபத்தி' என்று சொல்லும் ஸ்ரீ வைஷ்ணவர்கள், இந்தத் தொண்டக் குல அரசுகளைப் 'பிரபன்னர்' என்று போற்றுவர்.

இவர்கள் பக்தியையும் பிரபத்தியையும், 'மோட்ச சாதனம்' என்ற உயர்ந்த விலைக்கும் விற்கமாட்டார்கள். இதுவே பக்திக் காதல் என்ற தவத்தின் தனிப்பெரும் பயன்.

இப்படிப் பக்திப் பெருங் காதலையே தனிப் பெருந்தவமாகக் கண்டவர்களில் பூதத்தாழ்வாருக்கு ஒரு சிறந்த ஸ்தானம் உண்டு. ஸ்ரீ வைஷ்ணவர்கள் இத்தகைய காதல் - தவ உலகின் பன்னிரண்டு சூரியர்களாகப் பன்னிரண்டு ஆழ்வார்களைக் குறிப்பிட்டு, 'முதலாழ்வார் மூவர்' என்ற முப்பெருஞ் சோதிகளில் பூதத்தாழ்வாரை இரண்டாமவராகச் சேர்த்து வழிபடுகிறார்கள்.

★

Koviloor Digital Library

13. பெயரிலும் காட்சி; கதையிலும் காட்சி

பகவானுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதில் பொய்கையாழ்வாருக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ, அவ்வளவு நம்பிக்கை பூதத்தாழ்வாருக்கும் உண்டு.

உள்ளத்தை ஊரெல்லாம் திரியவிட்டு, ஆகாயக் கோட்டைகளுக்கிடையே பறக்கவிட்டு, வாய் மாத்திரம் திருநாமங்களை ஓதி உருவேற்றிக் கொண்டிருந்தால் பயனில்லையென்று பொய்கையாழ்வார் கருதுவதும் பூதத்தாழ்வாருக்கு உடன்பாடுதான்.

பகவந் நாமங்களைச் சிந்தித்துச் சொல்லும்போதுதான் அதே நாமங்களைத் தனதாக ஒப்புக் கொண்டு பகவான் தன்னைக் காட்டிக்கொடுக்கிறான் என்றும், அப்போது அவனுடைய திருவடிகளைக் காணலாமென்றும் கூறுவர் பொய்கையாழ்வார். இந்த அபிப்பிராயத்தையும் ஒப்புக் கொள்கிறார் பூதத்தாழ்வார்.

பொய்கையார் கேட்கிறார்,

> பேரே வரப்பிதற்றல் அல்லால், எம் பெம்மானை
> ஆரே அறிவார்?

[பெம்மான் - பெருமான்.]

என்று. 'பிதற்றல்' என்று சொல்வதையும் கவனிக்க வேண்டும். நாம் வாயினால் ஏதேனும் ஒன்றைச் சொல்லத் தொடங்கினாலும் அது பகவானுடைய திருநாமமாகவே வருமாறு பழகியிருக்க வேண்டுமாம்.

Koviloor Digital Library

எம்பெருமான் உணர்வினால் அளவிட முடியாத வனாகையினாலே அவனது மகிமையை உள்ளபடி உணர்ந்து அவன் பெயர்களைச் சொல்ல முடியாது. அன்பினால் சிந்தித்துத் திருநாமத்தை வாய் வந்தபடி பிதற்றவே, அவன் அந்த இதயத்தைப் பார்த்து அருள்புரியக் காத்திருக்கிறான் என்பது குறிப்பு. இந்தப் பொய்கையார் கருத்தும் குறிப்பும் பூதத்தாருக்கும் உடன்பாடுதான்.

பகவந் நாமங்களைச் சொல்லும்போது இம்மைக்கு எவ்வளவோ நன்மை; மறுமைக்கும் நன்மைதான் என்கிறார் பொய்கையார்:

ஆளமர் வென்றி அடுகளத்துள் அந்நான்று
வாளமர் வேண்டி வரைநட்டு - நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே, தொன்னரகைப்
பற்றிக் கடத்தும் படை.

[ஆள் அமர் வென்றி - போர்வீரர்கள் நெருங்கியிருப் பதும் வெற்றியுடையதுமான. அடு களத்துள் - எதிர்த்தவரைக் கொல்லுகிற போர்க்களத்திலே. அந்நான்று - அக்காலத்திலே. வரை நட்டு - மலையை மத்தாக நட்டு. நீள் அரவு - நீண்ட வாசுகி என்ற பாம்பு. கடைந்தான் - பாற்கடலைக் கடைந்த பகவான். தொல் நரகு - பழமையான நரகம்.]

என்ற வாக்கு, பக்தர் செவிகளிலே, பக்தர் இதயங் களிலே, பகவந்நாமத்தை நம்பிச் சொல்லுகிறவர்களுக் கெல்லாம், 'இம்மையிலும் கவலை என்ற நரகம் உங்களுக்குக் கிடையாது' என்று அநுபவரீதியாக ஆறுதல் அளிப்பதுபோல் விழுகிறது. இத்தகைய நம்பிக்கையும் பூதத்தாருக்கு உண்டல்லவா?

மேலும், பொய்கையாழ்வார்,

நாவாயில் உண்டே; நமோநார ணாயஎன்(று)
ஓவா(து) உரைக்கும் உரைஉண்டே; - மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகைஉண்டே; என்ஒருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்?

Koviloor Digital Library

[நா - நாக்கு. ஓவாது - ஓயாது. மூவாத - கிழத்தன்மை யற்ற. மா - பெரிய. கதிக்கண் - கதியிலே. என் - என்னோ?]

என்ற பாட்டில் பகவந் நாமத்தைப் பற்றிய தமது கொள்கையை வெகு அழுத்தமாக வெளியிடுகிறார்.

இதை நினைவூட்டும் ஒரு பாட்டு, பூதத்தாழ்வாரின் பிரபந்தத்திலும் காணப்படுகிறது:

தாம்உளரே; தம்உள்ளம் உள்உளதே; தாமரையின்
பூவுளதே; ஏத்தும் பொழுதுண்டே? – வாமன்
திருமருவு தாள்மருவு சென்னியரே; செவ்வே
அருநரகம் சேர்வ(து) அரிது.

[ஏத்தும் - புகழும். வாமன் - வாமனமூர்த்தியான பகவான், திரு மருவு - அழகு சேர்ந்த, தாள் மருவு - திருவடிகளிலே பொருந்தக்கூடிய. சென்னியர் - தலையை உடையவர்கள். செவ்வே - நேராக.]

கடவுளைப் பணிவதற்குத் தகுந்த புத்தியோடு கூடிய மனிதர்கள் இருக்கிறார்கள். புத்தியோடு சிந்திக்க உள்ளமும் இவர்களுக்குள்ளே இருக்கிறது. அவனைத் தொழுவதற்குத் தாமரைப்பூ, குளந்தோறும் பூத்துக் கிடக்கிறது. தோத்திரம் செய்து புகழ்வதற்கும் காலம் இருக்கிறது; பணியத் தலை இருக்கிறது. 'இப்படி ஒன்றும் குறைவில்லாமல் இருக்க, இவ்வுலகத்தவர்கள் நேராக நரகத்தில் போய் விழுவது அதிசயந்தான்!' என்று ஆச்சரியப்படுவதுபோல் பேசுகிறவர், பகவந் நாமத்தைக் குறுக்கு வழியாகவும், ராஜபாதையாகவும் காட்டுகிறார்.

பகவந் நாமங்களை நன்றாக அறிந்து அன்புடன் அழகாக உச்சரிக்கிறவர்களையெல்லாம் பகவான், 'நித்திய சூரிகள்' என்ற தமது அந்தரங்க கிங்கரர்களைப்போல் பணி கொள்கிறானாம்:

Koviloor Digital Library

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்தன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றினால், - வானத்(து)
அணிஅமரர் ஆக்குவிக்கும் அஃதன்றே, நங்கள்
பணிஅமரர் கோமான் பரிசு.

[தானத்தால் - ஸதானத்தினால். வானம் - (இங்கே) பரமபதம். வானத்து அணி அமரர் - பரமபதத்தையும் அழகு செய்யும், 'நித்திய சூரிகள்' என்ற தெய்வ வகுப்பினர். நங்கள் - (இங்கே) எங்களுடைய. பணி அமரர் - கைங்கரியம் செய்யும் நித்திய சூரிகள். கோமான் - தலைவனாகிய பகவான். பரிசு- தன்மை.]

ஞானத்தால் நன்றாக உணர்ந்து அன்பின் எல்லையாகிய ஸ்தானத்தில் நின்று பகவந் நாமங்களைச் சொல்லுகிறவர்கள், பகவத் கைங்கரியமாகத் தங்கள் கடமைகளையெல்லாம் செய்துகொண்டு இந்த உலகத்திலேயே பரமபத வாசிகளைப் போல் அவன் அருளால் வாழ்க்கை நடத்தலாம் என்பது குறிப்பு.

பகவந் நாமத்தைக்கொண்டு பக்தர்கள் தாங்கள் மாத்திரம் ஈடேறுவதோடு திருப்தி அடைவதில்லை. நாடு முழுவதும் பரிசுத்தமாகும்படி பக்தி பண்ணிக் கொண்டே சஞ்சரித்துப் பிறரையும் திருத்திப் பணிகொள்ள வேண்டுமாம்.

உண்மையான வாழ்வு, அழகான வாழ்வு, தூய வாழ்வு, பகவந் நாமங்களை நன்குணர்ந்து உச்சரித்துப் பிறரையும் திருத்தி வாழும் பக்தருடைய வாழ்வுதான் என்பது பூதத்தாழ்வார் கருத்து.

'மாதவனே நமக்கு எங்கும் கதி' என்னும் மனம் படைத்து நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருக்கும் பக்திச் செல்வமே தனிப்பெருஞ் செல்வம் என்பதும் இவர் கொள்கைதான்:

Koviloor Digital Library

சிறந்தார்க்(கு) எழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன்; - 'அறம் தாங்கும்
மாதவனே!' என்னும் மனம்படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினால் உள்ளு.

[உள்ளு - நினைத்திரு.]

'ஈசுவரனே தருமத்தைத் தாங்குகிறவன்' என்று நம்பி நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தால், நாமும் அவன் கருவியாகி அறம் தாங்கிப் பணியாற்றும் ஆற்றலும் செல்வமும் பெறக்கூடும் என்பது குறிப்பு.

இப்படியெல்லாம் பகவந் நாம ஸங்கீர்த்தனத்தின் அருமை பெருமைகளைப் பூதத்தாழ்வார் பொய்கையாழ் வாரைக் காட்டிலும் அதிக அளவில் வற்புறுத்துகிறார் என்று ஊகிக்கலாம்.

பொய்கையாழ்வாரைப்போல் பூதத்தாழ்வாருக்கும் ஹரிகதைகளில் பக்தி விசுவாசம் உண்டு. உதாரணமாகக் கடல்கடைந்த கதையை அவரும் பிரஸ்தாபிக்கிறார்; இவரும் பிரஸ்தாபிக்கிறார்.

வாள்போன்ற படைகளோடு வாள் போன்ற கோரப் பற்களையும் உடைய - துஷ்ட சக்திகளின் அறிகுறியான - அசுரர்கள் மாளும்படி, கடல் குழம்பும்படி, அமிர்த மதனம் செய்தான் என்று பூதத்தாழ்வார் கதை சொல்லும்போதே, படாதபாடுபட்டும் அன்புக் கடவுள் நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்பான் என்ற பாடம் குறிப்பாக வலியுறுத்தப்படுகிறது.

இதே பாடத்தைத் திருமால் பன்றியாகித் துஷ்ட நிக்கிரகம் செய்து பூமியைக் காப்பாற்றினான் என்ற புராணக் கதையிலும் காணலாம். இழிபிறப்பு என்று பாராமல் பன்றியாகியும் ரட்சகத் தொழிலில் முனைந்து நிற்கும் தியாகத்தை இந்த அவதாரம் குறிப்பிடுகிறதாம்.

Koviloor Digital Library

நரசிங்கமாகித் துஷ்ட நிக்கிரகம் செய்து, 'ஸத்யாக்ரகி' யான பிரகலாதனுக்கு அருள்செய்த கதையும் பொய்கை யாழ்வார் விசேஷமாய் உகக்கும் கதைகளில் ஒன்று. இந்தக் கதை பூதத்தாழ்வாரும் உகப்பதுதான்.

என்னெஞ்சம் மேயான், என் சென்னியான் தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன்

[மேயான் - மேவினான்; பொருந்தினான். சென்னியான் - தலையிலே உள்ளான். தானவன் - அசுரன்; (இங்கே) இரணியன். வன்னெஞ்சம் - வலிய (கடினமான) நெஞ்சு. கீண்ட - கிழித்த. மணிவண்ணன் - நீல ரத்தினம் போன்ற நிறத்தையுடையவன்.]

என்று பூதத்தார் கூறுவதைக் கேளுங்கள்.

'என் நெஞ்சிலேயிருந்து அருள்புரிந்து என்னைத் திருத்திப் பணிகொண்ட எம்பெருமான்தான் இரணியனுடைய வன்னெஞ்சிலும் இருந்தான்! வேறுவழி இல்லாததால் அந்த முரட்டுத்தனமான நெஞ்சைக் கிழித்துத் திருத்த வேண்டியதா யிற்று!' என்பது கருத்து.

இளகிய, அன்பு நிறைந்த நெஞ்சை ஈசன் திருத்திப் பணிகொள்ளும் வழி வேறு; ஹிம்ஸையும் பகைமையும் உள்ள அசுர நெஞ்சை முடித்துத் திருத்தும் வழி வேறு. மந்த மாருதமும் அவன் அருள்தான்; சண்ட மாருதமும் அவன் அருள்தான் என்பது குறிப்பு.

ஹரிகதைகளிலெல்லாம் உலகம் அளந்த கதை மகத்தான உண்மையை வெளியிட்டது பொய்கையாழ்வாருக்கு. அந்தக் கதை தன்னை அழகான கவிதையில் வெளியிட்டுக் கொண்டது. பூதத்தாழ்வாருக்கும் இக்கதையில் விசேஷமான பிரேமைதான்.

இருவர் வாக்கிலும் இக் கதை கவிச்சுவையோடு வெளிப்படுகிறது.

Koviloor Digital Library

நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப, நீண்டதோள்
சென்றளந்த தென்பர் திசையெல்லாம்

என்ற பூதத்தாழ்வார் வாக்கை,

அடியும் படிகடப்பத் தோள்திசைமேல் செல்ல,
முடியும் விசும்பளந்த தென்பர்

[படி - பூமி. கடப்ப - கடக்க. விசும்பு - ஆகாசம்.]

என்ற பொய்கையாழ்வார் வாக்கோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

'உலகளந்த திருவடியை நான் இன்று நேற்று அறிந்துகொண்டேன் என்பதில்லை' என்கிறார் பூதத்தாழ்வார்:

இன்றா அறிகின்றேன் அல்லேன், இரு நிலத்தைச்
சென்(று)ஆங்(கு) அளந்த திருவடியை; - அன்று
கருக்கோட்டி யுள்கிடந்து கைதொழுதேன், கண்டேன்
திருக்கோட்டி எந்தை திறம்.

[இருநிலம் - விசாலமான பூமி. கருக்கோட்டி - கர்ப்ப ஸ்தானம். திருக்கோட்டி எந்தை - திருக்கோஷ்டியூர் என்ற கோஷ்டியூரில் கோயில் கொண்டிருக்கும் பெருமான்.]

பூதத்தாரும் பொய்கையாரைப்போல், 'கர்ப்ப வாசம் செய்யும்போதே நான் கடாட்சிக்கப் பெற்றேன்' என்கிறார். 'கருவிலே திருவுடையவர்' என்று சொல்லும்படி இவரும் மேதாவியாகப் பிறந்தாரென்றும், சுத்த ஸாத்விகராக வாழ்ந்தாரென்றும், ஹரிகதைகளிலும் திவ்விய ஸ்தலங் களிலும் குழந்தைப் பருவம் முதல் மோகம் கொண்டிருந்தா ரென்றும் கருதலாம்.

இந்த இரண்டு கர்ப்ப ஸ்ரீமான்களும் உலகளந்த கதையிலே, 'அசுர சக்தியாகிய இருளை ஒழித்து உலகமெங்கும் அருள் பரவியிருக்கிறது; உலகம் பகவானுக்கே உரியது; வலிமையையே உரிமையாகக் கொண்டு அதிகாரம் செலுத்த விரும்பும் அசுரர்களுக்கு உரியதில்லை' என்ற மகத்தான தத்துவத்தைக் கண்டு கொண்டார்கள்.

Koviloor Digital Library

உலகம் அளந்த திருவடியே அடுத்த அவதாரமாகிய ராமாவதாரத்தில் காட்டில் அலைந்து திரிந்தது என்பர். இந்த அவதாரக் கதைகளையும் பூதத்தாழ்வார் மறந்து விடவில்லை.

கடலை முன்னே கடைந்தவன், தானே பின்பு அணை கட்டிக் கடலைக் கடந்தான் என்கிறார். ராவண ஸம்ஹாரம் செய்த ராமன் வேங்கட மலைமேல் கோயில் கொண்டிருக் கிறான் என்கிறார். பொய்கையாழ்வாரும் ராம கதையை மறந்துவிடவில்லை.

எனினும் ராம கதை, கண்ணன் கதைகளைப்போல் இந்த ஆழ்வார்களை வசீகரிக்கவில்லை. கிருஷ்ண லீலைகளைப் பேசுவதில் இவர்களுக்குள்ள குதூகலம் வேறு ஹரி கதைகளில் இல்லையென்றே தோன்றுகிறது.

பெற்ற தாய்போல் வந்த பூதனை என்ற பேய்ச்சியின் பாலோடு உயிரை உண்ட கிருஷ்ண லீலையில் பொய்கையாழ் வாருக்குள்ள பக்திவிசுவாசம் பூதத்தாழ்வாருக்கும் உண்டு. காலை நிமிர்த்துச் சகடம் சாடிய லீலையையும் இருவரும் குறிப்பிடுகிறார்கள்.

தலையிலும், இரு தோள்களிலும் அடுக்குக் குடங்கள் இருக்க, அவை கொஞ்சமும் சலியாதபடி இரண்டு கைகளாலும் குடங்களை மாறி மாறி எறிந்து கண்ணன் குடக் கூத்தாடிய விளையாட்டையும் இந்த இரண்டு ஆழ்வார்களும் குறிப்பிடுகிறார்கள்.

குடங் கொண்டு கூத்தாடிய கோபாலனே என் நெஞ்சை இடங்கொண்ட இறைவன் என்கிறார் பூதத்தாழ்வார்:

> குடமாடிக் கோவலனாய் மேவிஎன் நெஞ்சம்
> இடமாகக் கொண்ட இறை.

இந்த வாக்கு, கிருஷ்ண பக்தியிலே ஊறிக் குமிழியிட்டு வரும் வாக்கல்லவா?

Koviloor Digital Library

ஒரு சமயம் அசுரன் ஒருவன் விளாமர வடிவமாகிக் கண்ணன் வரும்போது மேலே விழுந்து கொல்வதாக நின்றுகொண்டிருந்தானாம். அங்கே கண்ணன் வரும்போது, வேறொரு அசுரன் கண்ணனுக்குப் பிரியமான கன்றின் வடிவங்கொண்டு முட்டிக் கொல்லத் தயாராக வந்திருந்தானாம். உடனே விளாங்கனியைக் கன்று கொண்டு எறிவது போல் எறிந்து, முள்ளைக்கொண்டே முள்ளைக் களைவது போல் இரண்டு துஷ்ட அசுரர்களையும் ஒருங்கே ஒழித்து விட்டானாம் கண்ணபிரான்.

இப்படி இயற்கையிலும் உலக சரித்திரத்திலுங்கூடத் தெய்வ லீலை நடைபெறுவது உண்டு. இந்தக் 'கன்றும் கனி உதவிய' கதையைப் பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் குறிப்பிடுகிறார்கள்.

மாமனாகிய கம்ஸனையும் அசுரனென்றே மதித்துச் சரீர உறவைப் பாராமல் கொன்றொழித்ததையும் இரண்டு ஆழ்வார்களும் குறிப்பிடுகிறார்கள். அசுர சக்திகள் எந்த வேடம் பூண்டு வந்தாலும் - உறவினராகவே வந்த போதிலும் - தெய்வ சக்தியால் அழிக்கப்படும் என்பது குறித்து இந்தப் பக்தமணிகளுக்குச் சந்தேகமே இல்லை.

இத்தகைய விசுவாசத்தோடு கூடிய கிருஷ்ண பக்தியை இந்த ஆழ்வார்களின் வைஷ்ணவ ஸாரம் எனலாம். இதே விசுவாசம், அருளுக்கு இன்னார் ஆவார், இன்னார் ஆகார் என்ற நியதி இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறது. இறைவனுக்குத் துஷ்ட நிக்கிரகத்திலும் சிஷ்ட பரிபாலனத்திலும் பட்சபாதமில்லை.

இந்த உண்மையை வற்புறுத்தும் கஜேந்திரன் கதையிலும் பொய்கையாழ்வாரைப்போல் பூதத்தாழ்வாருக்கும் ஈடுபாடு உண்டு:

அரிய(து) எளிதாகும் ஆற்றலால் மாற்றி,
பெருக முயல்வாரைப் பெற்றால்; - கரியதோர்

Koviloor Digital Library

வெண்கோட்டு மால்யானை வென்று முடித்தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து.

[வெண்கோட்டு மால் யானை - வெண்ணிறமான தந்தங்களை உடைய பெரிய யானை. முடித்தன்றே - முடித்துக் கொண்டதல்லவா? தண் கோட்டு மாமலர் - குளிர்ந்த பொய்கைக் கரையிலே கிடைத்த சிறந்த தாமரைப் பூ.]

பக்தர்களுக்கு அரியதும் எளிதாகும் என்பதற்குக் கஜேந்திரன் கதையையும் ஒரு சாட்சியாக்குகிறார் பூதத்தாழ்வார். இந்தக் கதையை விவரமாகவும் சொல்லுகிறார்:

தொடரெடுத்த மால்யானை சூழ்கயம்புக்(கு) அஞ்சி,
படரெடுத்த பைங்கமலம் கொண்(டு)அன்(று) – இடர் அடுக்க,
ஆழியான் பாதம் பணிந்தன்றே, வானவர்கோன்
பாழிதான் எய்திற்றுப் பண்டு.

[தொடர் - சங்கிலி; விலங்கு. மால் யானை - பெரிய யானை. கயம் - பொய்கை. படர் எடுத்த - மலர்ந்து ஓங்கியிருக்கிற. பைங்கமலம் - அழகிய தாமரைப் பூ. இடர் அடுக்க - துன்பம் உண்டாக. ஆழியான் - சக்கராயுதத்தைக் கையில் ஏந்திய பகவான். பணிந்தன்றே - பணிந்ததனாலன்றோ? வானவர் கோன் - (இங்கே) தேவாதி தேவனாகிய மகா விஷ்ணு. பாழி - இருப்பிடமான பரம பதம். எய்திற்று - அடைந்தது. பண்டு - முற்காலத்திலே.]

கதையை எவ்வளவு ரஸமாகச் சொல்லுகிறார் பூதத்தாழ்வார்! யானைபோலச் செருக்குற்றிருந்த ஓர் அரசனை, 'யானையாகக் கடவை!' என்று அகஸ்தியர் சபித்தார் என்பது கதையல்லவா? அந்தச் செருக்கை, 'தொடர் எடுத்த மால் யானை' (காலில் இட்ட விலங்கை முறித்துத் தும்பிக்கையிலே கொண்டு யதேச்சையாக வந்த யானை) என்ற கற்பனையில் காண்கிறோம்.

Koviloor Digital Library

அந்தக் கர்வம் முற்றும் போய்விட்டதாம், முதலை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டதும். செருக்கு அச்சமாகிவிட்டது.

மலர்ந்து ஓங்கியிருந்த அந்தத் தாமரைப் பூவைப் பறித்த தும்பிக்கையோடு அந்த மலரின் அழகு வாடாமல் அப்படியே காட்டுகிறது 'படர் எடுத்த பைங்கமலம் கொண்டு' என்ற தொடர்!

அன்று முதலை உருவத்திலே வந்த பேராபத்தை, 'இடர் அடுக்க' என்று சொல்லிவிட்டு, அந்தப் பெருந்துன்பத்தைத் துண்டிக்கும் சக்கராயுதமும் கையுமாகத் தோன்றிய பகவானையும், அவனுடைய பாதத்திலே பணியும் கஜேந்திரனையும், 'கதையா, காட்சியா?' என்று எண்ணுமாறு தோற்றவைக்கிறார் பூதத்தாழ்வார்.

ஹரி கதைகளையும் ஹரி நாமங்களையும் அநுபவிப்பது பக்தர்களுக்குப் பேரின்பம். பூதத்தாழ்வாரோ இறைவனுடைய திருப்பெயர்களிலும் திருக்கதைகளிலும் இறைவனது காட்சியைக் கண்டு பேரின்பம் துய்க்கிறார் என்று சொல்லலாம்.

★

Koviloor Digital Library

14. அருள் கலந்த அழகு

பக்தர்கள் இயற்கையை வெறுப்பதில்லை; இயற்கை அழகுகளுக்குக் கண்களை மூடிக்கொள்வதில்லை. காட்டிலும் நாட்டிலும், மண்ணிலும் விண்ணிலும், காணும் இயற்கை அழகுகளில் பெருமானுடைய அழகின் அம்சங்களைக் காண்கிறார்கள்; கண்டு களிக்கிறார்கள்.

உதாரணமாக, சூரியோதயத்தை விளக்காகக் கொண்டு பொய்கையார் இயற்கை அழகனாகிய பகவானைக் கண்டு பாமாலை சூட்ட வில்லையா? 'பகவானைப் பார்ப்பதற்கு இவ்வளவு பெரிய விளக்கு இருக்கும்போது, குருடர்கள் தாம் பாராமல் இருக்க முடியும்' என்பது பொதுவாகப் பக்தர்களின் மனநிலை. பூதத்தாழ்வாரின் உள்ளமும் இதே போக்கில் செல்லுகிறது.

கண்ணைத் திறந்தால் இயற்கையே விளக்காக அமைந்து கண்ணான கண்ணனைக் காட்டிக் கொடுக்கிறது. கண்களை இறுக மூடிக் கொண்டாலும் ஞானச்சுடர் விளக்கு இருக்கிறது; இது எந்த இருட்டிலும் ஒளிகாட்டி வழிகாட்டுகிறது. இத்தகைய மன நிலையுள்ள பூதத்தாழ்வார் இயற்கையின் சௌந்தரியங்களையும் தமது உள்ளத்தின் சௌந்தரியங் களோடு கலந்து இவற்றையெல்லாம் தமது இஷ்ட மூர்த்தியின் தெய்விக சௌந்தரியங்களாகப் பாக்கிறார் என்று கருதலாம்.

நிலத்தையும் வானத்தையும் நெடு மாலாகப் பார்க்கிறார் பொய்கையாழ்வார். கஜேந்திரனுக்கு அருள் புரிந்தவனே, காற்றாக வீசித் தண்ணீராக ஓடித் தீயாக எரிந்து நிலமாகத் தாங்கி வானமாகக் கவிந்து கலந்து நமக்கும் அருள்

Koviloor Digital Library

பொழிகிறான் என்கிறார். இந்த அபிப்பிராயம் பூதத்தாருக்கும் உடன்பாடுதான்.

சமுத்திரத்தையும் அதிலே சங்கமமாகும் நதியையும் பொய்கையார் பார்க்கும்போது, 'பொங்கிக் கிளர்கின்ற அந்த மகா சமுத்திரத்தை நோக்கிப் பாயும் ஆறுபோல், உள்ளமே! நீயும் என் இஷ்டமூர்த்தியுடன் சங்கமிக்க வேண்டும்' என்று தம் நெஞ்சுக்கு உபதேசம் செய்வார். சூரியனைக் கண்டு காதலித்து மலரும் தாமரையைப் பார்த்ததும், 'செந்தாமரைப் பெண்ணே! உன்னைப்போல் என் உணர்வும் அழகாக மலர்ச்சி பெறுகிறது, காதலனாகிய என் இதய சூரியனைக் கண்டு!' என்பார். பூதத்தாருக்கும் இத்தகைய மனநிலை உண்டு.

இயற்கையில் கண்ட பெருமானைப் பொய்கையார் பண்ணிலும் பாடலிலும் கண்டு களிப்பார்; உள்ளத்திலும் உவந்து கண்டு, 'என் உள்ளம் கவர்ந்த கள்ளக் கிருஷ்ணனே எங்குமாகி இயற்கையுமாகி இருக்கிறான்' என்று ஆனந்தம் அடைவார். இத்தகைய மனநிலையுடனும் பூதத்தாழ்வாரின் மனநிலை பெரிதும் ஒத்துப் போகிறதென்று ஊகிக்கலாம்.

ஒரு சமயம் பூதத்தாழ்வார் பூந்தோட்டங்களில் சஞ்சரித்து அங்கே உள்ள பூக்களையும் பூங்கொடிகளையும் தெய்விக அழகின் அம்சமாகக் கண்டு மகிழ்ந்தார்.

ஒரு நந்தவனத்திலே கொடி படர்வதற்குக் கொழு கொம்புகள் நாட்டியிருப்பதைப் பார்த்தார். சில கொழு கொம்புகளைத் தழுவிப் பூங்கொடிகள் செழித்துக் கொழுத்துப் படர்ந்து பூத்துச் சொரிவதையும் பார்த்தார்.

ஒரு பூங்கொடிக்கு மாத்திரம் கொழு கொம்பு நன்றாக எட்டவில்லை. அந்தக் கொழு கொம்பு அதற்காகவே அருகில் நடப்பட்டிருந்தது.

Koviloor Digital Library

அந்தக் கொம்பை அந்தக் கொடி எட்டிப் பிடிக்க விரும்பியதுபோல் அதை நோக்கிக் கொழுந்து விட்டிருந்தது. கொழுந்து அதை எப்படி நெருங்கிவிட்டது! ஏன், தொட்டே விட்டது! இனி மேலோங்கிப் படர வேண்டியதுதான்!

பூதத்தாழ்வார் பார்த்தார்; 'ஐயோ, பாவம்! இந்தக் கொம்பைத் தேடி ஓடுகிறது இந்தக் கொழுந்து, இந்தக் கொடி' என்று தமக்குள் தாமே சொல்லிக் கொண்டார்.

பக்கத்திலே நின்ற ஒருவனுக்கும் அந்தக் கோலையும் கொடியையும் காட்டினார்; 'அப்பா, குழந்தாய்! இப்படித்தான் மனமும் இஷ்ட மூர்த்தியைத் தேடி ஓடிப் பற்றிக் கொள்ள வேண்டும்' என்று உபதேசித்தார். என்ன வசீகரமான உபதேசம்!

இது வசீகரமான பண்ணிலும் பாட்டிலும் வெளிப் படுகிறது:

கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே,
மால்தேடி ஓடும் மனம்!

'கோல் தேடி ஓடும் கொழுந்து', 'மால் தேடி ஓடும் மனம்' - என்ன அழகான, வசீகரமான, புதை பொருளோடு கூடிய சொற்றொடர்கள்!

இந்த அடிகளோடு, மனம் இறைவனைத் தேடுவதற்குப் பொய்கையார் கொடுத்திருக்கும் உவமானத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்:

தாய்நாடு கன்றேபோல் தண்துழா யான் அடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து.

இப்படித் தாய்நாடும் கன்றுபோலவும், கோல் தேடும் கொழுந்து போலவும் உள்ளம் பற்றிக் கொள்வதற்கு வசதியான இயற்கை அழகுகள் வாய்ந்த தலங்களைத் 'திவ்விய ஸ்தலங்கள்' என்றும், 'திருப்பதிகள்' என்றும் மதித்து அங்கே

Koviloor Digital Library

உள்ள கோயில்களில் போய் வழிபடுவது முக்கியமென்று கருதினார்கள் பக்தர்கள்.

இத்தகைய ஸ்தலங்களில் முதலாழ்வார்களின் காலத்திலே திருப்பதி என்ற திருவேங்கடமலை சிறந்த ஸ்தலமாக இருந்திருக்க வேண்டும். இதனால்தான் பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் திருவேங்கடத்தைச் சிறப்பாகப் பாடியிருக்கிறார்கள்.

பூதத்தாழ்வார் தமது திருவேங்கடப் பாடலில் பூங்கொடிகளைக் குறித்தும், அங்கே உள்ள நீர் வளத்தைக் குறித்தும் விநோதமாகப் பிரஸ்தாபித்திருக்கிறார். இத்தகைய ஸ்தலங்களில் கோல் தேடும் பூங்கொடிபோல், கொழுந்து போல், பூதத்தாழ்வாரின் உள்ளம் அழகனுடைய பூங்கழல் களை எளிதாகப் பற்றிப் படர்ந்தது என்று கருதலாம்.

பூக்களில் இவருக்குள்ள பிரியம் அதிகம்; பூக்களிலும் தாமரைப் பூக்களில் விசேஷமான பிரீதி. பூக்களுக்கிடையே, பூக்களைக் கொண்டே, தவம் புரியலாம் என்கிறார்:

உறும்கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன் நற்பாதம்;
உறும்கண்டாய் ஒண்கமலம் தன்னால்; - உறும்கண்டாய்
ஏத்திப் பணிந்(து) அவன்பேர் ஈரைஞ்நூ(று) எப்பொழுதும்
சாத்தி உரைத்தல் தவம்.

[உறும் - பொருந்தும்; உரியதாகும். ஒண் கமலம் - அழகிய தாமரைப் பூ. ஏத்தி - துதித்து. ஈர் ஐஞ்னூறு - ஆயிரம்.]

பகவானுடைய நல்ல பாதங்களில் நமக்கு உரிமை உண்டென்று சொல்லுகிறவர், அந்தத் திருவடிகளை நினைப்பூட்டும் அழகிய மலர்களால் ஆராதிப்பதும் நமக்கு உரியது என்கிறார். திருவடி போன்ற தாமரை மலர்களைப் பூந்தாமரை போன்ற திருவடிகளில் சமர்ப்பித்து வாயாரத் துதித்துத் தலையார வணங்கிப் பகவானுடைய ஸஹஸ்ர

 Koviloor Digital Library

நாமங்களையும் ஸங்கீர்த்தனம் பண்ணும் தவம் பக்திக்கு உரிய தவம் என்கிறார்.13.8

க்குப் பரம பிரீதி:

பணிந்தேன் திருமேனி; பைங்கமலம் கையால்
அணிந்தேன்உன் சேவடிமேல் அன்பாய்த்; - துணிந்தேன்
புரிந்(து) ஏத்தி உன்னைப் புகலிடம் பார்த்(து) ஆங்கே
இருந்(து) ஏத்தி வாழும் இது.

[பைங்கமலம் - அழகிய தாமரைப் பூக்கள். புரிந்து - விரும்பி. புகலிடம் - அடைக்கலம்.]

பகவானுடைய திவ்விய மங்கள சொரூபத்தைத் தியானஞ் செய்து மானசமாக வழிபடுவது விசேஷந்தான். எனினும், ஓர் அழகான விக்கிரகத்திலே வழிபடுவதிலும், விக்கிரகத்தின் மூலமாக மனக் கண்ணை உபயோகித்துப் பார்ப்பதிலும் இவருக்குப் பரம திருப்தி.

அப்படி வழிபடும்போது இஷ்ட மூர்த்தியின் திருவடிகளில் அழகான தாமரைப் பூக்களைக் 'கை படைத்த பயன் பெற்றேன்!' என்று குதூகலத்துடன் எடுத்துச் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறார். 'தேவர்களும் அழகிய பூக்களைத் தூவி வழிபட்டார்கள் உலகளந்த திருவடியை!' என்கிறார்.

பக்தி மதத்தில் சௌந்தரிய உணர்ச்சி எவ்வளவு முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கிறது, பாருங்கள்! இயற்கை அழகு களிலே, அழகனாகிய ஆண்டவன் தன்னை வெளியிட்டுக் கொள்கிறான் என்பது எவ்வளவு நன்றாக வற்புறுத்தப் பெற்றிருக்கிறது!

எனினும், நம்முடைய முயற்சிகளாலும் கவலை களாலும் சாதனங்களாலும் அனுஷ்டானங்களாலும் அந்த அழகனைக் கண்டுகொள்ள முடியாது என்பதைப் பூதத்தாழ் வார் உய்த்துணர வைக்கிறார்:

Koviloor Digital Library

நவின் றுரைத்த நாவலர்கள் நாள்மலர்கொண்(டு) ஆங்கே
பயின்(று) அதனால் பெற்றபயன் என்கொல்? – பயின்றார், தம்
மெய்த்தவத்தால் காண்பரிய மேகமணி வண்ணனையான்
எத்தவத்தால் காண்பன்கொல் இன்று?

[நவின்று உரைத்த - பலகாலும் சொல்லுகிற. நாள் மலர் - அப்போது மலர்ந்த பூக்கள். என்கொல்? - என்னோ? பயின்றார் - நெருங்கிச் சாதனம், அனுஷ்டானம் முதலியன செய்கிறவர்கள். மெய்த் தவம் - (இங்கே) உடம்பு நொந்து செய்யும் தவம். காண்பரிய - காண முடியாத.]

சரீரத்தை ஹிம்ஸித்துச் செய்யும் தவம் எவ்வளவு உண்மையான தவமாக இருந்தபோதிலும், அத்தகைய தவசிகள் அன்று மலர்ந்த பூக்களைக் கொண்டு வழிபட்ட போதிலும், பகவானைக் காண முடியாது என்பது குறிப்பு.

அழகுணர்ச்சி போதாது; அருளுணர்ச்சியும் வேண்டும்; அதாவது அழகன் அருளை முற்றும் நம்ப வேண்டும். மகா விசுவாசத்தோடு கூடிய அழகுணர்ச்சியே கோல்தேடி ஓடும் கொழுந்துபோல் உள்ளத்தை அழகனை நோக்கிப் படர விடுகிறது.

விசேஷ நம்பிக்கையுடன் அழகனை, அருளாளனைக் காண்பதற்குத் திருவேங்கடம் போன்ற இயற்கை அழகுகள் நிறைந்த திவ்விய ஸ்தலங்களுக்கு யாத்திரைபோவதும் நலமாகும். திவ்விய ஸ்தலங்களில் காவிரி ஆற்றினிடையே சோலையாகவுள்ள திரவரங்கமும், மலைச்சாரல்களும் காடுகளுமாக இருக்கும் திருவேங்கடமும் திருமால் அடியார்களின் உள்ளங்களைப் பெரிதும் வசீகரித்தன.

திருப்பதிமலையில் பூதத்தாழ்வார்

'சென்றது இலங்கைமேல், கொன்றது இராவணனை; நின்றது திருவேங்கடமலைமேல்!' என்று தம் இஷ்ட மூர்த்தியைக் குறித்துப் பூதத்தாழ்வார் பாடுகிறார்:

Koviloor Digital Library

சென்ற(து) இலங்கைமேல் செவ்வே; தன் சீற்றத்தால்
(கொன்றது) இராவணனைக் கூறுங்கால் - நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே, விண்ணவர்தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து.

[செவ்வே - நேராக. கூறுங்கால் - கூறுமிடத்து. வேய் - மூங்கில். தண் - குளிர்ந்த. விண்ணவர் - தேவர்கள். வாய் ஓங்கு - வாயினால் உயர்வாகச் சொல்லப்படுகிற.]

திருப்பதி மலையிலுள்ள மூங்கிற் காடுகளையும் அந்தக் குளிர்ந்த மலைச் சாரல்களையும் பூதத்தாழ்வார் பார்த்துப் பார்த்து அநுபவித்திருக்க வேண்டும். அந்த இயற்கை அழகிலே இறைவனது அழகையும் கண்டார். அந்த மலைக் காட்சியின் மாட்சியைப் பார்த்ததும், விண்ணிலே விண்ணவர் போற்ற, அவர்களுக்கும் தெரியாதபடி வீற்றிருக்கும் பகவானுடைய மாட்சி நினைவிற்கு வந்துவிடுகிறது. விண்ணிலேயிருந்து பகவான் மண்ணிலே வரும்போது, வேங்கடமலையில் இறங்கி நிற்கிறானாம்; இந்த இயற்கை மாட்சியில் ஈடுபட்டு!

'மூங்கில்கள் மிகுதியாகக் காணப்படும் திருமலையில் எழுதருளியிருக்கும் பகவானுடைய திறங்களைப் பேசும் வகையிலே என் வாய் ஈடுபடுகிறது; சிந்தை அவனுடைய பெயரைப் பலமுறை நினைக்கத் துணிகிறது; என் அங்கம் அவனையே பணிந்து கொண்டிருக்கிறது!' என்றெல்லாம் பூதத்தாழ்வார் சொல்லும்போது, திருவேங்கடம் இவர் உள்ளத்தை எப்படி மலரச் செய்திருக்க வேண்டுமென்பது நன்றாக விளங்குகிறது:

துணிந்தது சிந்தை துழாய்அலங்கல் அங்கம்
அணிந்தவன்பேர் உள்ளத்துப் பல்கால்; - பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல்வேங் கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை.

Koviloor Digital Library

[அலங்கல் - மாலை. பல்கால் - பல தடவையும். பிறகு - மிகுதியாகக் காணும். விறல் - வல்லமை.]

'நான் முன்னே! நான் முன்னே!' என்று தம்முடைய இந்திரியங்கள் பகவத் விஷய அநுபவத்திற்கு முற்பட்டன என்கிறார். இத்தகைய அநுபவம் கிடைத்த ஸ்தலத்தை 'வேய் ஓங்கு சாரல்' என்றும், 'வேய் பிறங்கு சாரல்' என்றும் சொல்லிச் சொல்லி இன்புறுகிறார்; நினைத்து நினைத்து இன்புறுகிறார்; பணிந்து பணிந்து இன்புறுகிறார்.

'எந்தச் செல்வம் இருந்தால் என்ன, போனால் என்ன? பாகவதர்களின் செல்வம் - உண்மையான செல்வம் - இயற்கைச் செல்வமாகிய திருவேங்கடத்தில் இருக்கும்போது, அவர்களுக்கும் உண்டோ குறை?' என்கிறார்:

உளதென்று இறுமாவார்; உண்டில்லை என்று
தளர்தல் அதன்அருகும் சாரார்; – அளவரிய
வேதத்தான், வேங்கடத்தான், விண்ணோர் முடி தோயும்
பாதத்தான் பாதம் பயின்று.

[இறுமாவார் - இறுமாப்புக் கொள்ளமாட்டார்கள். சாரார் - செல்லமாட்டார்கள். அளவரிய - அளவிட முடியாத. பயின்று - பழகி.]

அளவிட முடியாத வேதங்களெல்லாம் மெய்ப்பொருள் என்று முழக்குவதும், விண்ணோர் முடி சாய்த்துப் போற்றுவதுமாகிய பரம்பொருளே திருமலையிலும் கோயில் கொண்டிருக்கிறதாம். இந்தப் பொருளோடு பழகும் பேறு பெற்ற செல்வர்களான பாகவதர்கள், மற்றைச் செல்வங்களோடு தாராளமாகப் பழகிக் கொண்டிருந்தாலும் செருக்குக் கொள்ளமாட்டார்களாம்.

வந்த செல்வம் போய்விட்டாலும், 'ஐயோ! ஏழைமை வந்துவிட்டதே!' என்று பாகவதர்கள் ஏங்க மாட்டார்களாம்! கொஞ்சமும் தளர்ச்சி அடையமாட்டார்களாம்! திருப்பதியிலே

 Koviloor Digital Library

பரம்பொருள் இவர்களுக்கெல்லாம் பொதுஉடைமையாக இருக்கும்போது, ஏழைமை ஏது!

திருப்பதி மலையில் பக்திச் செல்வம் இயற்கையாகவே கிடைக்கிறதாம். பாகவதர்களுக்கு மட்டுமல்ல; அல்லாதவர் களுக்குங்கூட! மனிதர்கள் மட்டுமல்ல; பிராணிகளும்கூட அங்கே பக்தியில் பங்கு கொள்வதுபோலத் தோன்றுகிறது, பக்திக் கண்களுக்கு!

இந்த மலையில் பக்தர்களும் முனிவர்களும் அதிகாலை வேளையிலேயே துயில்விட்டெழுந்து பூஞ்சுனைகளில் நீராடி அங்கே மலர்ந்துள்ள பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து திருவேங்கட நாதனுடைய திருவடிகளில் சமர்ப்பித்து வணங்குவதுண்டு. அந்தப் பணிவிடையைப் பார்த்து வானரங்களும் அப்படியே செய்ய எத்தனிக்கின்றனவாம்.

அவையும் விடியற்காலத்திலே அந்தப் பூஞ்சுனைகளில் அந்த முனிவர்களையும் பக்தர்களையும் போல் பூக்களைப் பறித்துக் கொண்டு வருகின்றனவாம்; பறித்து வந்து திருப்பதிப் பெருமாள்முன் போட்டு ஏதோ குரங்கு மொழியில் தோத்திரம் செய்வதுபோல், 'குர் குர்' என்கின்றனவாம்:

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்(கு) ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்(டு) ஏத்தும்; போதுள்ளம், - போதும்
மணிவேங் கடவன் மலர்அடிக்கே செல்ல
அணி,வேங் கடவன்பேர் ஆய்ந்து.

[போதறிந்து - பொழுதை அறிந்து. புக்கு - புகுந்து. அலர்ந்த - மலர்ந்த. போதரிந்து - பூக்களை அரிந்து. ஏத்தும் - தோத்திரம் செய்யும். போது உள்ளம் - வா உள்ளமே! போதும் - பூக்களையும். மணி வேங்கடவன் - அழகிய திருவேங் கடத்திலுள்ள பெருமான். அணி - அணிவாய்; சமர்ப்பிப்பாய். பேர் ஆய்ந்து - திருப்பெயர்களை ஆராய்ந்து சொல்லிக் கொண்டு.]

குரங்கின் கைப்பூ, குரங்கின்கைப் பூமாலை என்றெல்லாம் சொல்லுகிறோமல்லவா? அப்படிப் பூக்களை

Koviloor Digital Library

அறிந்துகொண்டு கோவிலுக்கு எதிரே வந்து, 'குர் குர்' என்று கூச்சலிடும் வானரங்களும் பொழுது தெரிந்து பக்தி பண்ணுவதாகத் தோன்றுகிறது ஆழ்வாரின் பக்திக் கண்களுக்கு!

ஆகவே அவர் தம் உள்ளத்தை நோக்கி, 'மனமே! நீயும் அப்படிச் செய்வதற்கு வா! அது தன் மொழியில் தோத்திரம் செய்கிறது; நீ உன் தமிழ் மொழியில் அழகிய திருமலை யிலுள்ள பகவானுடைய அழகிய நாமங்களை அழகாக உச்சரித்துக்கொண்டு பக்தி பண்ணி அந்த அழகிய மலரடிகளில் அழகிய மலர்களையும் அணிந்து மகிழ்வாய்' என்று உபதேசிக்கிறார். இவர் தம் நெஞ்சுக்கு உபதேசிப்பது பிறர் நெஞ்சுகளுக்கும் கூடத்தான்.

இந்த மலை பகவானுக்கே சொந்த மலை என்கிறார். 'வான் கலந்த வண்ணன் வரை' - அதாவது, நீல வானத்தோடு கலந்த அழகனுடைய மலை என்கிறார். வான்கலந்த வண்ணன் மலையும் வான்கலந்த மலையாகவே தோன்றுகிறது. இம்மலையின் இயற்கை அழகுகளும் வான்கலந்த அழகுகளாய்த் தோன்றி இவரை வசீகரிக்கின்றன.

இங்குள்ள மூங்கில் காட்டிலே ஒரு காட்சி:

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்நின்(று),
இருகண் இளமூங்கில் வாங்கி - அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்,
வான்கலந்த வண்ணன் வரை.

[வேழம் - யானை. பிடி - பெண் யானை. கண் - கணு.]

திருப்பதி மலையிலுள்ள மூங்கிற் காட்டிலே, ஒரு யானை மதம் பிடித்து மனம் போனபடியே திரிந்து கொண்டிருந்ததாம். வழியில் தன் பிடியைக் கண்டது; மதம் போய்த் தெளிவு வந்துவிட்டதாம். இனிய உணவு கொடுத்துக் காதலியைத் திருப்தி செய்விக்க விரும்பியது.

உடனே ஒரு மூங்கிற் குருத்தைப் பிடுங்கியது; அருகே இருந்த தேன் கூட்டைக் கலைத்து அந்தத் தேனிலே இந்த

Koviloor Digital Library

மூங்கிலைத் தோய்த்துப் பிடிக்குக் கொடுத்ததாம். இந்தக் காதலிலும், 'வான்கலந்த' அழகு காண்கிறார் ஆழ்வார்.

இந்தக் காதற் காட்சிக்கு உட்பொருள் ஏதாவது உண்டா? எம்பெருமானும் பிராட்டியை உகப்பிக்கிறான் என்பது இதன் உள்ளுறை பொருள் என்பர். 'அங்கே இல்லாதது இங்கே இல்லை; இங்கே உள்ளதெல்லாம் அங்கும் உண்டு' என்ற கொள்கைப்படியே மகாவிஷ்ணுவுக்கும் மகாலட்சுமிக்கும் உள்ள காதலையும் பக்தர்கள் வற்புறுத்துவதுபோலத் தோன்றுகிறது. தாயாகிய மகாலட்சுமியை உகப்பிப்பது குழந்தைகளாகிய அடியார்களுக்கு அருள் செய்வதுதானே?

இத்தகைய சிந்தனைகளை எழுப்பும் திருவேங்கடத்திலும் வேறு சில திவ்விய ஸ்தலங்களிலும் பகவான் நீண்டகாலமாக வாசஞ் செய்கிறான் என்கிறார் பூதத்தாழ்வார்:

> பயின்ற(து) அரங்கம் திருக்கோட்டி; பன்னாள்
> பயின்றதுவும் வேங்கடமே; பன்னாள் – பயின்ற(து)
> அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
> மணிதிகழும் வண்தடக்கை மால்.

[பயின்றது - பழகியது. அரங்கம் - ஸ்ரீரங்கம். திருக்கோட்டி - கோஷ்டியூர் என்ற திவ்விய ஸ்தலம். அணி திகழும் - அழகு விளங்கும். நீர்மலை - திருநீர்மலை என்ற திவ்விய ஸ்தலம். வண் தடக்கை - உதாரத்தைக் கொண்ட நீண்ட கைகள்.]

இவர் கூறுவதிலிருந்து, திருமலை, திருவரங்கம், திருக்கோஷ்டியூர், திருநீர்மலை ஆகிய திருப்பதிகள் அக்காலத்திலேயே மிகப் பழைமையான ஸ்தலங்களாகக் கருதப்பட்டன என்று தெரிகிறது. இவற்றிலெல்லாம் திருமலை பூதத்தாழ்வார் போன்ற முதலாழ்வார்களைத் தன் அருள் கலந்த இயற்கை அழகால் விசேஷமாக வசீகரித்தது எனலாம்.

★

Koviloor Digital Library

15. பூதத்தாழ்வாரின் பக்தி அநுபவங்கள்

கனவிலே பூதத்தாழ்வார் எம்பெருமான் திரு மேனியைக் கண்டாராம். அவன் கையிலே கனல்போல் ஜொலித்த சுடர்மயமான சக்கராயுதத்தையும் கண்டாராம். துன்பங்களுக்கெல்லாம் காரணமான இரு வினைகளையும் ஓட்டுவிக்கும் சக்தியையும் கண்டாராம். மறுபடியும் கிளைத்து வளரக் கூடிய துன்பங்களாகிய 'வாஸநா ருசி'களைச் சுட்டெரிக்கும் சக்தியையும் கண்டாராம்.

சொப்பனம் போன்ற இந்த ஸ்வாநுபவத்தை இவர் பின்வருமாறு பாடுகிறார்:

கண்டேன் திருமேனி யான்கனவில், ஆங்(கு) அவன்கைக்
கண்டேன் கனலும் சுடராழி, - கண்டேன்
உறுநோய் வினைஇரண்டும் ஓட்டுவித்துப் பின்னும்
மறுநோய் செறுவான் வலி.

[சுடராழி - சுடர்மயமான சக்ராயுதம். உறுநோய் - மிகுந்த துன்பம். செறுவான் - தொலைக்கும் பகவான்.]

இஷ்டமூர்த்தியின் திவ்விய மங்கள விக்கிரகம் ஆனந்தக் கனவாக வருகிறது, ஆனந்த நித்திரை போன்ற தியான வாயிலாக. அந்த ரூபத்தைத் தரிசித்து ஆனந்தம் பொலியப் பாடும் பாசுரம் இது. இத்தகைய மானஸ ஸாக்ஷாத்காரம், மனோபாவத்தைப் பண்படுத்தி வாழ்க்கையில் ஒரு புரட்சியையே உண்டு பண்ணிவிடக் கூடும்.

பாவம்போலவே புண்ணியமும் விலங்குதான் என்பது நமது நாட்டு ஞானிகளின் கொள்கை. பாவம் நரகத்திலே தள்ளும் என்றால், புண்ணியம் சொர்க்க போகத்திலே

Koviloor Digital Library

தள்ளுகிறதல்லவா? ஆகவே பாவம் இரும்புவிலங்கு என்றால், புண்ணியம் பொன்விலங்கு! இரு விலங்குகளும் ஒழிய வேண்டும் என்கிறார்கள்.

பக்தர்களோ புண்ணிய பாவங்கள் என்ற கவலைகூட இல்லாமல் பக்தியில் மூழ்கிக் களித்துப் பகவானை அநுபவித்துக் கொண்டிருப்பார்கள்; பகவத், பாகவத கைங்கரியங்களைச் செய்து கொண்டிருப்பார்கள் என்பது குறிப்பு.

புண்ணிய பாவங்களோடு அவற்றிலுள்ள நசையும் வாசனைகளும் ஒழிய வேண்டும் என்கிறார் பூதத்தாழ் வார். அப்போதுதான் ஒரு சிறிதும் கவலையில்லாமல் பகவத் அநுபவத்திலும் கைங்கரியங்களிலும் ஈடுபட முடியுமாம்.

'இத்தகைய மகத்தான சக்தியை நாம் அடைய முடியுமா?' என்றால், 'அவனுடைய சக்திதான் அடியார் களுடைய சக்தி!' என்கிறார். அந்த ஈச்வர சக்தியின் மகத்தான அறிகுறியைத்தான் சக்கராயுதமாக வருணிக்கிறது புராண பரிபாஷை.

எம்பெருமானைக் காண வேண்டுமென்கிற ஆவலே அந்தக் காட்சியை நமக்கு அளிக்கிறது என்பது ஸ்ரீ வைஷ்ணவர் கொள்கை. இந்த ஆவலைப் 'பரபக்தி'யென்றும், இந்த ஸாக்ஷாத்காரத்தைப் 'பரஞானம்' என்றும் சொல்லு கிறார்கள். இத்தகைய ஆவலையும் ஞானத்தையும் அடைந்தவர் பூதத்தாழ்வார் என்பது மேலே குறித்த வெண்பாவிலிருந்து தெரியவரும்.

மேன்மேலும் இடையறாது பகவத் அநுபவம் அநுபவிக்க வேண்டும் என்ற ஆவலும் இந்த ஆழ்வாருக்கு ஏற்பட்டது. இந்த ஆவலைப் 'பரம பக்தி' என்கிறார்கள்.

எம்பெருமானோடு கூடுவதே இவருக்குச் சுகம்; பிரிவே துக்கம். வேறு சுக துக்கங்களையாவது பாவ புண்ணியங் களையாவது இவர் கருதுவதில்லை. அவனுடைய அனுபவம்

Koviloor Digital Library

பெறாவிடில், நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல் மூச்சுத் திணறும், இவர் போன்ற பரம பக்தர்களுக்கு. எனவே, பகவானுடைய பூர்ண ஸாக்ஷாத்காரம் பெற்றவர்கள் இவர்கள் என்று பாகவத அறிஞர்கள் கூறுவர்.

முதலாழ்வார்கள் மூவரும் பூர்ண ஸாக்ஷாத்காரம் பெற்றிருந்த போதிலும், பொய்கையாழ்வாருக்குப் 'பரபக்தி' விசேஷமென்றும், பூதத்தாழ்வாருக்குப் 'பரஞானம்' விசேஷ மென்றும், பேயாழ்வாருக்குப் 'பரமபக்தி' விசேஷமென்றும் சொல்வதுண்டு.

இவர்கள் தங்கள் அநுபவங்களை நாட்டில் உள்ளாரும் அறிந்து வாழுமாறு பிரபந்தங்கள் இயற்றியிருக்கிறார்கள். இந்தப் பிரபந்தங்களில் பூதத்தாழ்வாரின் பிரபந்தத்தைப் 'பரஞான'த்திற்கு ஓர் இலக்கியம் என்று கூறுவர்.

தம் உள்ளத்தைப் பகவானுடைய அருள் மழை பெருகி வெள்ளமிடும் ஏரியாகச் செய்துகொண்ட பூதத்தார்,

பழிபாவம் கையகற்றிப் பல்காலும் நின்னை
வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ! – வழுவின்றி
நாரணன்தன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்தும்
காரணங்கள் தாமுடையார் தாம்

[கையகற்றி - நீக்கி. வழி வாழ்வார் - வழிபட்டு வாழ்கிறவர்கள். மாதோ - அசை. வழு - குற்றம். நன்கு ஏத்தும் - அழகாய்த் துதிக்கும்.]

என்று பாடுகிறார்.

இந்தக் குறிப்பின்படியே பகவந் நாமங்களை அநுசந்தித்து, பழிக்கும் பாவத்திற்கும் அவகாசங் கொடாமல் அவனையே துதிக்கும் ருசி, விசுவாசங்களுடன் இவர் வாழ்ந்து வந்தார் என்று கருதலாம்.

இந்த நிலையில் தாம் அடைந்த மகிழ்ச்சியை,

மகிழ்ந்தது சிந்தை திருமாலே! மற்றும்
மகிழ்ந்த(து)உன் பாதமே போற்றி – மகிழ்ந்த(து)

Koviloor Digital Library

அழலாழி சங்கம் அவைபாடி ஆடும்
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து.

[அழல் அழி - நெருப்பை உமிழும் சக்கரம். ஆகம் - தேகம்.]

என்று பாடுகிறார்.

பகவானைத் தேடிக் கண்டுகொண்ட சிந்தை, மகிழ்ந்து போயிற்றாம். அவனைச் சிந்திப்பதுங்கூட மகிழ்ச்சியாகி விட்டதாம், அவன் பாதத்தைப் போற்றி மகிழ்ந்த மன, மெய், மொழிகளெல்லாம் மகிழ்ச்சி மயந்தான்!

சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்களாகிய திவ்விய சக்திகளோடு சேர்ந்து விளக்குகிறான் பகவான் என்று புராணங்கள் வருணிக்கின்றனவல்லவா? அந்த அழகைச் சிந்தை நினைத்துப் பார்த்ததும், வாய் வருணித்துப் பாடியதாம்; அந்தப் பாடலுக்குத் தகுதியாக இவர் உடம்பு ஆடத் தொடங்கிவிட்டதாம்.

இந்த நிலைப் பெரும் பாக்கியமாக மதிக்கிறார் பூதத்தாழ்வார்:

அன்பாக்கி ஏத்தி அடிமைப்பட் டேன்உனக்கு
என்பாக் கியத்தால் இனி.

இந்தப் பாக்கியத்தை அடைந்ததும் இவர், 'இது தமக்கே உரியதாயிருக்க வேண்டும்' என்று எண்ணாமல், இத்தகைய பாக்கியத்தை எல்லாருக்கும் பொதுவாக்கிவிட ஆசைப் படுகிறார்.

இந்த மகத்தான பரோபகார உணர்வு பாக்கிய உணர்ச்சியை மேலும் மேலும் அதிகப்படுத்துகிறது:

யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்;
யாதே தவமுடையேன், எம்பெருமான்! - யானே
இருந்தமிழ்நன் மாலை இணைஅடிக்கே சொன்னேன்,
பெருந்தமிழன் நல்லேன் பெரிது!

Koviloor Digital Library

[ஏழ் பிறப்பும் - (இங்கே) எல்லா ஜன்மங்களிலும். இருந்தமிழ் நன்மாலை - சிறந்த தமிழால் தொடுத்த நன்மாலைகள்.]

பகவத் அநுபவம் பெற்று அதைப் பிறரோடும் அநுபவிக்க விரும்பித் தாய்மொழியில் பகவானுக்குப் பாமாலை சூட்டும் பாக்கியத்தைத் 'தவம்' என்கிறார்.

'பகவானுக்கு நல்லவனாக இருக்கப் பெற்றேன்' என்ற பாக்கியத்தோடு, 'தமிழனாய்ப் பிறந்து தமிழிலே பாடும் பேறு பெற்றேன்!' என்றும் குதூகலப்படும் இப்பெரியாரது மொழிக் காதலைத்தான் என்னென்பது!

இப்பெரியாருக்குப் பகவானுடைய ஸாக்ஷாத்காரம் என்ற பரஞானம் கிடைத்துவிட்டது என்பதற்குப் பின்வரும் பாட்டும் ஒரு நல்ல சாட்சிதான்:

பகல்கண்டேன்; நாரணனைக் கண்டேன்; கனவில்
மிகக்கண்டேன், மீண்டவனை மெய்யே - மிகக் கண்டேன்;
ஊன்திகழும் நேமி ஒளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு.

[மீண்டு - இன்னமும். ஊன் திகழும் நேமி - திருமேனியில் விளங்குகின்ற சக்கராயுதம்.]

வாயாரப் பேசுகிறார் தமக்கு ஸாக்ஷாத்காரம் வாய்த்த பாக்கியத்தை! பகவானுடைய சேவை கிடைக்கப் பெறாத அந்தப் பழங் காலத்தையெல்லாம் - இரவும் பகலும் முப்பது நாழிகைக்கு ஒருமுறை மாறி மாறி வந்த போதிலும் - ஒரே காள ராத்திரியாகக் கருதியிருந்தாராம். பகவத் ஸேவை கிடைத்ததும், 'இதுவே பகல்; இதுவே நல் விடிவு!' என்று மகிழ்ந்து போகிறார்.

இந்தக் குதூகலந்தான்,

பகல்கண்டேன், நாரணனைக்
கண்டேன்!

என்றெல்லாம் வெளிப்படுகிறது.

Koviloor Digital Library

16. மயிலைப் பேயார்

ஒரு சமயம் நெஞ்சுருகிக் கண்ணீர் பெருக நிற்பார். ஒரு சமயம் அகமகிழ்ந்து முகமலர்ந்து வருவார். ஒரு சமயம் பாடுவார், ஆடுவார். ஒரு சமயம் அலறுவார். ஒரு சமயம் விழுந்து தொழுவார்; எழுந்து நின்று தொழுகையையும் மறந்திருப்பார், இறைவன் திருமுன்றிலில். சிரிப்பார்; அழுவார். இவரை, 'ஆழ்வார்' என்றார்கள் பக்தர்கள். இந்த நிலை முற்ற முற்றப் 'பேய் பிடித்தவர்! இவர் பேயார்!' என்றார்கள் லௌகிகர்கள். நாளடைவில் இவருக்குப் **பேயாழ்வார்** என்ற பெயரே நிலைத்துவிட்டது; இயற்பெயர் இன்னதென்று தெரியாமலே போய்விட்டது.

இப்போது சென்னை மாநகரின் பகுதியாக இருக்கும் மயிலையில் தோன்றியதால், '**மயிலைப் பேயார்**' என்று இவரைச் சொல்லலாம். சிவநேசச் செல்வியாராகிய காரைக்காலம்மையாரைக் '**காரைக்காற் பேயார்**' என்று சொல்வதுண்டல்லவா?

காரைக்காலம்மையாரும் முதலாழ்வார்களின் காலத்தைச் சேர்ந்தவர் என்று ஊகிக்கலாம். காரைக்காலம்மை யார் பாடல்களின் போக்கும் கருத்துக்களும் முதலாழ் வார்களின் பாடலமைப்பையும் கருத்துக்களையும் நினைவூட்டு கின்றன.

பக்தி நிலையிலும் வைராக்கிய நிலையிலும் மயிலைப்பேயாரும் காரைக்காற் பேயாரும் விசேஷ ஒற்றுமை உள்ளவர்களே. பக்திப் பெருக்கினாலும் வைராக்கியப் பெருக்கினாலும் இவர்களுக்குக் கிடைத்த பெயர்களில்கூட எவ்வளவு ஒற்றுமை, பாருங்கள்!

மனிதனைப் 'பிணம் தூக்கித் திரியும் பேய்' என்றார் ஒரு கிரேக்க அறிஞர். ஆம்; ஆத்மா என்ற பேய்தானே ஜட சரீரம்

Koviloor Digital Library

என்ற பிணத்தைத் தூக்கித் திரிந்துகொண்டிருக்கிறது? தத்துவரீதியான மனிதநிலை இது. எதார்த்த மனிதன் பேய் அல்லது ஆத்மா. மரணம் ஏற்படும்போது பேயும் பிணமும் பிரிந்து போகின்றன! பிணம் பிணமாய்க் கிடக்கிறது; பேயோ? - எங்கிருந்து எங்கே?

பிணத்தின் போக்கைக் குறித்து அறிவியல் (ஸயன்ஸ்) ஆராய்ச்சி செய்திருக்கிறது. பேயின் போக்கையோ சமய அறிவு சிந்தித்துப் பார்த்திருக்கிறது. இங்கே அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை; ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளலாம். மரணத்தினால் பேய்க்கு விடுதலை கிடைத்து விடவில்லை. 'ஞான வாழ்வினால், பக்தி வாழ்வினால்தான் விடுதலை கிடைக்கும்' என்று சமயங்கள் உறுதி கூறுகின்றன. பேயாழ்வாருக்கும் காரைக்காலம்மையாருக்கும் இதே கொள்கைதான்.

'மரணத்தால் பிணத்தை உதறிய பேய்மீது, மறு பிறப்பு மறுபடியும் ஒரு பிணத்தைத் தூக்கி வைத்துவிடுகிறது' என்று இந்து, புத்த, ஜைன சமய நூல்கள் கூறுகின்றன. இந்தப் பிறவியிலேயே அஞ்ஞானம் செத்து, ஞானத்தால் மறுபிறப்பு ஏற்படும்போது, 'பிணச் சுமை பேய்க்கு இல்லை! விடுதலை என்ற முத்தி கிடைத்து விடுகிறது' என்றும் நமது சமய ஞானிகள் கூறுவர். இந்த நிலையை அடைந்த ஞானியர் கூட்டத்தில் ஞான வைராக்கிய மூர்த்திகளான பேயாழ் வாருக்கும் காரைக்காலம்மையாருக்கும் சிறப்பான ஸ்தானம் உண்டு.

காரைக்காலம்மையார் ஸ்தூலமான பிணச் சுமையை அப்படியே ஸ்தூலமாகவே உதறித் தள்ளிவிட்டு, ஞானப் பேயாக மட்டுமல்ல, பேய் வடிவமாகவே திரிந்து கொண்டிருந்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது.

பேயாழ்வார் தொண்டைமண்டலம் என்று சொல்லப் படும் தமிழ்நாட்டுப் பகுதியில் அக்காலத்திலே பொருட் செல்வத்திற்கும் கல்விச் செல்வத்திற்கும் பக்திச் செல்வத்திற்கும் ஒருங்கே பேர்போன மயிலை மாநகரில்,

Koviloor Digital Library

சாதாரணமாய்க் 'கேணி' என்று சொல்லப்படும் ஒரு சிறு குளம் போன்ற விசாலமான கிணற்றிலே உண்டான செவ்வல்லிப் பூவில் அவதாரஞ் செய்தாரென்று ஸ்ரீ வைஷ்ணவ குரும்பரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. இவர் நம்மைப்போல் பிறக்கவில்லையென்றும், பொய்கை யாழ்வாரும் பூதத்தாழ்வாரும்போல அயோநிஜராகத் தோன்றினார் என்றும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நம்புகிறார்கள். அஞ்ஞானத்தை வெட்டித்தள்ளி, ஞானியாகவும் வைராக்கிய மூர்த்தியாகவும் வாழ்ந்த இவரது வைபவத்தைக் கண்டு, இவரைப் பகவானுடைய ஒரு விசேஷ சக்தியின் அறிகுறியான 'நந்தகம்' என்னும் வாளாயுதத்தின் அம்சம் என்கிறார்கள்.

பேயாழ்வார் பகவத் கடாட்சம் பெறுவதற்கு முன் தனியாகவே சஞ்சரித்துக் கொண்டிருந்தாராம். சுத்த ஸாத்விகராக எம்பெருமானுக்குத் தொண்டு புரிவதையே பெரும் பேறாகக் கொண்டு, பொய்கையாரையும் பூதத்தாரையும் போல ஒரு நாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள் இல்லாதபடி அலைந்து திரிந்துகொண்டிருந்தாராம். அப்படித் திரிந்துகொண்டிருந்த மூவரையும் ஓரிடத்திலே சேர்த்துப் பகவான் ஆட்கொண்ட கதை பிரசித்தம்.

சூரியஸ்தமன நேரத்திற்குப் பின் திருக்கோவலூர் இடைகழியில் இவர்கள் சந்தித்து, 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' என்றவாறு ஒடுக்கமாயிருந்த அந்த இடத்திலே மூவரும் பகவானுடன் நெருங்கி நின்று, 'சொல்விளக்கு' ஏற்றிய அந்தக் காலத்திலே, 'திருக்கண்டேன்' என்று தொடங்கிப் பாடியவர் பேயாழ்வார் என்பதும் பிரசித்தமே, இத்தகைய ஒரு வாய்ப்பிலே இவருக்கு, 'ஞானப்பிறப்பு' ஏற்பட்டது எனலாம்.

'திருக்கண்டேன்' என்ற பாட்டே பேயாழ்வார் பாடிய பிரபந்தத்தின் முதலாவது செய்யுளாக அமைந்திருக்கிறது:

திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்

Koviloor Digital Library

பொன்ஆழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்,
என்ஆழி வண்ணன்பால் இன்று.

[திரு - மகாலட்சுமி. அருக்கன் - சூரியன். அணிநிறம் - அழகான பிரகாசம். செரு - போர்க்களம். கிளரும் - மிகுந்து மேலெழுந்து விளங்குகிற. பொன்ஆழி - பொன்போல் தகதகவென்று நெருப்பைக் கக்கும் சக்கராயுதம். புரிசங்கம் - வலம்புரிச் சங்கு. ஆழி வண்ணன் - கடல் வண்ணனாகிய பெருமாள்.]

பொய்கையாழ்வார் பூமியாகிய தகழியில் கடல் நீரை நெய்யாகக் கொண்டு, சூரியனை விளக்காக ஏற்றவும், பூதத்தாழ்வார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும் சிந்தையைத் திரியாகவும் கொண்டு ஞானவிளக்கு ஏற்றவும், இந்த இரண்டு விளக்குகளின் ஒளியாலும் பேயார் பகவானைக் கண்டு பாடினார் என்பது கதை.

முதல் முதலாக அன்னையாகிய மகாலட்சுமியின் அருள் வடிவத்தைக் கண்டாராம். பகவான் மக்கள்மீது அருள் செய்வதற்குத் தாயின் தயவு வேண்டுமென்று பக்தர்கள் கருதுகிறார்கள். மகாலட்சுமியை முதல் முதல் கண்டதாக இவர் கூறுவது கவனிக்கத் தக்கது.

மகாலட்சுமியைக் கண்டதும், 'பொன்மேனி கண்டேன்' என்கிறார். திருமாலின் மேனி மரகத மேனியல்லவா? ஆனால் பொன்னரசியாகிய திருமகளோடு கூடிய திருமேனி இப்போது பொன்மேனியாகவே தோன்றுகிறதாம்.

'திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன்' என்றும் சொல்லுகிறார். மரகத மலையிலே உதித்து ஒளி வீசிவரும் இளஞ் சூரியனைப் போலத் தோன்றி இருவர் ஒளியும் - அதாவது அந்தப் பொன் ஒளியும் இந்த மரகத ஒளியும் - கலந்து ஒளிர்கின்ற அந்த வசீகர நிறத்தையும் கண்டதாகக் கூறுகிறார். 'இருவர் சேர்ச்சியால் பிறந்த சமுதாய சோபை' என்பது வியாக்கியான விளக்கம்.

Koviloor Digital Library

பிறகு, 'பகவானுடைய கையிலே பொன்போலத் தகதகவென்று நெருப்பைக் கக்கும் சக்கராயுதத்தையும் கண்டேன்' என்கிறார். துஷ்ட நிக்கிரகத்துக்கு அறிகுறியாக அசுர சக்திகள்மீது சீறி விழுகிற சக்ராயுதம், யுத்த சன்னத்தனாய்ச் சீறி விழுகிறவனைப் போலக் காண்கிறதாம்.

இந்தப் பொன்னாழி இறைவனுடைய மரகத வடிவிற்குப் 'பரபாகமா'க இருக்கிறதாம். 'பரபாகம்' - நிறங்கள் கலத்தலால் உண்டாகும் ஒளியழகு.

பகவான் கையிலுள்ள வலம்புரிச் சங்கையும், 'கண்டேன்' என்று முடிக்கிறார். ஆக்கவும் அழிக்கவும் உதவும் சப்தத்திற்கு அறிகுறி இந்தச் சங்கு.

இந்த விதமாக அந்த நள்ளிரவில் பரம சாதுக்களான பொய்கையாழ்வாருடனும் பூதத்தாழ்வாருடனும் பேயாழ்வார் தாம் அநுபவித்த பகவத் அநுபவத்தைப் பாடத் தொடங்கி னாராம். சமுத்திரத்தைப் பார்த்தவன், அதில் உள்ள முத்து, சங்கு முதலியவற்றைத் தனியாகப் பார்த்து உகப்பதுபோல், லட்சுமி, சங்கு, சக்கரம் முதலியவற்றிற்கு இருப்பிடமாய், அழகுகள் அலை எறிந்து கொண்டிருக்கும், பகவானாகிய சமுத்திரத்தை இவர் கண்டு கொண்டார். இந்தக் கருத்து, இந்தச் செய்யுளின் ஈற்றடியிலுள்ள, 'ஆழி வண்ணன்' என்ற சொற்றொடரிலும் குறிப்பாகக் காண்கிறது.

'திருக் கண்டேன்' என்று தொடங்கும் இப்பாட்டு வைஷ்ணவர்களுக்கிடையே மிகவும் பிரசித்தமான வெண்பாக்களுள் ஒன்று. முதலாழ்வார்கள் திருக்கோவலூரில் நெருங்கி ஞான விளக்கேற்றி, இறைவனைக் கண்ட கதை எவ்வளவு பிரசித்தமோ, அவ்வளவு பிரசித்தமானது பேயாழ்வாரின் இந்தப் பாடலும்.

பேயாழ்வாரின் பிரபந்தத்திற்குத் தனியனாக அமைந்திருக்கும் செய்யுள், இந்தப் பாட்டையும் கதையையும் இவரது வாழ்க்கையிலேயே அதி முக்கிய நிகழ்ச்சியென்று கருதுவதுபோல் குறிப்பிடுகிறது:

Koviloor Digital Library

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்,
காரார் கருமுகிலைக் காணப்புக்(கு) - ஓராத்
'திருக்கண்டேன்' என்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே உகந்து.

[சீராரும் - அழகு பொருந்திய. காரார் கருமுகில் - கார் காலத்துக் காளமேகம் போன்ற மேனியை உடைய பகவான். ஓரா - ஓர்ந்து; உணர்ந்து. சீரான் - சீரையுடைய பேயாழ்வார்.]

மழைக்காக இடைகழியிலே ஒதுங்கி அங்கும் ஒரு மலைமேகத்தைக் கண்டு களித்தார் பேயாழ்வார் என்று சுவைபடச் சொல்லி, அந்தக் கதையையும், பாட்டையும் பாராட்டுகிறார் குருகைக் காவலப்பன் என்ற அறிஞர்.

'திருக் கண்டேன்' என்று தொடங்கும் பேயாழ்வாரின் பிரபந்தம் நாதமுனி என்ற முதலாவது ஆசாரியரால் வகுக்கப்பெற்ற, இயற்பாவில் மூன்றாவது பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. பொய்கையாழ்வாருடைய அந்தாதிப் பிரபந்தத்திற்கு அடுத்தது பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி; அந்தப் பிரபந்தத்திற்கும் அடுத்தபடியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த மூன்றாவது பிரபந்தத்தை 'மூன்றாம் திருவந்தாதி' என்பர்.

முதலாழ்வார்கள் மூவரும் இந்தப் பிரபந்தங்கள் பாடிப் பகவத் கடாட்சம் பெற்ற பின்பு ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் வாழ்ந்து வந்தார்களாம்; ஒன்று கூடியே தேச சஞ்சாரம் செய்து வந்தார்களாம். இன்றும் இவர்களுடைய விக்கிரகங்கள் ஒன்று சேர்ந்தே கோவில்களில் காட்சியளிக்கின்றன. இவர்கள் யோக பலத்தால் நீண்ட காலம் வாழ்ந்து திவ்விய ஸ்தலங்கள் தோறும் சஞ்சாரம் செய்து எண்ணிறந்த மக்களை நல்வழிப்படுத்தி நாட்டை உய்வித்தார்கள் என்பர்.

★

Koviloor Digital Library

17. மருந்து, பொருள், அமிர்தம்

'நோய்க்குத்தானே மருந்து? நரகத்திற்கும் மருந்து உண்டா?' என்று கேட்கலாம். அதற்குப் பேயாழ்வார், 'அந்த அவஸ்தையும் ஒருவகை நோய்தான்; அதற்கும் நல்ல மருந்து இருக்கிறது' என்று பதில் சொல்லுகிறார்.

'மறுமையில் நரகத்தை அடையாமல் இருப்பதற்குத் தானே உபாயம் சொல்லப் போகிறீர்?' என்று மறுபடியும் கேட்கலாம். அதற்கு மறுபடியும் ஆழ்வார், 'நரகம் என்பது மறுமையில் ஏற்படும் அவஸ்தை மட்டுமல்ல; இம்மையிலும் இந்த ஸம்ஸாரத்திலேயே ஏற்படுகிற அவஸ்தைகளும் நரகாவஸ்தையே!' என்று பதில் சொல்லுகிறார்.

நரகம் தீர்க்கும் மருந்து

நரகம் நமது உலகத்திற்குத் தொலை தூரத்தில் எங்கேயோ இருக்கிறது என்று அவ்வளவு நிச்சயமாக நம்பியிருக்கிறவர்களை ஆழ்வாரின் கொள்கை திகைக்க வைக்கும்; திகிலடையவும் செய்துவிடும்! ஆனால் கொஞ்சம் ஆலோசனையில் ஆழ்ந்து பார்த்தால் திகைப்பும் திகிலும் குருட்டு நம்பிக்கையும் போய் அறிவு பிறக்கும். கொல்லாமல் கொல்லும் கவலையைக் காட்டிலும் நரகந்தான் கொடியதா?

வாழ்வையே நரகமாக்கக் கூடிய சத்துருக்கள் நம் உள்ளத்திற்குள்ளேயே ஒளித்துக் கிடக்கிறார்கள். கவலை, துயரம், சோகம், அவநம்பிக்கை முதலான துன்பங்களெல்லாம் நமது வாழ்வைப் பாழாக்கி இம்மையிலேயே நரகத்திற்கு தள்ளும் பாதக அரக்கர்கள்! அசுர - ராட்சஸர்களை வதஞ் செய்த பகவான் இந்தச் சூட்சும அரக்கர்களையும் வதைத்துக் காப்பாற்றுவான் என்பது பேயார் திருவுள்ளம்.

Koviloor Digital Library

இத்தகைய பகவானையே, 'நரகம் தீர்க்கும் மருந்து' என்கிறார். மருந்து வேறு, மருத்துவன் வேறு என்பதில்லை யாம்:

> செருநர்உகச் செற்(று) உகந்த தேங்கோத வண்ணன்
> வருநரகம் தீர்க்கும் மருந்து.

[செருநர் - சத்துருக்கள். உக - அழியும்படி. செற்று - தொலைத்து. உகந்த - மகிழ்ந்த. தேங்கு ஓத வண்ணன் - தேங்கின கடல் போன்ற வடிவழகையுடைய பகவான்.]

அரக்கர்களை ஒழியச் செய்து, 'அடியார்களின் விரோதிகள் தொலையப் பெற்றோம்!' என்று உள்ளம் உவந்திருக்கிறானாம் பகவான். அந்த உவப்பே, அந்த வடிவழகை மேன்மேலும் அழகு செய்கிறதாம். 'இத்தகைய சௌந்தரிய சமுத்திரமே சம்ஸார சமுத்திரத்தைத் தாண்டத் துணை' என்கிறார்: சம்ஸாரத்தை நரகமாக்கும் ராட்சஸ குணங்களை ஒழிப்பதற்கு ஸர்வேச்வரன் என்ற சௌந்தரிய சமுத்திரம்தான் மாமருந்து என்கிறார்.

இத்தகைய சௌந்தரிய சமுத்திரம் எங்கே இருக்கிறது? 'எங்கேயோ தொலைதூரத்தில் இருக்கிறது' என்று சொல்லவில்லை: 'மனத்திற்குள்ளேயே இருக்கிறது இந்த மருந்து' என்கிறார். 'மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான்' என்பது இவர் திருவாக்கு.

மருந்தாக மனத்திற்குள்ளேயே இருக்கும் பகவானுடைய அருளுக்கு அவனுடைய, 'திருவடி' அறிகுறி. அந்தத் திருவடி, மருந்தாக இருப்பதோடு செல்வமாகவும் இருக்கிறது; அமிர்தமாகவும் இருக்கிறது என்கிறார்:

> மருந்தும் பொருளும் அமுதமும் தானே
> திருந்திய செங்கண்மால் ஆங்கே - பொருந்திய
> நின்றுலகம் உண்டுமிழ்ந்து நீரேற்று மூவடியால்
> அன்றுலகம் தாயோன் அடி.

Koviloor Digital Library

[திருந்திய - தெளிவாகக் கண்டுகொள்வதற்குக் காரணமான. நீர் ஏற்று - (மகாபலியிடத்தில்) யாசித்துப் பெற்று. தாயோன் - தாவி அளந்தவன்.]

மன நோய்களைப் போக்கும் மருந்தாக இருப்பதோடு எம்பெருமானுடைய திருவடிகளே பக்தர்களுக்கு இஷ்டங் களையெல்லாம் தரக் கூடிய ஐசுவரியமாகவும் இருக் கின்றனவாம். பொருளைக் கொண்டு பல பல பண்டங்களை வாங்குகிறோம்; வியாபாரம் செய்கிறோம். பக்தர்களும் பகவானுடைய அருளையே மூலதனமாகக் கொண்ட முதலாளிகள்; ஆனால் வியாபாரிகள் அல்லர்!

பொருள் வேண்டுபோது பொருள் தருகிறதாம், இறைவனுடைய அருள்; வேண்டாதபோது அதை எடுத்துக் கொள்கிறதாம். 'பகவான் கொடுத்தான்; பகவான் எடுத்துக் கொண்டான்!' என்று அந்த இரண்டு நிலைகளிலும் பக்தர்கள் பரம திருப்தியடைகிறார்கள். அதே திருவருள், பலம் வேண்டும்போதெல்லாம் பலத்தைக் கொடுக்கிறதாம்; குலம் இல்லாதவர்களுக்குக் குலத்தையும் கொடுக்கிறதாம். இப்படி எல்லா நலங்களையும் வேறு எந்தச் செல்வந்தான் கொடுக்க முடியும்?

இப்படி இஷ்டங்களை அடைவதற்கு ஐசுவரியமாய், அநிஷ்டங்களாகிய நோய்களைத் தொலைப்பதற்கு அருமருந்தாகி நிற்கும் திருவருள், அமிர்தம்போல் தானே அநுபவிக்கத் தக்கதாகவும் இருக்கிறதாம். இந்த அமிர்தம் அநுபவிக்கத் தெவிட்டுவதேயில்லை. அதனால்தானே இறைவனை, 'ஆரா அமுது' என்கிறார்கள்.

இந்த வெண்பாவில் ஆழ்வார், இப்படியெல்லாம் நமக்கு மருந்தும் பொருளும் அமிர்தமும் ஆகிய திருவடி களோடு கூடிய எம்பெருமானைத் 'திருந்திய செங்கண்மால்' என்கிறார். எம்பெருமான் திருந்துவதா? 'நாம் திருந்துவதற்குக் காரணமான அருள்பொழியும் செம்மையான அழகிய திருக்கண்களையுடைய பகவான்' என்கிறார்.

Koviloor Digital Library

நமக்குத் தக்கவாறு தன்னையும் திருத்திக்கொள்கிறான் இறைவன் என்றும் பொருள்பட வியாக்கியானம் செய்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

இந்த விதமாக எப்போதும் அடியவர்களைத் திருத்தி அவர்களுக்குத் தக்க விதமாகத் தன்னையும் திருத்திக் கொண்டு உலகத்தைக் காப்பாற்றும் அருள் நிகழ்ச்சி ஒன்றிலேயே கண்ணாயிருக்கிறானாம் எம்பெருமான். இத்தகைய பெருமானை, 'மருந்து' என்றும், 'பொருள்' என்றும், 'அமுதம்' என்றும் வாயார மனமார ஆசை தீர வருணித்துப் பார்க்கிறார் பேயாழ்வார்.

திருவருளுக்கு அறிகுறியான திருவடியையும், அடியார்களைத் திருத்திப் பணிகொள்ளும் திருக்கண்களையும் செந்தாமரைப் பூவோடு உவமிப்பதில் ரஸிகர்களான பக்தர்களுக்கு ஒரே குதூகலந்தான். பொதுவாகப் பூக்களின் அழகையும், சிறப்பாகச் செந்தாமரை மலர்களின் அழகையும் வைராக்கிய சீலரான பேயாழ்வாரும் எவ்வளவோ ரஸித்து அநுபவித்திருக்கிறார்! அந்த அழகுகளைத் தெய்விக அழகாகவே கண்டிருக்கிறார்!

தெய்வத்தின் அழகையும் பின்வருமாறுதானே பேயாழ்வாரும் வருணிக்க வேண்டியிருக்கிறது.

அடிவண்ணம் தாமரை, அன்(று) உலகம் தாயோன்
படிவண்ணம் பாற்கடல் நீர்வண்ணம்; - முடி வண்ணம்
ஓராழி வெய்யோன் ஒளியும் அஃதன்றே;
ஆராழி கொண்டாற்(கு) அழகு

[அடி வண்ணம் - திருவடிகளின் நிறம். தாயோன் - தாவி அளந்தவனுடைய. படி வண்ணம் - திருமேனியின் நிறம். பார் - பூமி. ஓர் ஆழி வெய்யோன் - ஒற்றைச் சக்கரமுடைய ஒளிமயமான தேரில் செல்லும் சூரியன். ஆர்ஆழி - அருமையான சக்கராயுதம்.]

Koviloor Digital Library

என்று அந்த அழகிலே ஈடுபடும் இதயந்தான் எவ்வளவு அழகியது!

செந்தாமரைப் பூவின் அழகிலே (உலகங்களையெல்லாம் அளந்த) திருவடிகளைக் கண்டவர், பூமியின் பெரும் பகுதியான கடல் நீரின் நீலத்திலே குளிர்ந்த திருமேனி வண்ணத்தைக் காண்கிறார். உலகளந்த சரிதையிலேயே ஈடுபட்டவர், அந்தத் திருவடிகளின் நிறம் செந்தாமரை போலச் சிவந்திருந்தது என்று நேரில் பார்த்தவரைப் போல் அந்த அழகை அதிசயித்து அநுபவித்துவிட்டு, 'அந்தத் திருமேனியின் நிறமும் கடல்நீர்போல் இருண்டு குளிர்ந்து ஒரே நெடு நீலமாய்க் காண்கிறது!' என்று உள்ளம் குழைந்து உவகை கொள்கிறார்.

ஸர்வலோக ஆட்சிக்கு அறிகுறியான திருமுடியோ ஒப்பற்ற ஏதோ ஒரு சூரியனுடைய தேஜஸை ஞாபகப்படுத்திக் கருத்தையும் கூசச் செய்கிறதாம். இத்தகைய பேரழகன், நமது விரோதிகளைப் போக்குவதற்காகக் கையும் சக்கரமுமாய், நமக்கு மேலும் மேலும் அருள் செய்யக் கண்ணுங் கருத்துமாயிருக்கிறானாம். என்ன ஆராக்கியமான மருந்து! என்ன அதிசயமான பொருள்! என்ன அழகான, தெவிட்டாத, தேவாமிர்தம்!

'இத்தகைய பேரழகை அநுபவிப்போம்; இத்தகைய பேரருளில் மூழ்கிக் கிடப்போம் நெஞ்சே, வா' என்று இவர் தம் நெஞ்சை அழைப்பது நமக்கும் ஓர் அழைப்பே; ஓர் அழகான வழியையும் இது நமக்குக் காட்டுவதாகும்.

> கழல்தொழுதும் வாநெஞ்சே! கார்க்கடல்நீர் வேலைப்
> பொழில்அளந்த புள்ளூர்திச் செல்வன் - எழில் அளந்(து) அங்(கு)
> எண்ணற்(கு) அரியானை, எப்பொருட்கும் சேயானை,
> நண்ணற்(கு) அரியானை நாம்.

Koviloor Digital Library

[கார்க்கடல் - கருங்கடல். வேலை - கரை. பொழில் - (இங்கே) பூமி. புள் ஊர்தி - கருடனை வாகனமாகவுடைய பகவான். எழில் அளந்து - அழகை எல்லை கண்டு. எண்ணற்கு அரியானை - எண்ணுவதற்கும் முடியாதவனை. சேயானை - நெடுந் தூரத்தில் இருப்பவனை. நண்ணற்கு அரியானை - கிட்ட முடியாதவனை.]

நம்முடைய முயற்சியால் கிட்ட முடியாத பரம்பொருள் தன்னுடைய அருள் மிகுதியினாலே தன்னைத் தானே வெளியிட்டுக் கொள்வதால், உலகம் அளந்த திருவடிகளையும் நாம் தொழ முடியும் என்கிறார் ஆழ்வார். 'அவன் அருளால் அவன் திருவடிகளைத் தொழுது நாமும் உய்ந்து போகலாம்' என்று நாமும் நமது நெஞ்சுக்கு உபதேசம் செய்துகொள்வது நலந்தரும் ஓர் உபாயமாகும். இந்த உபாயத்தால், பக்தர்களுக்கெல்லாம் மருந்தும் பொருளும் அமிர்தமுமாக இருக்கும் பகவானுடைய அருளழகை ஒருவாறு உணர்ந்து நாமும் அநுபவிக்க முடியும்.

★

Koviloor Digital Library

18. பேயாரும் பெயர்களும்

'நன்னெஞ்சே! பகவானுடைய நாராயண நாமம் முதலான பல அழகான பெயர்களையும் சொல்லி அழகிய கையால் நாம் தொழுவோம்; நீயும் இதற்கு உடன்பட்டு வா' என்று நெஞ்சுக்கு உபதேசஞ் செய்கிறார் பேயாழ்வார்:

நாமம் பலசொல்லி நாராய ணாஎன்று
நாம்அங்கை யால்தொழுதும் நன்னெஞ்சே! - வாமருவி;
மண்உலகம் உண்டுமிழ்ந்த வண்(டு) அறையும் தண்துழாய்க்
கண்ணனையே காண்கநம் கண்.

[அங்கை - அழகிய கை. மருவி - உடன்பட்டு; தழுவி. அறையும் - ஒலி செய்யும். தண் - குளிர்ந்த.]

பெயரில்லாத பரம்பொருளுக்கு எத்தனையோ அழகான பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள் பக்தர்கள்; அநந்தனாகிய பரம்பொருளுக்கு இத்தகைய பெயர்களும் அநந்தம்! சௌரியத்திற்காக, 'நாராயணாதி ஸஹஸ்ர நாமங்கள்' என்பர்.

ஒவ்வொரு நாமமும் பகவானைப்பற்றிய அழகான கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் கொள்கலம். 'நாராயணன்' என்பது, 'பகவான் எங்கும் நிறைந்திருக்கிறான்; உயிர்களுக்கெல்லாம் உயிர்' என்பதற்கு ஒரு நினைவுக்குறி. 'இத்தகைய அழகிய நாமங்களை அழகாக உச்சரித்துக் கொண்டே கைதொழுவோம்' என்கிறார் ஆழ்வார். அப்படித் தொழும் கைகளே அழகிய கைகள் என்பர்.

நெஞ்சு நாக்கோடு, 'ஒத்துயையாமை' செய்தால் காரியம் கெட்டுப் போகும். ஆகையால்தான், 'நெஞ்சே! நீயும் நாவைத் தழுவி வா' என்று நெஞ்சை வேண்டிக் கொள்கிறார்; 'நன்னெஞ்சே!' என்று சொல்லிக் குதூகலப்படுத்துகிறார்.

Koviloor Digital Library

பகவானுடைய அழகிய நாமத்தைத் தொழும் நெஞ்சு நல்ல அழகிய நெஞ்சுதானே!

கண்ணன் என்ற அழகிய, பரம சுலபமான, செல்வப் பெயரையும் குறிப்பிடுகிறார் பேயாழ்வார், இந்தப் பாட்டிலே. நாராயண நாமத்தைக் காட்டிலும் இந்தப் பெயரிலே மோகித்துக் கிடக்கிறார்கள், பகவானையே கண்ணாகக் கொண்ட தமிழ்நாட்டுப் பாகவதர்கள். இந்தப் பெயரைத்தான் எவ்வளவு பெருமையாகவும் அருமையாகவும் குறிப்பிடுகிறார் பேயாழ்வார்!

'மண்உலகம் உண்டு உமிழ்ந்த' என்று உலகத்தை உள்ளே அடக்கி வைத்து வெளிப்படுத்திய பெருமையை வெளியிடுகிறவர், எவ்வளவு அருமையாகவும் செல்ல மாகவும், 'வண்டு அறையும் தண்துழாய்க் கண்ணன்' என்கிறார்!

'தண்ணந்துழாய்' என்று சொல்லுமாறு குளிர்ந்து, அழகிய பசுமையும் பரிமளமுமான துளசி மாலைகளை அழகாகச் சூடியிருக்கிறானாம் கண்ணன், முடிமேலும் அடிமேலும் மார்மேலும் தோள்மேலும். இத்தகைய கண்ணனையே கண் காண வேண்டும் என்கிறார். மனக்கண்ணால் கண்ணனைக் காண்போர், புறக்கண்ணால் உலகத்தைப் பார்க்கும்போது இயற்கை அழகுகளையும் பிற அழகுகளையும் கண்ணனுடைய தெய்விக செளந்தரியமாகவே அநுபவிப்பர் என்பது குறிப்பு.

கண்ணன் என்ற அழகை எண்ணும்போது வைராக்கிய மூர்த்தியான பேயாழ்வாரையும் அந்த அழகு என்ன பாடு படுத்துகிறது:

> கண்ணும் கமலம், கமலமே கைத்தலமும்,
> மண்அளந்த பாதமும் மற்றவையே - எண்ணில்
> கருமா முகில்வண்ணன் கார்க்கடல்நீர் வண்ணன்
> திருமா மணிவண்ணன் தேசு.

[கமலம் - தாமரை. முகில் - மேகம். தேசு - தேஜஸ்.]

Koviloor Digital Library

முதல் முதல் கண்ணழகிலே ஈடுபட்டுக் 'கண்ணும் கமலம்' என்றார். நெடும்போது கழித்தபின் கையழகிலே கண்வைத்துக் 'கமலமே கைத்தலமும்' என்றாராம். பிறகு நெடும்போது கழித்துத் திருவடி அழகிலே கண் பதித்து, 'மண் அளந்த பாதமும் மற்றுஅவையே' என்று, 'அந்தச் செந்தாமரைப் பூவையே அந்தப் பாதங்களும் ஞாபகப் படுத்துகின்றன' என்கிறாராம்.

இப்படியெல்லாம் பகவானுடைய திவ்விய அவயவங் களில் ஈடுபட்டு ஆனந்தபோக அநுபவம் பேசுகிறவர், அத்தகைய தெய்விக சௌந்தரியத்தைச் செந்தாமரைப் பூவிலும் பார்த்தவரே!

பூக்களில் மட்டுமா, நீல ரத்தினத்திலும் இறைவ னுடைய அழகிய நீலத்தைக் கண்டார். எல்லையற்ற கருங்கடலின் பரப்பிலும் பள்ளிகொண்ட பகவானுடைய எல்லையற்ற அழகைக் கண்டார். பூமியிலும் பகவானுடைய அழகைக் கண்டவர், வான மேகத்திலும், 'கருமாமுகில் வண்ணனை'க் கண்டார்.

கண்ணும் கையும் திருவடியும் எல்லாம் அழகுதான், ஒரே அழகு மயம் என்று சொல்லும்படி மனக்கண்ணுக்கு முன்வந்து நின்ற கண்ணனை வாய் குளிர மனங் குளிர மூன்று அழகிய பெயர்களால் அழைக்கிறார். இந்தப் பாட்டிலே, 'கருமா முகில்வண்ணன்', 'கார்க்கடல்நீர் வண்ணன்', 'திருமா மணிவண்ணன்' - என்ன திவ்வியமான தமிழ்த் திருப் பெயர்கள்!

எம்பெருமானுடைய அழகான திருநாமங்களை ஸங்கீர்த்தனம் பண்ணி அவனுடைய ஒப்புயவர்வற்ற அழகை நெஞ்சிலே தேக்கிக் கொண்டவர்களுக்கு அந்த நெஞ்சம் அழகு பெற்று, உருவமும் அழகு பெறும் என்கிறார்:

தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான் பேர்ஓத,
நலம்புரிந்து சென்(று) அடையும் நன்கு.

Koviloor Digital Library

[திறல் - திறமை. மாசில் - குற்றமில்லாத. வலம்புரிந்தவான் சங்கம் - வலது பக்கம் சுழித்த சிறந்த சங்கு.]

தேஜஸ் மட்டுமா, ரூப ஸௌந்தரியம் மட்டுமா? - நாம ஸங்கீர்த்தனத்தால் திறமையும் வந்துவிடுமாம். பக்திச் செல்வம் மட்டுமா? - மற்றைச் செல்வங்களும் வந்து சேருமாம். பக்தர்கள் எந்த வகுப்பில் பிறந்திருந்தால் என்ன? - மாசற்ற குடிப்பிறப்பும் வந்து அடைகிறதாம்.

மற்றையோர், 'நாங்கள் நல்ல குலத்திலே பிறந்தோம்! உயர்குலத்தில் பிறந்தோம்!' என்று சொல்லிக் கொள்ளலாம். பக்தர்களுக்கோ நல்ல குலம் பிறந்துவிடுகிறது; பக்த குலந்தான் உயர்குலம் என்பது குறிப்பு. இன்னும் எத்தனையோ நன்மைகளும் பக்தர்களைத் தேடி வந்து அடைகின்றன என்கிறார்.

பக்தர்கள் இந்த நன்மைகளையெல்லாம் ஆசைப்பட்டு அடைய முயற்சி செய்யாவிட்டாலும் எல்லா வகை நன்மைகளும் இவர்களை ஆசைப்பட்டு வந்து அடையும்; அடைந்து தாமே நன்மை பெறும் என்பது குறிப்பு. கண்டவர்களின் கண்ணணையும் நெஞ்சையும் வசீகரிக்கும் வடிவழகு, தேஜஸ், திறமை முதலான பல்வேறு நன்மைகளும் பகவானைப்போல் பக்தர்களுக்கும் பணிசெய்து நிற்கும் என்பது ஆழ்வார் திருவுள்ளம்.

ஒன்றுமே வேண்டா(து)
உலகனைத்தும் ஆளுவர்காண்!

என்று புதுமைக் கவியாகிய பாரதியார் சொல்வது பக்தர்களுக்கு விசேஷமாகப் பொருந்தும் என்பர்.

பக்தராகப் பரிணமிப்பதற்கு அதிசுலபமான வழி நாம ஸங்கீர்த்தனம். அழகிய நாமங்களை அழகாக உச்சரித்து எம்பெருமான்மேல் பாரத்தைப் போட்டுக் கவலையற்ற வாழ்வு வாழ்கிறவர்கள், தங்கள் வாழ்வை அழகுமயமாக்கிக் கொண்டு இவ்வுலகத்திலேயே பேரின்ப வாழ்வு வாழக்கூடும்.

★

Koviloor Digital Library

19. கடலும் கடவுளும்

இறைவன் எங்கே இருக்கிறான்? 'பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறான்; சேஷ சயனத்தில் யோக நித்திரை செய்கிறான்' என்றெல்லாம் பௌராணிகர்கள் சொல்லு கிறார்கள். வைதிகர்கள், 'வேத சாஸ்திரக் கடலிலும் துயின்று கொண்டிருக்கிறான்' என்பர். வேதாந்திகள், 'எத்தகைய அறிவுக் கடலாலும் அறிய முடியாதவன்!' என்பதுபோன்ற வாக்கியங்களால் ஞானானந்த வெள்ளமாகிய இறைவனின் பெருமையை உணர்த்த முயல்கிறார்கள். பக்தர்களோ, 'கடல்வண்ணன், மேக வண்ணன், அருவி நீர் போன்ற திருமேனி உடையவன், பச்சைமா மலைபோல் மேனி வாய்ந்தவன்' என்றெல்லாம் துதித்து, மணிவண்ணனின் அழகை உள்ளத்திலே பதிய வைத்து ஆறுதல் அடைகிறார்கள்.

இந்த நிலையைப் பின்வரும் பேயாழ்வார் பாட்டிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம் :

> நன்கோதும் நால்வேதத்(து) உள்ளான், நற(வு)இரியும்
> பொங்கோ தருவிப் புனல்வண்ணன் - சங்கோதப்
> பாற்கடலான், பாம்பணையின் மேலான், பயின்றுரைப்பார்
> நூற்கடலான்; நுண்ணறிவி னான்.

[நன்கு ஓதும் - நன்றாக ஓதப்படுகிற. நறவு இரியும் - தேனும் தோற்றுப் போகும் இனிமை வாய்ந்த. பொங்கு ஓதம் அருவிப் புனல் வண்ணன் - கடல் போலவும் அருவி நீர்போலவும் அழகு வாய்ந்தவன். சங்கு ஓதப் பாற்கடலான் - சங்குகளை உடைய, அலைகளோடு கூடிய, பாற்கடலில் இருப்பவன். பாம்பணை: பாம்பு+அணை - சேஷசயனம். பயின்று - பயிற்சி பெற்று. நூற்கடலான் - நூல்களாகிய

Koviloor Digital Library

கடல்களில் இருப்பவன். நுண்ணறிவினான் - (இங்கே) நுண்ணறிவின் நுட்பமாய் இருப்பவன்.]

நாலு வேதங்களில் உள்ளவனாயினும் இறைவன் அந்த வேதங்களாலும் அறியப்படாதவனாம். சாஸ்திரக் கடல்களிலே கண்வளர்ந்த போதும், அந்தக் கடல்களுக்கும் அகப் படாதவனாம். ஏன்? எத்தகைய சாஸ்திர அறிவையும் நுண்ணறிவையும் திணற அடிப்பதல்லவா இறைநிலை?

எனினும், சாமானியர்களும் ஒருவாறு உணர்ந்து, அமைதியும் ஆறுதலும் இன்பமும் பெறும்படியாகப் புராணங்கள், 'பகவான் திருப்பாற்கடலில் சேஷசயனத்தின் மேல் கண்வளர்ந்தருள்கிறான்' என்றெல்லாம் போதிக்கின்றன. பக்தர்களோ அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை.

எந்தக் கடலைப் பார்த்தாலும் பகவானுடைய நினைவு வந்துவிடுகிறது. மலை அருவிகளைப் பார்த்தாலும் அதே நினைவுதான். தேனையும் தோற்கடிக்கும் தெவிட்டாத இனிமை வாய்ந்த அந்தத் திருமேனி, பக்தி உள்ளத்தையே பாற்கடலுக்கும் பாம்பணைக்கும் வேத சாஸ்திரங்களுக்கும் மேலாகக் கொண்டிருக்கிறது என்கிறது பக்திமதம்.

இத்தகைய பக்தியுள்ளம் இயற்கை அழகுகளிலும், தனக்குள் இருக்கும் திவ்விய மங்கள விக்கிரகத்தைக் கண்டு களிக்கிறதென்றால், அதில் அதிசயமில்லை. இதனால்தான் இயற்கை அழகுகள் நிறைந்த திருவேங்கடம் போன்ற ஸ்தலங்களைத் திவ்விய ஸ்தலங்களாகவும் திருப்பதிகளாகவும் மதித்து வழிபடுகிறார்கள் பக்தர்கள். மலை அழகுகளோடு கூடிய திருவேங்கடத்தைப்போல் இயற்கை அழகுகள் வாய்ந்த கடற்கரை க்ஷேத்திரங்களான திருவல்லிக்கேணி, மாமல்லபுரம் முதலான ஸ்தலங்களையும் திருப்பதிகளாக மதித்தனர்.

பேயாழ்வார் திருவல்லிக்கேணிக்கு அருகில் உள்ள மயிலாப்பூரில் தோன்றியவர். திருவல்லிக்கேணியிலே ஓர் அழகான நந்தவனம் அமைத்து அப்பெருமானுக்குப்

Koviloor Digital Library

பணிசெய்து வந்தார். திருவல்லிக்கேணி இப்போது இருக்கும் நிலையில் அக்காலத்தில் இருந்திருக்க முடியாது. சோலையும் கோயிலும் குளமும் நந்தவனமும் கடற்கரையும் பக்தர் கூட்டமுமாக இருந்திருக்க வேண்டும். திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியைச் 'சூரிய கிரணமும் நுழைந்தறியாத சோலை' என்றும், 'குயில்பாட மயிலாடும் பூஞ்சோலை' என்றும் வருணித்திருக்கிறார்.

இத்தகைய சோலையிலிருந்து திருவல்லிக்கேணிக் கடற்கரையைப் பேயாழ்வார் பார்த்துப் பார்த்து அநுபவித் திருக்க வேண்டும். உலகத்திலேயே பேரழகு வாய்ந்த கடற்கரைகளில் இரண்டாவது இதுதான் என்று இன்றும் சொல்லுகிறார்களல்லவா?

பேயாழ்வார் காலத்திலும் இந்தக் கடற்கரை அழகு வாய்ந்திருந்தது என்று ஊகிக்கலாம்:

வந்துதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம் - எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று.

[வெண் திரைகள் - வெண்மையான அலைகள். அணிவிளக்கு - அழகான விளக்கு. எந்தை - என் தந்தை. ஒருவல்லித் தாமரையாள் - ஒரே கொடியில் பூத்திருக்கும் ஒப்பற்ற தாமரைப் பூவை இருப்பிடமாகக் கொண்ட மகாலக்ஷ்மி. சென்று ஒன்றிய சீர் மார்வன் - போய்ப் பொருந்திய அழகிய மார்பை உடையவன்.]

இந்தப் பாட்டின் முதல் இரண்டு அடிகள் திருவல்லிக்கேணிக் கடற்கரையை எவ்வளவு அழகாகக் கண்முன் கொண்டு வருகின்றன! அந்திவேளையில் கரையில் வந்து நோக்கும்போது, கடலலைகள் சிவந்த பவளங்களும் வெண் முத்துக்களும் கொழிப்பதுபோலத் தோன்றினவாம். இந்நாளிலும் அந்தி மயங்கும்போது, வசீகர நிறங்கள் உள்ள

Koviloor Digital Library

சிப்பிகள் அலைகளிலே வந்து கரையேறுவதைப் பார்க்கிறோம். இத்தகைய காட்சி அந்தி வேளையில் திருவல்லிக்கேணிப் பெருமாளுக்கு இயற்கை அன்னை ஏற்றிவைத்த அழகான மங்கள தீபமோ என்று வியக்கும்படி இருந்ததாம், பேயாழ்வாரின் பக்திக் கண்களுக்கு.

அழகிய தீபங்களில் செந்நிறமான ஒளியோடு கூடிய ரத்தின தீபங்களையும், வெண்ணிறமான ஒளியோடு கூடிய முத்துச் சிற்பி விளக்குகளையும் இப்பெரியார் பார்த்திருக்க வேண்டும். கடலலைகளைச் சூரியன் அஸ்தமித்தபின் பார்க்கும்போது இவருக்குத் தாம் பார்த்திருந்த தீப நினைவுகள் வந்துவிடுகின்றன. அலைகளிலேயே, 'ஜலாக்கினி' (பாஸ்பரஸ்) ஒளிர்வதை இன்றும் நாம் பார்க்கிறோமல்லவா? ஒளிமயமான மீன்களும் அலைகளிலே மிதந்து வரக்கூடுமே! இத்தனை வெளிச்சங்களையும் வசீகரமான அந்திமாலையில் ஒரு வசதியான மேட்டிலிருந்து, அலைகளுக்கிடையே கண்டு களித்த உள்ளந்தான்,

வந்துதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம்

என்ற வாக்காக வெளிப்பட்டிருக்க முடியும். இந்த வாக்கின் வசீகரத்திலே, அந்தி மாலையில் கரையில் வந்து மோதும் கடலலைகளின் வசீகரங்களெல்லாம் குடிகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

'இத்தகைய கடற்கரையிலே கோயில்கொண்டிருக்கிறான் என்னை வசீகரித்த எம்பெருமான்' என்கிறார் பேயாழ்வார். சோலை சூழ்ந்த திருவல்லிக்கேணியில் எப்போது பார்த்தாலும் திருவிளக்கேற்றிய மாலைப் பொழுதாகவே காணப்படும் என்பது குறிப்பு.

இத்தகைய திவ்விய ஸ்தலத்தில் அந்தக் காலத்திலே பக்தி இல்லாதவர்களுக்கும் பக்தி பிறப்பது இயல்பு. பக்தி நிறைந்த பேயாரைக் குறித்துச் சொல்லவா வேண்டும்! லக்ஷ்மீ

Koviloor Digital Library

நாராயண மூர்த்தியை இவர் இங்கே தரிசித்துவிட்டார் என்றே கருதலாம். கோயிலில் மட்டுமல்ல; கடற்கரையிலுந்தான்!

இறைவனுடைய திருமார்பை அழகு செய்யும் அந்த மகாலக்ஷ்மியை இப்பெரியார் திருவல்லிக்கேணியிலே அந்தக் காலத்துக் கடற்கரைச் சோலையிலே - ஒரு தாமரைக் குளத்திலேயே - தரிசித்திருக்கக் கூடும்.

அக்காலத்திலே தாமரைப் பொய்கைகள் பல திருவல்லிக்கேணிக் கடற்கரையில் இருந்தனவாம். அத்தகைய பொய்கையில் ஒன்று மிகவும் அழகு வாய்ந்ததாக இருந்திருக்கலாம். இப்பொய்கையில் ஒரே கிழங்கிலிருந்து எழுந்த ஒரே கொடியில் பூத்த செந்தாமரைப் பூ ஒன்று காலை வேளையில் பால சூரியனது சுடர்முகம் கண்டு சிரித்து மகிழ்ந்த காட்சியைப் பேயாழ்வார் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்திருப்பார். அதன் மலர்ச்சியைக் கண்டு இவர் உள்ளமும் விசேஷ மலர்ச்சி பெற்றிருக்கும்.

காலைக் கதிர்கள் செந்தாமரைப் பூவைத் தொட்டு மலரச் செய்யும் இயற்கை அற்புதத்திலேயே, 'சூரிய நாராயணன் செந்தாமரைப் பெண்ணாகிய மகாலக்ஷ்மியைத் தன் செங்கிரணங்களாகிற கரங்களால் அணைத்துக் கொள்கிறான்! என்ற அற்புதத் திருமணத்தையும் இவர் உணர்ந்துவிட்டார் - கண்டுவிட்டார்!

பேயாழ்வாருக்குத் திருவல்லிக்கேணிக் கோயில் மட்டுமே இறைவனது கோயில் என்பதில்லை. இயற்கை முழுவதும், மண்ணும் விண்ணும் அலைகடலும் எல்லாம், எம்பெருமானது இயற்கைத் திருக்கோயிலாகவே காட்சி அளித்தன.

★

Koviloor Digital Library

20. வாழும் வகை

'திருமாலே! நின்அடியை வந்திப்பார் காண்பர் வழி' என்பது பொய்கையார் வாக்கு. திருமாலின் திருவருளையே நம்பி, அவன் திருவடிகளையே அடைக்கலமாகக் கொண்டிருக்கும் பேயாழ்வார், தாம் வாழும் வகையறிந்த ரகசியத்தைப் பின்வரும் செய்யுளில் வெளியிடுகிறார்:

வாழும் வகைஅறிந்தேன், மைபோல் நெடுவரைவாய்,
தாழும் அருவிபோல் தார்கிடப்ப - சூழும்
திருமா மணிவண்ணன் செங்கண்மால் எங்கள்
பெருமான் அடிசேரப் பெற்று.

[மைபோல் நெடுவரைவாய் - இருண்டு பெரிதாயிருக்கும் மலையிடத்தில். தார் - மாலை. சூழும் திருமா மணிவண்ணன் - அந்த அழகிலே ஈடுபட்டு ஒரு கணமும் விட்டுப் பிரியாமல் சூழ்ந்திருக்கும் திரு என்ற பிராட்டியையுடைய நீல மணி போன்ற நிறத்தை உடையவன்.]

இறைவன் அழகிலே ஈடுபட்டு அத்திருமார்பை ஒரு கணமும் விட்டுப் பிரியாமல் இருக்கிறாளாம் திருமாமகள். இப்படித் திருவோடும் சேர்ந்த திருமாலின் அடி சேரப் பெற்று, வாழும் வகை அறிந்ததாக இவர் கூறியிருப்பது பொய்கையாழ்வாரின் கருத்தைத் தழுவி அமைந்ததே.

'அழியா அழகு' என்ற எம்பெருமானுடைய வடிவை, 'நெஞ்சமே! நீ காண விரும்பு' என்று தமது நெஞ்சை நோக்கி உபதேசிக்கிறார்:

செம்மையால் உள்ளுருகிச் செவ்வனே நெஞ்சமே!
மெய்ம்மையே காண விரும்பு.

[மெய்ம்மையே - உண்மையாகவே.]

Koviloor Digital Library

'நீயே உன் வடிவழகைக் காட்டித் தந்தருள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டால், அவனே காட்ட, அந்தக் காட்சியும் காணப்பெறலாம் என்பர். இறையழகு காண்பது மெய்ம்மை காண்பதே என்பது குறிப்பு.

'கடவுளே உண்மை' என்பது வேதப்பொருள். 'உண்மையே கடவுள் என்று சத்திய சோதனை செய்து பார்ப்ப தற்கு, இந்த வாழ்க்கை ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது' என்பது காந்தியடிகள் கருத்து. இறைவனே காட்ட அந்த இறையழகை எங்கும் என்றும் மனங் கரைந்து காண்பதே 'மெய்ம்மை காண்பதாகும்' என்பது பேயாழ்வாரின் ஒரு பெருங் கொள்கை. அப்படிக் காண ஆசைப்படுவதே அந்தக் காட்சிக்கு இசைந்த வாய்ப்பையும் தரும் என்பது குறிப்பு.

கடவுள் உண்மையைப் பொய்கையார் வெளி யிடுவதுபோல் பேயாரும்,

உளன்கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன்; என்றும்
உளன்கண்டாய்; உள்ளுவார் உள்ளத்(து) - உளன்கண்டாய்

என்று, அவர் மொழிந்த பொருளேயன்றி அவர் மொழியையும் பொன்னேபோல் போற்றித் தமது கடவுள் உண்மைக் கொள்கையையும் வெளியிடுகிறார்.

கண்ணனுடைய வடிவழகை அல்லது மற்றெதையும் கண்கள் காணமாட்டா என்றார் பொய்கையார்.

மெய்ஞ்ஞானத் தால்உணர்வார்
காண்பரே

என்றும் அவரே கூறியுள்ளார். 'காண் என்னும் கண்' என்றும் கூறியுள்ளார். பேயாழ்வாரும்,

காண்காண் எனவிரும்பும்
கண்கள்!

என்று பாடுகிறார்.

பொய்கையார் தோன்றிய கச்சித் திருப்பதியை இறைவன் உகந்தருளும் தலங்களில் ஒன்றாகப் பேயாரும் குறிப்பிடுகிறார். 'நிறைந்த சீர் நீள்கச்சி' என்பது இவர் கண்ட

Koviloor Digital Library

காஞ்சி மாநகரம். காஞ்சியிலுள்ள, 'வெஃகா' என்ற சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சன்னிதியையும், 'வேளுக்கை' என்ற ஆளழகிய சிங்கப் பெருமாள் சன்னிதியையும் இவர் குறிப்பிடுகிறார்.

திருவேங்கடமலை திருவரங்கத்தைக் காட்டிலும் முதலாழ்வார்களை வசீகரித்தது. பரமபதத்தோடும் பாற்கட லோடும் திருவேங்கடத்தையும் சேர்த்துப் பேசுகிறார் பேயாழ் வார். 'ஏதேனும் ஒரு மலையைச் சொல்ல நினைத் தாலும் என் மகள் திருவேங்கடத்தையே பாடுகிறாள்' என்று அதிசயிக்கிறார்:

வெற்பென்று வேங்கடம்
பாடும்!

தாய் வார்த்தையாகப் பேயாழ்வார் பேசும் பாசுரம் இது. இவர் காதலியின் தன்மையை மேற்கொள்ள, அந்த நிலையைப் பெற்று வளர்த்த தாய் வெளியிடுவதாக இந்தப் பாசுரம் அமைந் திருக்கிறது. காதல் துறையில் பக்திக் காதலை விசேஷமாகத் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் வெளியிடுவதுண்டு. முதலாழ்வார்களில் பேயாழ்வாரே இப்படிக் காதல் துறையில் தமது நிலைமையை வெளியிடத் துணிகிறார்.

மேகத்தையும் மின்னலையும் பார்க்கும்போதும், அந்தி வானத்தின் வர்ண ஜாலங்களைப் பார்க்கும்போதும், திருமலையிலும் தன் உள்ளத்திலும் உள்ள அழகனின் வசீகர அழகு நினைவிற்கு வருகிறது:

எழில்கொண்டு, மின்னுக் கொடியெடுத்து வேகத்
தொழில்கொண்டு தான்முழங்கித் தோன்றும் - எழில்கொண்ட
நீர்மேகம் அன்ன நெடுமால் நிறம்போலக்
கார்வானம் காட்டும் கலந்து.

[எழில் - அழகு. மின்னுக்கொடி - மின்னற்கொடி. அன்ன - போன்ற.]

கலந்து மணியிமைக்கும் கண்ணா! நின்மேனி
மலர்ந்து மரகதமே காட்டும் - நலம்திகழும்
கொந்தின்வாய் வண்டறையும் தண்துழாய்க் கோமானை
அந்திவான் காட்டும் அது.

Koviloor Digital Library

[இமைக்கும் - பிரகாசிக்கும். நலம் - அழகு. கொந்தின் வாய் - பூங்கொத்திலிருந்து. அறையும் - சப்திக்கும். தண் - குளிர்ந்த.]

மின்னலோடு கூடிய மேகம் இவருடைய மனோ பாவத்தில் இறைவன் தன்னுடைய மலைபோன்ற திருமார்பிலே ரத்தின மாலை ஒன்றை அணிந்து கொண்டு உலாவத் தொடங்கியது போன்ற ஒரு காட்சியையும் காட்டுகிறதாம். மலையிலே மேகம் திரண்டிருப்பதையும், மின்னல்கள் சூழ்ந்து பளிச்சுப் பளிச்சென்று மின்னுவதையும் பார்க்கும் இந்தப் பக்தமணிக்கு, இறைவன், 'பெரிய வரைமார்வில் பேராரம் பூண்டு' திரிவதுபோலக் காட்சியளிக்கிறான்.

இப்படிக் கார் வானத்திலும் அந்திவானத்திலும் அணிகளுக்கு ஓர் எல்லையில்லாத அழகனைக் காண்பவர், 'நாம் வாழ்க்கைத் துன்பம் போதாதென்று தவத்தாலும் துன்பத்தாலும் தேடிக்கொண்டு இறைவனுடைய கோயிலாகிய உடம்பை ஹிம்ஸிப்பது தகாது' என்கிறார்.

இந்திரிய ஜயம் செய்வதற்கும் ஹிம்ஸை நெறி சரியன்று, அன்பு நெறியே சரியானது என்ற கொள்கையைப் பேயாழ்வாரும், பொய்கையார் பூதத்தார் கருத்துக்களைத் தழுவி வற்புறுத்துகிறார். அழகன் பணியும் அன்பர் பணியும் புரிவதே மெய்த் தவம்; உலகத்திற்கு உபகாரமாகிய இத்தகைய பணிகளிலே புலனடக்கமும் சித்தியாகும் என்பது குறிப்பு.

மூன்றாம் திருவந்தாதியின் 99-வது பாட்டில் இறைவனுடைய திருவடிகளே சரணம் என்று சொல்லிவிட்டு, அடுத்த செய்யுளாகிய இறுதிப் பாசுரத்தில் திருமாமகளின் திருவடிகளே சரணம் என்கிறார் பேயாழ்வார். நீரிலே நெருப்புத் தோன்றுமா? - அப்படித்தான் இறைவனது அருள் நிறைந்த திருவுள்ளத்திலே நம் குற்றங் கண்டு சீற்றம் பிறப்பதும்! அப்படிச் சீற்றம் பிறந்தால் பொறுப்பது பிராட்டிக்காகத்தான் என்பது ஸ்ரீ வைஷ்ணவம். இக்கொள்கையை இப்பிரபந்தத்தின் இறுதிப் பாசுரம் குறிப்பாக வற்புறுத்துகிறது.

லக்ஷ்மீ நாராயணமூர்த்தியின் அடி சேரப்பெற்றுக் கவலையின்றி வாழ்வதே வாழும் வகை என்பது இவர் சித்தாந்தம்.

★

Koviloor Digital Library

21. திருமாலும் சமரசமும்

'இன்கவிபாடும் பரமகவிகள்' என்று நம்மாழ்வாரும், 'செந்தமிழ் பாடுவார்' என்று திருமங்கையாழ்வாரும் முதுலாழ்வார்களையே சிறப்பித்துப் பேசுவதாகப் பெரியவாச்சான்பிள்ளை அபிப்பிராயப்படுகிறார். 'செஞ்சொற் கவிகள்' என்று நம்மாழ்வார் இவர்களையே குறிப்பிடுகிறார் என்று கருதுவதும் உண்டு. ஞானப் பெருமையுடன் கவித்வ சக்தி பெருமையும் இவர்களுக்கு உண்டல்லவா?

பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதிக்குப் பெரிய வாச்சான்பிள்ளை செய்திருக்கும் வியாக்கியான முன்னுரையில், *'**இன் கவிபாடும் பரமகவிகள், செந்தமிழ் பாடுவார்** என்னும் இவர்கள் அவதரித்தது ஒரோ தேசங்களிலேயாகிலும் ஞானப் பெருமையாலே இன்ன இடத்தவர் என்று நிச்சயிக்கப் போகாதிறே' என்று கூறியுள்ளார். இதன் பொருள் என்ன என்று பார்க்கலாம்.

★இது காஞ்சி மகாவித்வான் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் எடுத்துக் காட்டியிருக்கும் ஏட்டுப்பாடம்.

பொய்கையார் காஞ்சிபுரத்திலும் பூதத்தார் மாமல்லபுரத்திலும் பேயார் மயிலாப்பூரிலும் அவதரித்ததாகக் குருபரம்பரைகள் தெரிவிக்கின்றன அல்லவா? எனினும், இவர்களுடைய ஞானப் பெருமையை உற்றுப் பார்த்தால் இவர்களை இன்ன ஊர்க்காரர் என்று வரைந்து நிச்சயிக்க முடியாது என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

யாதும் ஊரே,
யாவரும் கேளிர்

[கேளிர் - உறவினர்.]

Koviloor Digital Library

என்ற விதமாக, 'உலகமே இவர்களுக்கு ஊர்; எல்லாரும் இவர்களுடைய ஊர்க்காரர்' என்றுதான் சொல்லத் தோன்றுகிறதாம்.

இன்னும் இந்த ஞானப் பெருமையைக் கூர்ந்து பார்த்து இவர்கள் பாடியிருக்கும் இன்கவிகள் வாயிலாக, - இவர்களுடைய 'செந்தமிழ்' வாயிலாக - இந்தப் 'பெருந்தமிழர் களி'ன் ஞானச் சுடர் முகத்தை உற்று நோக்கினால், இவர்களை நோக்கி,

வைகுந்த மோ, வைய மோ,நும்
நிலையிடமே?

-'ஐயன்மீர்! வைகுந்தமா, வையகமா உங்கள் இருப்பிடம்?' - என்று கேட்கத் தோன்றுகிறதாம்.

முதலாழ்வார்களும் நம்மைப்போல் இந்த உலகத்தில் சஞ்சரித்தார்கள் என்பது உண்மைதான்; ஆனால் அவர்களுடைய சஞ்சார ஸ்தலம் பூமியே ஒழிய, நிலையான விலாசம் (முகவரி) பரமபத ராஜ்யமாகத்தான் இருக்க வேண்டும் என்று சங்கை கொள்ளும்படி இருக்கிறதாம். ஸ்ரீ வைஷ்ணவ ஞான தீபத்தை முதல்முதல் ஏற்றி, அறியாமை இருளைப் போக்கிய அந்த மகிமையை, அந்த ஞானச் சிறப்பை நோக்கும்போது, இப்படியெல்லாம் எண்ணத் தோன்றுகிறது என்பர்.

இந்த ஆழ்வார்களின் பிறப்பும் வளர்ப்பும் இருளாகிய கருந்திரையால் மூடப்பட்டிருந்தபோதிலும், இவர்கள் ஓரிடத்தில் சந்தித்து உண்மை கண்டார்கள் என்பது மட்டும் தெளிவாக இருக்கிறது எனத் துணிந்து கூறலாம். மழையிலும் இருட்டிலும் ஓர் ஒடுக்கமான இடைகழியில் நெருங்கி நின்று ஞான விளக்கேற்றி இவர்கள்,

பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி
மலிந்து திருஇருந்த மார்வன்

என்று பேயாழ்வார் வருணித்திருக்கும் லக்ஷ்மீநாராயண

Koviloor Digital Library

மூர்த்தியைக் கண்டு கொண்டதாக வழங்கிவரும் குருபரம்பரைக் கதையிலேதான் எத்தகைய வசீகரமான உண்மை புதைந்து கிடக்கிறது!

'மழையும் காற்றும் மையிருட்டுமாக இருக்கும் வாழ்வு நெருக்கடியிலேயே இறை அருளையும் இறை ஒளியையும் கண்டுகொள்ளலாம்; கண்டுகொள்ள முயல வேண்டும்' என்பது ஒரு மகத்தான கொள்கையல்லவா? இவர்கள் கண்ட லக்ஷ்மீ நாராயணமூர்த்தி - 'மலிந்து திரு இருந்த மார்வன்' - ஸத்தியத்தின் இதயத்திலே அழகு இருக்கிறது, அருள் இருக்கிறது என்ற தனிப்பெருங் கொள்கைக்கு எத்தகைய வசீகரமான அறிகுறி! - எத்தகைய திவ்விய மங்கள வடிவம்!

இந்த உண்மையின் (ஸத்தியத்தின்) முழு உருவமும் ஒருவருக்கே உதயமாகிவிடவில்லையென்பதும், சம காலத்தவர்களான மூன்று பேரறிஞர்கள், இந்த உண்மையைத் தாம்தாம் அறிந்திருந்த ஒவ்வொரு கோணத்திலிருந்தும் ஆராய்ந்தவர்கள் என்பதும், கடைசியாக மூவரும் நெருங்கி அந்தரங்கமான பகவதநுபவங்களை ஒருவரோடொருவர் பங்கிட்டுப் பரவசராகி அந்தக் கருத்து நெருக்கத்திலே பேரொளிகண்டு, பேரருள் கண்டு, பாசுர மிட்டுச் சாந்தி பெற்றனர் என்பதும், இந்த ஆழ்வார்களின் பிரசித்திபெற்ற கதைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் திரண்ட பொருள்.

காலைக் கடற் காட்சியிலே சூரிய விளக்கைக் கொண்டு திருவடி கண்டு, சொல்மாலை சூட்டி, இடர்க் கடலை வற்றச் செய்துகொண்ட அநுபவத்தைக் கேட்டதும், பூதத்தாரின் உள்ளம், தம் சொந்த அநுபவங்களையும் நினைத்துப் பார்த்தவண்ணம் புற உலகத்திலிருந்து அக உலகத்திற்கு மெல்ல நழுவிப் போயிற்று. அங்கே இவர் ஏற்றிக்கொண்ட ஞானவிளக்கும் பொய்கையாரின் சூரிய விளக்கும் தம்முடைய சொந்த அநுபவங்களும் பேயாழ்வாருக்கு லக்ஷ்மீ நாராயணமூர்த்தியைக் காட்டிக்கொடுக்கின்றன.

Koviloor Digital Library

தமது பரந்த உள்ளத்தைப் பேயாழ்வார் இம்மூர்த்திக்கு உகப்பான திருவேங்கடம் குறித்துப் பாடியிருக்கும் ஒரு பாசுரத்திலே தெளிவாக்குகிறார்:

தாழ்சடையும் நீள்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்(கு)
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

[ஒண் மழு - ஒளியோடு கூடிய மழு. அரவு - பாம்பு. பொன்நாண் - அழகிய அரைநான்.]

சைவத்திற்கு மட்டுமா? - வேறு சமயங்களுக்கும் இந்த ஆழ்வாரின் ஸ்ரீ வைஷ்ணவத்தில் இடம் உண்டு.

இப்போதுள்ள சமயங்களுக்கு மட்டுமா? - இன்னம் தோன்றக் கூடிய புதிய புதிய சமயங்களுக்கும் இவர் தமது பாகவத சங்கப் பலகையிலே இடங் கொடுப்பவரைப்போல்,

நிறம்வெளிது, செய்து, பசிது, கரிதென்(று)
இறையுருவம் யாம்அறியோம் எண்ணில், - நிறைவுடைய
நாமங்கை தானும் நலம்புகழ வல்லளே
பூமங்கை கேள்வன் பொலிவு?

(வெளிது - வெளுத்திருக்கும். செய்து - சிவந்திருக்கும். பசிது - பசுமையாயிருக்கும். கரிது - கருமையாயிருக்கும். நா மங்கை - சரஸ்வதி. வல்லளே - வல்லவளோ? பூமங்கை கேள்வன் பொலிவு - லக்ஷ்மீ நாராயணமூர்த்தியின் முழு அழகையும்.)

என்று பாடுகிறார். இந்த அழகுச் சேர்த்தியிலே எல்லா நிறங்களுக்கும் இடமுண்டு; எல்லா இனங்களுக்கும் மதங்களுக்கும் இடமுண்டு.

'பேசுவார் எவ்வளவு பேசுவர், அவ்வளவே!' என்று 'பூமங்கை கேள்வன் பொலிவு' குறித்து இந்த ஆழ்வார் தமது உள்ளக் கருத்தை வெளியிடுகிறார். 'மகா ஞானிகள், மகா

Koviloor Digital Library

மேதாவிகள், மகாத்மாக்கள் ஆகிய இவர்களே இறைவன் பெருமையைப் பேச முடியும்; அற்ப அறிவுகொண்டு பேச முடியாது' என்றெல்லாம் சொல்லுகிறார்களல்லவா? அந்தக் கொள்கையைப் பேயாழ்வார் ஒப்புக்கொள்ளவில்லை.

எத்தகைய பெருங் கலைஞர்கள், மகான்கள் - ஆயிரம் வாய் படைத்த ஆதிசேஷர்களாயினும் - மா பாரதமாகப் பேசத் தொடங்கினாலும், இறைவனுடைய கல்யாண குணக் கடலிலே ஒரு திவலையைத்தான் எடுத்துக் காட்ட முடியுமா? எனினும் அன்பர்கள், 'தீதிலா மொழிகள் கொண்டு' சுருக்கமாகப் பேசினாலும், 'இறைவனுடைய கல்யாண குணம் இதில் அடங்கியிருக்கிறது!' என்று சொல்லும்படி ஆகிவிடுமாம் அந்தப் பேச்சு.

இறைவன் பெருமை ஓர் அற்புத மகா சமுத்திரம். ராட்சஸ மேதையையும் மூழ்கடித்துவிடும்; எனினும் சிறு குழந்தை நீந்தி விளையாடி நீராடவும் கூடும் என்பது பேயாழ்வார் சித்தாந்தத்தின் ஒரு சிறப்பியல்பு.

நிறைந்தது

KOVILOOR ANDAVAR
A. No. 26731
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library